www.padippakam.com

16-31 ஆகஸ்ட் 2001 ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்




## யு.டி.ஐ. மோசடி: யார் காரணம்?



## மனித உரிமைகள்: தமிழக போலீசின் உண்மை முகம்

படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## பிள்ளையையும் கிள்ளிவிட்டு...

மத்தியப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த 400-க்கும் அதிகமான சிறப்பு அதிரடிப் படையினர், கடந்த மார்ச் 28 அன்று பழங்குடியின மக்கள் வாழும் கடுகியா கிராமத்திற்குள் புகுந்து அம்மக்களின் அற்ப சொற்ப உடமைகளையும் சூறையாடிவிட்டுச் சென்றனர். இச்சூறையாடலைக் கண்டித்து ஏப்ரல் 2 அன்று பழங்குடியின மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் ம.பி. போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 4 பழங்குடியினர் கொல்லப்பட்டனர். இப்படுகொலையைக் கண்டித்து தேவாஸ் என்ற நகரில் ஆர்ப்பாட்டம் நடத்த வந்த பழங்குடியின மக்கள் துப்பாக்கி முனையில் மிரட்டப்பட்டுத் துரத்தப்பட்டனர். வனச் செல்வங்களைத் தனியார் முதலாளிகள் ஆக்கிரமித்து வருவதற்கு எதிராகவும், தங்களின் வாழ்வுரிமைக்காகவும் பழங்குடியின மக்கள் நடத்தி வரும் போராட்டம் இது. ம.பி. அரசோ, ஒருபுறம் போலீசை ஏவிவிட்டு கொலை வெறியாட்டம் போடுகிறது; மறுபுறமோ, இப்படுகொலை பற்றி 'உண்மை'களைக் கண்டறிய விசாரணை நாடகம் ஆடுகிறது!

## மூடி மறைக்கப்படும் இராணுவ ஊழல்கள்

இந்திய கப்பற் படையைச் சேர்ந்த போர்க் கப்பல்களுக்கு, ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பு போரில் பயன்படக்கூடிய மின்னணு போர்ச் சாதனங்கள் வாங்கியதில் ஊழலும், முறைகேடுகளும் நடந்திருப்பதாகக் குற்றச்சாட்டு எழுந்தது. இது பற்றி பொருளாதாரக் குற்றவியல் அதிகாரிகளும் விசாரணை நடத்தினர். இந்த விசாரணை முடிவு பற்றியும், ஊழலில் ஈடுபட்ட அதிகாரிகள் பற்றிய விவரங்களையும் நாடாளுமன்ற பொதுக் கணக்கு கமிட்டி கேட்டதற்கு, "தர முடியாது" என மறுத்துவிட்டது இராணுவ அமைச்சகம்; ஊழலுக்கு உடந்தையாக இருந்த அந்நிய நிறுவனங்களை கருப்புப் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்ற பொதுக் கணக்கு கமிட்டியின் உத்தரவையும் இராணுவம் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அடுத்தடுத்து அம்பலமாகும் இராணுவ ஊழல்களைப் பார்க்கும் பொழுது, எதிரி எல்லைக்கு அப்பால் இல்லை என்பது மட்டும் புரிகிறது.

## எதிர்க்கட்சிகள்... விற்பனைக்கு

ஜப்பானின் ஆளுங்கட்சி எடுத்த முக்கியமான முடிவுகளில் எதிர்க்கட்சிகள் மூக்கை நுழைத்து நோண்டுவதைத் தடுப்பதற்காக, 261 கோடி ரூபாய் வாய்க்கரிசியாகப் போடப்பட்டிருப்பதாக, அந்நாட்டின் நிதியமைச்சராக இருந்த ஷியோகாவா வெளிப்படையாக ஒப்புக் கொண்டுள்ளார். இந்தச் செலவு விவரம் எந்தக் கணக்கிலும் வராதாம். இந்தப் பணம், ஒரு கடித உறைக்கு 36 இலட்ச ரூபாய் எனப் போடப்பட்டு, ஜப்பானின் பிரதமர் வீட்டில் இரகசியமாகப் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்றிருப்பதுதான் ஜனநாயகத்தின் பலம் என்கிறார்கள். பலம் என்பதற்குப் பதிலாக பேரம் என்றிருந்தால் நாணயமாக இருந்திருக்கும்!

## அரண்டவனுக்கு இருண்டதெல்லாம் பயம்

ஆப்கானிஸ்தான், சீனா, பாகிஸ்தான், வங்காள தேசம், சிறீலங்கா ஆகிய நாடுகளில் இருந்து அழைக்கப்படும் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் சர்வதேசக் கருத்தரங்குகளை நடத்துவதற்கு முன் அனுமதி பெற வேண்டும் என இந்திய அரசின் உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது. "இந்த உத்தரவு அண்டை நாடுகளை நேசத்திற்குப் பதில் சந்தேகக் கண்ணோடு பார்க்கிறது; பேச்சுரிமையை மறுக்கிறது" எனக் குற்றஞ்சுமத்தி, இதற்கு எதிராக மனித உரிமை அமைப்புகள் வழக்குத் தொடுத்தன. ஆனால், உச்சநீதி மன்றமோ தேசப் பாதுகாப்பு என்ற பல்லவியைப் பாடி, அத்வானியின் உத்தரவுக்கு ஒத்து ஊதிவிட்டது.

## மனித உரிமை: அமெரிக்காவின் இரட்டை வேடம்

1950-களில் நடந்த கொரியப் போரின் பொழுது, அமெரிக்க இராணுவம் நடத்திய படுகொலைகள், மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்காக, அரசு சாராத விசாரணை மன்றமொன்று அமெரிக்காவில் இயங்கி வருகிறது. இம்மன்றம் நடத்தி வரும் விசாரணையில் கலந்து கொண்டு, உண்மையைத் தெரிவிக்க வடகொரியாவைச் சேர்ந்த 10 பேர் அமெரிக்க 'விசா'விற்கு விண்ணப்பித்திருந்தனர். ஆனால், அமெரிக்க அரசோ, அந்த 10 பேரும் தனது நாட்டில் நுழைய அனுமதி மறுத்துவிட்டது. கொசோவாவில் இனப் படுகொலை நடத்திய யூகோஸ்லாவியாவின் முன்னாள் அதிபர் மிலோசெவிச்சைக் கைது செய்து விசாரித்துவரும் சர்வதேச நீதிமன்றம், அமெரிக்காவின் இந்த அடாவடித்தனத்தைக் கண்டிக்கக் கூட இல்லை.

## உ.பி. தேர்தலும் இந்து மதவெறித் தாண்டவமும்

உ.பி. மாநில சட்டசபைத் தேர்தல் நெருங்குவதையொட்டி, அம்மாநிலத்தில் மீண்டும் முசுலீம்களைப் படுகொலை செய்யும் இந்து மதவெறித் தாண்டவமாடத் தொடங்கி விட்டது. ஜூலை 23 அன்று மொரதாபாத் நகரில் முசுலீம்கள் மீது இந்துமத வெறியர்கள் நடத்திய தாக்குதலில், குழந்தைகள், பெண்கள் உள்ளிட்டு 6 பேர் கொல்லப்பட்டுள்ளனர்; மேலும் 13 பேர் கவலைக்கிடமான நிலையில் உயிருக்குப் போராடிக் கொண்டுள்ளனர். இறந்துபோன பெண்கள் வன்புணர்ச்சிக்கு ஆளாகியிருக்கலாம் என்றும், இப்பாலியல் வன்முறையில் உ.பி. போலீசாரே ஈடுபட்டிருக்கலாம் என்றும் எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் ஒப்பாரி வைத்து விட்டு, தங்கள் 'கடமை'யை முடித்துக் கொண்டன. உ.பி. போலீசோ இப்படுகொலைகள் கொள்ளைக்காரர்களின் வேலையாக இருக்கும் எனக் கதை விட்டுக் கொண்டு திரிகிறது.

**ம.பி. அதிரடிப் போலீசால் பழங்குடியின மக்களின் குடிசைகள் பிய்த்தெறியப்பட்டு மொட்டையாக நிற்கும் கடைக்கால்கள்.**



www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

தொகுதி: 16

இதழ் 18-19

1 ஆகஸ்ட் — 31 ஆகஸ்ட் 2001

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

மின் அஞ்சல் முகவரி:
puthiyajananayagam@hotmail.com

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.

# ஆக்ரா உச்சி மாநாடு: தோல்வி ஏன்?

மிகுந்த எதிர்பார்ப்புடன் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தியா-பாகிஸ்தான் நாடுகளுக்கிடையிலான ஆக்ரா உச்சி மாநாடு தோல்வியில் முடிந்துள்ளது. மாநாட்டை ஒட்டி இரு நாட்டுத் தலைவர்களின் கூட்டறிக்கை வெளியிட முடியாமல் முட்டுக்கட்டை ஏற்பட்ட போதிலும், ''ஆக்ரா மாநாடு தனது நோக்கத்தில் இன்னும் நிறைவடையவில்லை; அதேசமயம் தோல்வியடையவுமில்லை; மீண்டும் பேச்சு வார்த்தைகளைத் தொடருவோம்'' என்று இரு நாடுகளும் அறிவித்துள்ளன. இருப்பினும் இந்தத் தோல்விக்குக் காரணம் யார் என்பதும், யாருக்குத் தோல்வி ஏற்பட்டுள்ளது என்பதும்தான் முக்கியமானது.

''கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக இரு நாடுகளுக்கிடையே பகைமைக்கும் பதற்ற நிலைக்கும் காரணமாக இருப்பது காசுமீர் விவகாரம். எனவே அமைதிப் பேச்சு வார்த்தைக்கு முயற்சித்தல், காசுமீர் பிரச்சினை என்பது விவாதித்து தீர்வு காணப்பட வேண்டிய விவகாரம் என்பதை இரு நாடுகளும் அங்கீகரித்தல்'' என்பதே பாக். அதிபர் முஷாரப்பின் நோக்கமாக இருந்தது. இதை அவர் வெளிப்படையாகவே அறிவித்தார்.

ஆனால், காசுமீர் விவகாரத்தில் விட்டுக் கொடுக்கவே மாட்டோம்; எல்லைக்கு அப்பாலிலிருந்து பாக். தூண்டிவிடும் பயங்கரவாதத்தை நிறுத்தாதவரை காசுமீர் பற்றி எதுவுமே பேச முடியாது; இரு நாடுகளின் உறவுக்குக் காசுமீரைப் பணயமாக்கக் கூடாது; சமாதானப் பேச்சு வார்த்தைக்கு அழைப்பதால், காசுமீரில் தீவிரவாதத்தை ஒடுக்கும் ஆற்றல் எங்களுக்கு இல்லை என்று கருதிவிட வேண்டாம் என்று பிடிவாதமாக நடந்து கொண்டு, காசுமீர் விவகாரத்தில் இரு நாடுகளுக்கிடையே உடன்பாடு ஏற்படாமல் முட்டுக்கட்டை போட்டதே இந்திய ஆட்சியாளர்கள்தான்!

காசுமீரில் அறிவிக்கப்படாத போர் தொடுத்தும் அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டும்கூட அடுத்தடுத்து பல தோல்விகளையும் இழப்புகளையும் இந்தியா சந்தித்து வருகிறது. அதேசமயம் இந்தியாவின் அரசு பயங்கரவாதமும் மனித உரிமை மீறல்களும் உலக அரங்கில் அம்பலப்பட்டுப் போயுள்ளது. 'பாக். வசமுள்ள காசுமீரை மீட்பதே தமது லட்சியம்; பாக்.குடனோ, பயங்கரவாதிகளுடனோ பேச்சு வார்த்தையே கிடையாது; அரசியல் சட்டப்பிரிவு 370-ஐ ரத்து செய்வோம்'' என்றெல்லாம் வீராப்பு பேசிய ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பலின் கொள்கை-திட்டங்கள் எல்லாம் படுதோல்வி அடைந்து விட்டன. இந்தியா-பாக். தவிர மூன்றாவது தரப்பு எதுவும் தலையிடக்கூடாது என்று கூறிவந்த இந்துவெறி ஆட்சியாளர்கள், இப்போது வெளிப்படையாகவே அமெரிக்காவின் நிர்ப்பந்தங்களுக்குப் பணிந்து அதன் மறைமுகத் தலையீட்டையும் ஏற்றுக் கொண்டு விட்டனர். ஆனாலும் தனது தரப்பில் இறங்கிவராமல், காசுமீர் பற்றியே பேசக் கூடாது என்று வறட்டுப் பிடிவாதம் காட்டுவதென்றால், அப்புறம் எதற்காக இந்தியா பேச்சு வார்த்தை நடத்த வேண்டும்?

இந்தியாவைப் போலவே, தாழ்நிலைப் போரின் மூலம் காசுமீர் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாமல் தோல்வியும், உள்நாட்டுப் பொருளாதார நெருக்கடியும் அமெரிக்காவின் நிர்ப்பந்தம் காரணமாகவும், இராணுவ சர்வாதிகாரியான தனக்கு மக்களிடம் ஆதரவு திரட்டிக் கொள்ள வேண்டிய அவசியமும்தான், பாக். அதிபர் முஷாரப்பைப் பேச்சு வார்த்தைக்குத் தள்ளியுள்ளது.

பாகிஸ்தானின் நிலையைப் பரிசீலிக்கக் கூட முன்வராமல் அலட்சியப்படுத்திய இந்திய ஆட்சியாளர்கள், பாக். தூதரகத்தில் ஹுரியத் அமைப்பிலுள்ள கட்சிகள் - குழுக்களுக்கு முஷாரப் தேநீர் விருந்து அளித்ததை முக்கிய பிரச்சினையாக்கிக் கூச்சல் போட்டனர். காந்தகார் விமானக் கடத்தல்காரர்களுக்குத் தஞ்சமளித்தது, பாக். சிறையிலுள்ள இந்திய சிப்பாய்களை விடுவிப்பது முதலான இரண்டாம் பட்ச விவகாரங்களையே முதன்மைப்படுத்தினர். போக்குவரத்து, வர்த்தகம், தொலைத்தொடர்பு முதலான 8 அம்சங்களில் தற்போதைய பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டுள்ள போதிலும், பாக். அதிபர் காசுமீர் விவகாரத்தை மட்டுமே ஒரேயொரு நிகழ்ச்சி நிரலாகக் கொண்டு பிடிவாதம் காட்டினார் என்று கூசாமல் புளுகி வருகின்றனர்.

இரு நாடுகளாலும் கடித்துக் குதறப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காசுமீரின் கட்சிகள், குழுக்களின் பிரதிநிதிகளைக் கூட கலந்தாலோசிக்காமல், ஒருதரப்பான கட்டைப் பஞ்சாயத்து தீர்வு காணவே பா.ஜ.க. முயற்சிக்கிறது. பா.ஜ.க. கூட்டணியிலுள்ள பரூக் அப்துல்லா கோரும், மைய அரசின் அதிகாரத்துக்குட்பட்ட மாநில சுயாட்சி உரிமையைக் கூட கொடுக்க மறுக்கிறது.

காசுமீரைப் பாகிஸ்தானுடன் இணைக்கவேண்டும் என்கிற பாக்.கின் கோரிக்கையை ஏற்காவிடினும், காசுமீர் மக்களின் கருத்தறிய பொது வாக்கெடுப்பு நடத்தலாம் என்கிற பாக்.கின் தீர்வு சரியானதென உலக நாடுகள் ஏற்கின்றன. ஆனால் இத்தீர்வை ஏற்க மறுக்கும் இந்தியா, எல்லை கடந்த பயங்கரவாதம்தான் ஒரே பிரச்சினை; அதை நிறுத்துவதுதான் ஒரே தீர்வு என்கிறது. இந்த நிலை உலகநாடுகள் எதனாலும் ஏற்கக் கூடியதாக இல்லை. இதனால் உலக அரங்கில் காசுமீர் விவகாரத்தில் பாக்.கின் நிலை வலுவானதாகவும், இந்தியாவின் நிலை பலவீனமாகவும் உள்ளது. இந்திய அரசும், அரசு தந்திரத் துறை அதிகாரிகளும் இந்திய செய்தி ஊடகங்களும் எவ்வளவுதான் முயன்றாலும் இந்த உண்மையை மறைக்க முடியாது. ஆக்ரா உச்சிமாநாடு இந்தியாவைப் பொருத்தவரை பெருந்தோல்வியாக முடிந்ததற்கான காரணம் இதுவே.

படிப்பகம்

www.padippakam.com

# மனித உரிமைகள்

# தமிழக போலீசின் உண்மை முகம்

"கள்ளும் சாராயமும் கலந்து குடித்தால் கலெக்டர் மசுருக்குச் சமம்'' என்று போதையின் வீரியத்தைச் சொல்வதுண்டு. ஜெயா-சசி கும்பல் போன்ற அரசியல் கிரிமினல்களும் முத்துக்கருப்பன் - முகமது அலி - தேவாரம் போன்ற போலீசு ரௌடிகளும் கைகோர்த்துக் கொண்டால் மனிதர்கள் கால் தூசுக்குச் சமம் என்று அதிகாரபோதையின் வீரியத்தைச் சொல்லலாம்.

சாதாரணமாக ஒரு பாசிசக் கொடுங்கோன்மை அரசின் கீழ் நடக்கும் இரகசியக் கைக்கூலிப் படையின் வக்கிரச் செயல்கள், இன்றைய நாடாளுமன்ற - சட்டமன்ற ஜனநாயக அரசமைப்பு முறையிலேயே சட்டபூர்வமான போலீசு படை செய்வதைக் காண்கிறோம்.

பேராசையும் - பாசிச வக்கிரமும் பிடித்த ஜெயா-சசி கும்பலின் தேர்தல் வெற்றிச் செய்தி வந்த நாளில் இருந்தே போலீசின் வெறியாட்டம் புது வேகம் பெற்று, தி.மு.க. தலைவர் கருணாநிதி, மத்திய மந்திரிகள் மாறன், பாலுவின் கைதை ஒட்டி உச்சகட்டத்தை அடைந்தது.

முன்னாள் முதல்வர் கருணாநிதியைக் கதறக் கதற இழுத்துச் செல்வதில் இருந்து ஸ்டாலினுடைய நண்பர் ரமேஷின் 11 மாதக் குழந்தையின் பூவுடலைச் சுடுகாட்டுக்கு வாரிச் செல்வது வரையிலான காட்சிகளைக் கண்ட, அரசியல் ஈடுபாடுள்ள நடுத்தர வர்க்கத்தினர் பதறிப் போனார்கள். "இவர்களுக்கே இந்தக் கதி என்றால், ஆள் பலம், அதிகார பலம், அரசியல்பலம், பணபலம் ஏதும் இல்லாத சாதாரண - சாமானியர்களான எங்கள் நிலை என்ன? இந்த நாட்டில் எங்களுக்கு ஏதாவது பாதுகாப்பு இருக்கிறதா?'' என்ற கேள்வியை வெவ்வேறு விதமாக எழுப்புகின்றனர்.

''ஐயோ!... ஐயோ!.. கொலை பண்றாங்க! கொலை பண்றாங்க!'' என்று கருணாநிதி எழுப்பிய அபயக் குரலுக்கு கண்ணனைப் போல, இராமனைப் போல, வாஜ்பாயி - அத்வானி பரிவாரங்கள் பாதுகாப்புக் கொடுக்க வந்துவிட்டார்கள். ஆனால், ''எங்கள் கதி என்னாவது?'' என்று பல்வேறு செய்தி ஊடகங்கள் மூலம் நடுத்தர வர்க்கத்தினர் எழுப்பிய கேள்விக்கு அவர்களிடமிருந்து இன்னும் பதில் கிடைக்கவில்லை.

ஆனால், போலீசு தரப்பில் இருந்து இந்தக் கேள்விக்கு திரும்பத் திரும்ப, தினந்தோறும் பதில் சொல்லப்படுகிறது. இருட்டுவதற்கு முன்பே இரும்புக் கதவுகளையும், காற்றுப் புகாது சன்னல்களையும் இழுத்துப் பூட்டிக் கொண்டு, தொலைக்காட்சிப் பேட்டிகள் மூலமாக மட்டுமே வெளி உலகைக் காணும் நடுத்தர மக்கள்தான் போலீசு தரப்புப் பதிலைக் கேட்க மறுக்கின்றனர்.

கருணாநிதி கைதின்போது, போலீசு அதிகாரிகள் உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டும் உத்திரவுகளைப் பின்பற்றவில்லை. நள்ளிரவில் பூட்டை உடைத்துக் கொண்டு புகுந்த போலீசு தொலைபேசி இணைப்புகளைத் துண்டித்தது; நேரே படுக்கை அறைக்குள் அநாகரிகமாகப் புகுந்தது.

கைதுக்கான காரணமும் சொல்லவில்லை. வாரண்டும் இல்லை. வீட்டுப் பெண்களை அசிங்கமாகத் திட்டினார்கள். கையைப் பிடித்து இழுத்தார்கள், கருணாநிதியிடம் முரட்டுத்தனமாக நடந்து கொண்டார்கள். பிடித்துக் கீழே தள்ளினார்கள். மாடிப்படிகளில் தரதரவென இழுத்து வந்தார்கள். நெஞ்சோடு சேர்த்து இறுக்கி கை, விலாக்களில் உள்காயம் ஏற்படுத்தினார்கள்.

மாறனைக் குண்டுக் கட்டாகத் தூக்கி வீசினார்கள்; இதய இரத்த ஓட்டத்தை விரைவுபடுத்தும் கருவி பொருத்தப்பட்டுள்ள இடத்தில் இடித்துத் தள்ளினார்கள். நாற்காலியை வீசிக் காலில் அடித்தார்கள். வேட்டி-சட்டையைக் கிழித்து, கண்ணாடியை உடைத்து, உள்ளாடையோடு அலைய விட்டார்கள்.

கருணாநிதியை காரில் ஏற்றிக் கொண்டு, சி.பி.சி.ஐ.டி அலுவலகம், நீதிபதி வீடு, வேப்பேரி காவல்நிலையம், மீண்டும் நீதிபதி வீடு என இரவு முழுவதும் அலைக்கழித்தார்கள். அங்கெல்லாம் கருணாநிதியைக் காணச் சென்ற கருணாநிதி உறவினர்களை விரட்டினார்கள். அவர் மகள் கனிமொழியை ஆபாசமாக ஏசினார்கள். கனிமொழியை உள்ளே இழுத்துச் சென்ற போலீசு அதிகாரி ஏதோ செய்துவிட, அலறிக் கொண்டும் விம்மிக் கொண்டும் வெளியே ஓடி வந்தார் அவர். இதுபோன்ற மனித உரிமை மீறல்களும், போலீசு அக்கிரமங்களும் மாறன், ஸ்டாலின் வீடுகளிலும் நடந்தன. அன்று செய்தி சேகரிக்கச் சென்ற பத்திரிகையாளர்களில் பலர் மீண்டும் மீண்டும் தாக்கப்பட்டனர்.

சாமானிய மக்கள் கைது செய்யப்படும் விவகாரங்களில், இம்மாதிரியான போலீசு அக்கிரமங்களும், அத்துமீறல்களும் இல்லாதவை என்று எதையாவது கூற முடியுமா? வாரண்டோ, சம்மனோ வைத்துக் கொண்டுதான் போலீசு கைதுகள் நடக்கின்றனவா? சமையல் அறை, வரவேற்பு அறை, படுக்கை அறை என்று வகைவகையாக அறைகள் ஏதுமில்லாத ஒற்றை அறைக்குள் வாழும் குடும்பங்கள் மீது போலீசு மிருகங்கள் குறி வைக்கும்போது எப்படிப் பாய்கிறது என்பது தெரியுமா?

**போதைப் பொருள் வைத்திருந்தாகப் பொய் வழக்குகள் போட்டே ''கஞ்சாக் கருப்பன்'' எனப் பெயரெடுத்த மாநகர ஆணையாளர் முத்துக்கருப்பன்.**



''அன்னிக்கு நடு ராத்திரி தொடங்கி, பொழுது விடியறதுக்குள் போலீசு நடந்து கொண்ட விதத்தை எல்லாம் பார்க்கும்போது, ஒரு கைதுன்னா இவ்வளவு கோரமாக் கூட இருக்குமானு அதிர்ந்து போனேன்'' என்கிறார் கருணாநிதியின் மகள் கனிமொழி.

''இப்படிப்பட்ட அவமானச் செயல்களெல்லாம்கூட நடக்குமா? வேதனையாகவும் திகைப்பாகவும் இருக்கிறது'' என்கிறார், தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தூதுவர் பெர்னாண்டஸ்.

அம்மா கனிமொழி! ஐயா பெர்னாண்டஸ்! சிதம்பரம் பத்மி

படிப்பகம்

www.padippakam.com



''மனித உரிமை மீறல்தான் பிரபலமாவதற்கான குறுக்குவழி'' என்று தேவாரத்திடம் பாடம் கற்ற அவரது சீடர் முகம்மது அலி.

னியைக் கேளுங்கள்; கைது என்றால் எவ்வளவு கோரமானது, எவ்வளவு கொடுமையானது, எப்படிப்பட்ட அவமானங்களைச் சந்திக்க வேண்டும் என்பது தெரியும்.

கணவனையோ, சகோதரனையோ, தந்தையையோ தேடி வரும் போலீசு நாய்கள் வீட்டிலிருக்கும் மனைவியையோ, மகளையோ, சகோதரியையோ இழுத்துக் கொண்டு போய் காவல் நிலையத்திலேயே வைத்து கும்பலாய்ப் பாய்ந்து, அடித்துக் குதறிச் சின்னாபின்னப்படுத்துகிறார்கள். ஆண்கள் என்றால் வக்கிரமான முறைகளில் சித்திரவதை செய்து கொன்று, தெருவில் வீசி எறிகிறார்கள். இந்தக் குற்றங்களைநியாயப்படுத்துவதற்காக போலீசு சொல்லும் காரணம் வெந்தப் புண்ணில் வேல் பாய்ச்சுவதாகவும் உள்ளது. ''அத்தனை காவலையும் மீறித் தப்பி ஓடிய கைதி கீழே விழுந்து மாண்டான்;'' போலீசு மீது பாலியல் வன்முறை புகார் கூறும் பெண்ணை விபச்சாரி என்று கதை விடுவதோடு, இதற்கெல்லாம் சாட்சியாக கிரிமினல்களையும் தொழில்முறை விபச்சாரிகளையுமே ஏற்பாடு செய்கின்றனர்.

நள்ளிரவில் கைது செய்யப்பட்ட கருணாநிதியாவது விடிவதற்குள் நீதிபதி முன்நிறுத்தப்பட்டார்; அவரைத் தேடி உறவினரும் பத்திரிகையாளர்களும் பின் தொடர்ந்து கொண்டே இருந்தனர்; இதன்மூலம் போலீசின் கரங்களில் பிடிபட்ட கருணாநிதியின் நிலையை அவர்கள் அறிய முடிந்தது. ஆனால், சந்தேகத்தின் பேரால் இழுத்துச் செல்லப்படும் அப்பாவிகளின் நிலை என்னவாகிறது தெரியுமா? பல நாட்கள் ஆகியும் நீதிபதி முன்பு நிறுத்தப்படுவதே இல்லை. ஆளைத்தேடி காவல்நிலையம், காவல் நிலையமாக உறவினர்கள் அலறிக் கொண்டு அலைகின்றனர்; காவல்நிலையங்கள் மட்டுமல்ல, சந்தேகத்திற்குரிய நபர்களை பல நாட்கள் மறைத்து வைத்துச் சித்திரவதை செய்வதற்கென்றே அரசு பயணியர் மாளிகைகள் வதைக்கூடங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இப்படி போலீசு பிடித்துக் கொண்டு போன பலர் திரும்புவதே கிடையாது. மிகவும் வேண்டிய உறவினர்கள், ''ஆட்கொணர்வு'' வழக்குப் போடுவதும் இதனால்தான் வந்தது. ''இதோ இன்று காலைதான் பிடித்தோம்'' எனச் சிலரை நீதி மன்றங்களில் நிறுத்துவதும், ''எங்களுக்குத் தெரியாது'' என்று கூறி பலருடைய வழக்குகளில் கைவிரிப்பதும் போலீசின் வழக்கமாகிவிட்டது.

''ஒரு நாயைக் கொல்வதானால் அதற்கு வெறிநாய் என்று முத்திரை குத்திச் சுட்டுக் கொன்று விடலாம். அப்புறம் கேட்பதற்கு நாதி இல்லாமல் போய்விடும்'' என்பார்கள். அதைப்போல, ''தீவிரவாதி'', ''நக்சல்பாரி'' என்று முத்திரை குத்திவிட்டால் போதும், கேள்விமுறையின்றி சுட்டுக் கொன்று விடலாம்; அல்லது ''போலீசுடன் மோதல்'' என்று கதைகட்டி விடலாம் என்பது போலீசின் வழக்கமாகி விட்டது.

கருணாநிதி மற்றும் அவரது சகாக்களின் கைது சம்பவத்தில் மனித உரிமை மீறப்பட்டிருக்கிறது; ஜனநாயக உரிமை பறிக்கப்பட்டிருக்கிறது; பத்திரிகை சுதந்திரம் நசுக்கப்பட்டிருக்கிறது என்ற கதறல் புதுடில்லியில் உள்ள பல தலைவர்களைத் தூங்க முடியாமற் செய்கிறது. ஜெயலலிதாவின் அரசியல் பழி வாங்கும் உத்திரவுகள் தான் இதற்கெல்லாம் காரணம் என்கிறார்கள் கருணாநிதியின் அனுதாபிகள். கருணாநிதி ஆட்சியில் மட்டும் மனித உரிமை, ஜனநாயக உரிமை, பத்திரிகைச் சுதந்திரம் ஆகியவை மதிக்கப்பட்டனவா என்று கேட்கிறார்கள் ஜெயலலிதா அனுதாபிகளும் கருணாநிதி வெறுப்பாளர்களும்.

திராவிடக் கட்சிகளின் பழிவாங்கும் அரசியலுக்காக தமிழகப் போலீசும் நிர்வாகமும் பலியிடப்படுகிறது என்று இங்குள்ள பார்ப்பன அறிவு ஜீவிகள் மூலம் மட்டுமே தமிழக அரசியல் நிலைமைகள் பற்றிப் புரிந்து கொண்டுள்ள பிற மாநிலச் செய்தி ஊடகங்கள் கூறுகின்றன.

இவையெல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டு ஓர் உண்மை இருக்கிறது. ஜெயலலிதாவோ, கருணாநிதியோ, திராவிடக் கட்சிகளோ தேசியக் கட்சிகளோ யார் ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், போலீசு தனது இயல்பிலேயே மனித உரிமை, ஜனநாயக உரிமை, பத்திரிகைச் சுதந்திரம் ஆகியவற்றை ஒருபோதும் மதித்து நடக்கக் கூடியதல்ல.

அதுமட்டுமல்ல; அது நீதி மன்றத்தின் தீர்ப்புகள், உத்திரவுகளையும் மதிப்பதில்லை; ஏன், போலீசுக்கு அனைத்து அதிகாரங்களையும் வழங்கும் சட்டத்தையே மதிப்பது கிடையாது. இவ்வளவு ஏன், அது தெரிந்தே சட்டவிரோதச் செயல்களைச் செய்யக் கூடியது. அதனால் யாராவது சட்ட உரிமைகளையோ சட்ட சரத்துக்களையோ பேச முற்பட்டால், ''என்னிடமே சட்டம் பேசுகிறாயா?'' என்று கூச்சலிட்டு போலீசார் அவர்களைத் தாக்குகிறார்கள். சட்டத்தின் மீது போலீசுக்கு அவ்வளவு வெறுப்பு போலும்!

சட்டம் என்பது நீதி-நியாயத்தை நிலைநாட்டுவதற்கான வழிகாட்டி என்று போலீசு நம்புவதில்லை. தான் எதிரி என்று எண்ணும் எவர் மீதும் ஏவிவிடும் இன்னொரு ஆயுதம்; போலீசிடம் இருக்கும் கைத்தடி - துப்பாக்கி - கண்ணீர்புகை குண்டுகளைப் போன்று சட்டமும் இன்னொரு ஆயுதம். பல்வேறு சட்டப்பிரிவுகளைப் போட்டுத்தானே, தான் எதிரி என்று கருதும் அப்பாவிகளைச் சிறையிலடைத்துத் தாக்குதல் நடத்துகின்றனர்.

ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த சில மாதங்களிலேயே பொய் வழக்கு போடுவதில் சாதனை அளவை எட்டிவிட்டார்கள் தமிழகப் போலீசார் என்பது உண்மைதான். எதிர்த்தரப்பு சட்டமன்ற உறுப்பினர்கள் பரிதி இளம்வழுதி, ரங்கநாதன், முன்னாள் எம்.பி. பரசுராமன், முன்னாள் மந்திரி பொன்முடி, இன்னும் உள்ளூராளவில் பல ஆயிரம் தி.மு.க. அணியினர் மீது பொய் வழக்குகள் போடப்பட்டுள்ளன. இவற்றுக்கெல்லாம் தலையாயதாக கருணாநிதி மற்றும் பிறர் மீது இரண்டு பொய் வழக்குப் போடப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. ஒன்று சிறையிலுள்ள இசுலாமியத் தீவிரவாதிகளைத் தாக்கும் சதி வழக்கு; மற்றது, சென்னை மேம்பால ஊழல் வழக்கு.

ஜெயலலிதா ஆட்சியில் மட்டுமல்ல; பொய் வழக்குகள் போடுவது போலீசுக்கு தண்ணீர் குடிப்பதை போலப் பழகிப் போனது. யாரையாவது மிரட்டுவது என்றாலே, ''ஏதாவது கேஸ் போட்டு உள்ளே தள்ளிருவேன், ஜாக்கிரதை!'' என்று எச்சரிப்பது சர்வசாதாரணமானது. ஒருவரைப் பழி வாங்குவது என்றாலோ, பணம் பிடுங்குவது, என்றாலோ, பொய் வழக்குகள் போடுவது என்றாகிவிட்டது.

அதிலும் சாதாரண வழக்குகள் அல்ல. கொலை வழக்கு, கொலை முயற்சி வழக்கு, குண்டர் தடுப்புச் சட்டம், அரசைக்


படிப்பகம்

www.padippakam.com

கவிழ்க்கும் சதி வழக்கு, போதை மருந்து வழக்கு, தேசியப் பாதுகாப்புச் சட்டம், பழைய ''தடா'', புதிய ''தடா'' வழக்குகள் என்று சாதாரணமாகப் பிணையில் வர முடியாத கொடிய வழக்குகள்.

அரசைக் கவிழ்க்கும் சதி வழக்கு, பழைய - புதிய ''தடா'', தே.பா.ச போன்றவை எவ்வளவு முக்கியமானவை என்பதோடு, அவ்வளவு அவசரமானவை, என்கின்றனர் ஆட்சியாளர்கள். ஆனால், ஆயிரக்கணக்கானவர் மீது இந்த வழக்குகள் புனையப்பட்டுள்ள போதும், இந்த வழக்குகள் எவற்றிலும் போலீசார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாமலேயே இருக்கின்றனர். விசாரிப்பதும் தண்டிப்பதும் பற்றி போலீசாருக்குத் துளியும் அக்கறை கிடையாது. இதிலிருந்து இந்தச் சட்டங்கள் வலியுறுத்தும் அளவுக்கு அவசர, அவசியம் எதுவுமே வழக்குகளை நடத்துவதில் கிடையாது; எதிராளிகளை மிரட்டவும், பிணையில் வெளிவர முடியாதவாறு ஒடுக்கி வைக்கவுமே பொய் வழக்குகள் என்பது அப்பட்டமாகவே தெரிகிறது.

இன்னொரு காரணத்துக்காகவும் போலீசார் பொய் வழக்குகள் போடுகின்றனர். பல கொலை வழக்குகளில் சிக்கியுள்ள போலீசின் கூட்டாளிகளான கிரிமினல் ரௌடிகள் மீது அந்த வழக்குகள் நடந்தால் ஆயுள் தண்டனையோ மரண தண்டனையோ கிட்டும் என்பதால், குண்டர் சட்டம் என்கிற தடுப்புக் காவல் வழக்குப் போட்டுச் சிறையிலடைத்துக் காப்பாற்றுகின்றனர். இதேபோல கூடுதலான தண்டனைகளைத் தவிர்ப்பதற்குச் சாராயம் காய்ச்சுபவர் - விற்பவர் மீது குடித்ததாக மட்டும் வழக்கு போடுவது; மாமூல் கொடுத்து தொடர்ந்து சாராயம்-போதை மருந்து, விபச்சாரத் தொழில் நடத்துபவர்கள், கணக்குக் காட்டுவதற்காக வாரம், மாதம் ஒரு வழக்கு போட்டுக் கொள்வதற்கு அனுமதிப்பது - இப்படி எவ்வளவோ நடக்கிறது. குற்றவாளிகள் திருந்தி வாழ விரும்பும்போது தமது மாமூல் வசூல் குறையும் என்பதால் துன்புறுத்திக் குற்றங்கள் புரியும்படி நிர்ப்பந்திப்பதற்காகப் புதுப்புது பொய் வழக்குகள் போடுவதுண்டு.

இப்படிப் பொய் வழக்குகள் போடுவதில் கை தேர்ந்தவர் என்று தற்போதைய சென்னை மாநகர ஆணையாளர் முத்துக் கருப்பன் பெயர் பெற்றுள்ளார். முன்பு வட சென்னையில் துணை ஆணையராக இருந்தபோது ரௌடிகளை ஒழிப்பதாகச் சொல்லிக் கொண்டு மானாவாரியாகப் பலர் மீது போதை மருந்து வழக்குகள் போட்டிருக்கிறார். கஞ்சா, ஹெராயின் போன்ற வழக்குகள் பிணையில் வர முடியாதவை; 5,10 ஆண்டு சிறை நிச்சயம். இப்படிப் போதை மருந்து பொய் வழக்குப் போடுவதில் புகழ் பெற்று, ''கஞ்சா கருப்பன்'' என்ற பட்டப் பெயரும் பெற்றிருக்கிறார்.

இவருடைய பொய் வழக்கு சாதனைகளையும் திறமையையும் பாராட்டும் வகையில்தான் தேவாரத்தின் பரிந்துரையின் பேரில் சென்னை மாநகர ஆணையராகப் பதவி உயர்வு பெற்றிருக்கிறார். ''கஞ்சாக் கருப்பன்'' என்ற பெயருக்குப் பொருத்தமாக அவர் பதவியேற்றதும் ஜெயலலிதாவின் முன்னாள் கூட்டாளிகளுடனான பணப்பதுக்கல் விவகாரத்தில் அடுத்தடுத்து போதை மருந்து வழக்குகள் புனையப்பட்டுள்ளன.

பரிதி இளம்வழுதி, ஸ்டாலின் நண்பர் ரமேஷ் மற்றும் ஜெயாவின் முன்னாள் கூட்டாளிகள் மீதான பொய் வழக்குகள் ஜெயா-முத்துக்கருப்பன் கும்பலுக்கு எதிரான விபரீதத் திருப்பங்களை எட்டியுள்ளன.

கடந்த சட்டமன்றத் தேர்தல் நாளன்று கிரிமினல் அரசியல்வாதியும் ஜெயாவின் கைக்கூலியுமான ஜான்பாண்டியன், பரிதியின் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தினார். ஆனால், பரிதியின் மீதே கொலை முயற்சி வழக்குப் போட்டுச் சிறையிலடைத்தது போலீசு. அவர் சிறையிலிருந்தபோது ஜாமீன் பெற்றதும், அதற்கு எதிராக உயர்நீதி மன்றத்தில் மனுப்போட்ட முத்துக்கருப்பன், அவர் போலீசு காவலில் இருப்பதால் புதிய வழக்கில் விசாரணை செய்வதற்காக ஜாமீனை ரத்து செய்யக்கோரி உத்தரவும் பெற்றார். ஆனால், இப்போது உயர்நீதி மன்றத்திடம் பொய்யான தகவல் தந்தது நிரூபிக்கப்பட்டு, மன்னிப்புக் கோரி மன்றாடுகிறார் முத்துக்கருப்பன்.

1996-ஆம் ஆண்டு ஊழல் வழக்குகளில் சிக்கி ஜெயலலிதா சிறையிலடைக்கப்பட்டபோது, பல கோடி ரூபாய் ரொக்கமும், தங்க-வைர நகைகளும், அப்போதைய அவரது வளர்ப்பு மகன் சுதாகரன் மூலம் பதுக்கப்பட்டது. இப்போது ஜெயா-சசி கும்பல் மீண்டும் ஆட்சிக்கு வந்தபிறகு அவற்றைத் திருப்பித் தர சுதாகரன் மறுப்பதால், சுதாகரன் மீது கொலைமுயற்சி முதலிய பொய் வழக்குகள் போடப்பட்டன. அதற்கும் அவர் பணிய மறுக்கவே சுதாகரன் மீதும், பணப் பதுக்கலில் அவரது கூட்டாளிகள் எனக் கருதப்படும் தோட்டம் பாஸ்கரன், சலாவுதீன்-மொய்னுதீன் சகோதரர்கள் ஆகியோர் மீதும் ''ஹெராயின்'' போதை மருந்து வழக்குகள் போட்டுள்ளார், முத்துக் கருப்பன். அந்த வழக்கில் தலைமறைவாக இருக்கும் சலாவுதீன் ஜெயலலிதாவின் செயலர்களாக உள்ள இரு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மற்றும் போலீசு அதிகாரியுடன் பேரங்கள் பேசி, வெளியே வர முயலுவதுபோல் நாடகமாடி, அதை ஒலிநாடாவில் பதிவும் செய்துவிட்டார். அதை ஆதாரமாக வைத்து, உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளார், சலாவுதீனின் மனைவி.

உடும்பு வேட்டைக்குப் போனவனின் கையை அது கவ்விக் கொள்ள, 'உடும்பு வேண்டாம், கையை விட்டால் போதும்'' என்று கதறும் நிலைக்கு முத்துக்கருப்பன் கூட்டத்தார் தள்ளப்பட்டு இருக்கின்றனர். ஆனாலும், ''நான் ரௌடிக்கு ரௌடி, நல்லவனுக்கு நல்லவன்'' என்று கொக்கரிக்கிறார் முத்துக்கருப்பன். இப்படிப்பட்ட இடக்குமடக்கான (Notorious) அதிகாரிகள் தான் விரைவாகப் பிரபலமடைவதோடு, போலீசாரிடையே நாயகனாகவும் போற்றப்படுகின்றனர். முத்துக்கருப்பன், முகமது அலி போன்ற இவர்களெல்லாம் தேவாரத்தின் சீடர்கள்; அவரின் பரிந்துரை பெற்று ஜெயா ஆட்சியின் முக்கியப் பொறுப்புக்கு வந்தவர்கள். இயல்பில் திறமை வாய்ந்த தமிழகப் போலீசு, கருணாநிதி, ஜெயலலிதா போன்ற அரசியல்வாதிகளினால் தவறாகப் பயன்படுத்தப்படுவதாக பார்ப்பன அறிவு ஜீவிகளும் செய்தி ஊடகங்களும் புளுகுகின்றன. இயல்பில் சட்டப்பூர்வ கிரிமினல் குற்றக் கும்பலில் திறமையானவர்களை அரசியல்வாதிகள் தெரிந்தெடுத்துக் கொள்கிறார்கள் என்பதுதான் உண்மை. திறமையானவர்கள் என்று பாராட்டப்படும் தமிழகப் போலீசுதான் ஒவ்வொரு சிறு நகருக்கும், ஒவ்வொரு மாநகர, வட்டத்துக்கும் ஒரு ''தாதா'' என்ற குற்றக் கும்பல் தலைவனை



தமிழகப் போலீசின் தாக்குதலில் இருந்து தற்காத்துக் கொள்ள கருணாநிதிக்குப் பூனைப்படை பாதுகாப்பு. மக்களுக்கு?

www.padippakam.com

வளர்த்துள்ளது.

சட்டமுறைமையும், அரசியல் அமைப்பு - நீதித்துறையுமே போலீசு கும்பலுக்கு உறுதுணையாக இருப்பதுதான் அதற்குப் பெரும் பாதுகாப்பு. தி.மு.க.வின் ஸ்டாலினுக்கு எதிராக வாக்குமூலம் பெறுவதற்காக போலீசால் துரத்தப்பட்ட, பொய் வழக்குகள் போடுவதாக மிரட்டி நெருக்குதலுக்குள்ளான ரமேஷ் என்பவர் குடும்பத்தோடு தற்கொலை செய்து கொண்டார். இதில் பல மர்மங்கள் இருப்பதாகப் புரளி கிளப்பிய முத்துக்கருப்பன், ரமேசின் உறவினர் ரமணன் என்பவரை இரவு பகலாக விசாரணை என்கிற பெயரில் போலீசார் வதைக்கின்றனர். இதை மனித உரிமை ஆணையத்திடம் முறையிடும் போது, "காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை விசாரிக்கலாம், குறைந்தபட்ச பலாத்காரத்தைப் பயன்படுத்தலாம்" என்று வழி காட்டியிருக்கிறது. ஒருவரை 10, 15 நாட்களுக்கு மேல் தினமும் 12 மணி நேரம் விசாரிக்கவும், அவர் மீது குறைந்தபட்ச பலாத்காரத்தைப் பிரயோகிப்பதற்கும் அனுமதி தரப்படுகிறது என்றால், இதுதான் மனித உரிமையா?

இப்படித்தான் இதுவரையிலான போலீசின் கொட்டடிச் சித்திரவதை - கொலைக்காகவும், பாலியல் வன்முறைக்காகவும் நாட்டில் எந்த நீதிமன்றமும் போலீசு கிரிமினல்களைத் தண்டிக்கவில்லை. இதனால்தான் தம்மை யாரும் ஒன்றும் செய்ய முடியாது என்று அதிகார, ஆணவத்தோடு போலீசு செயல்படுகிறது. எங்கு எந்தப் போலீசால் அதிகார அத்துமீறல்கள் - அக்கிரமங்கள் நடந்தாலும், எந்த கட்சி ஆட்சியாக இருந்தாலும், அதை அப்படியே நியாயப்படுத்துவது கட்டாய நடைமுறையாகவும் உள்ளது. இவற்றோடு, "எங்களில் எவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தாலும் எதிர்ப்போம்" என்று போலீசு அதிகாரிகள் சங்கம் சேர்ந்து மிரட்டவும் செய்கின்றனர். இவற்றைவிட முக்கியமாக போலீசாருக்குத்தான் ஆயுதம் வைத்துக் கொள்ளும் சட்டப்பூர்வ ஏகபோக உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இவையெல்லாம், நாட்டுக்கும் மக்களுக்கும் எதிரான அனைத்து அதிகாரமும் பெற்றுள்ள தனியொரு ஆதிக்க சாதியாகப் போலீசு வளர்ந்துவிட்டதையே குறிக்கிறது. இந்த சாதி ஆதிக்கம் நீடிக்கும் வரை மனித உரிமைகள் மட்டுமல்ல, வாழ்வுரிமையே நசுக்கப்படுவதுதான் நடக்கும்.

• ஆர்.கே.

# தரைக்கடை வியாபாரிகள் மீது தடியடி; திருச்சி போலீசின் காட்டு தர்பார்!

திருச்சி நகரிலுள்ள தெப்பக்குளம், என்.எஸ்.பி. சாலையில் கடந்த 35 வருடங்களுக்கு மேலாக வியாபாரம் செய்து வந்த தரைக் கடை வியாபாரிகளை, அப்பகுதியில் வியாபாரம் செய்யக் கூடாது என போலீசு தடை விதித்துவிட்டது. திருச்சி மாநகராட்சியும், போலீசும் கூட்டாகச் சேர்ந்து கொண்டு, நேர்மையாகப் பிழைத்து வரும் தரைக்கடை வியாபாரிகளை ஆக்கிரமிப்பாளர்கள் என அவதூறு செய்வதோடு, போக்குவரத்து இடையூறு இல்லாமல் பொது மக்கள் நடமாடுவதற்காகவே 'ஆக்கிரமிப்பை' அகற்றுவதாக நியாயமும் பேசியது.

திருச்சி மாநகராட்சி - போலீசின் அவதூறையும், அடாவடித்தனங்களையும் அம்பலப்படுத்தி, தரைக்கடை வியாபாரிகள் தொடர்ந்து ஒரு வருடமாகப் போராடிய பிறகு, அவர்களுக்கு நந்தி கோவில் தெருவில் கடை வைத்துக் கொள்ள அனுமதியளிக்கப்பட்டது. ஆனால், மக்கள் நடமாட்டம் மிகக் குறைவாகவே காணப்படும் நந்தி கோவில் தெருவில் நடக்கும் வியாபாரம் மூலம் ஒருநாள் வயிற்றைக் கழுவுவதே பெரும்பாடாகப் போகவே, தரைக்கடை வியாபாரிகள் தங்களை மீண்டும் தெப்பக்குளம் - என்.எஸ்.பி. சாலையில் கடை போட அனுமதிக்கக் கோரி போராடத் தொடங்கியுள்ளனர்.

என்.எஸ்.பி. சாலையில் அழகு மிளிர காட்சி தரும் சாரதாஸ், ஆனந்தாஸ் போன்ற பெரு வணிக நிறுவனங்கள் பொது இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதாலும், அந்தக் கடைகளுக்கு வரும் பணக்கார வாடிக்கையாளர்கள் குறுக்கும் நெடுக்குமாக சாலையில் கார்களை நிறுத்துவதாலும் தான் போக்குவரத்து இடையூறு ஏற்படுகிறதே தவிர, தரைக்கடை வியாபாரிகளால் பொதுமக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுவது கிடையாது. மேலும், போலீசே, தங்களுக்கு ஒழுங்காக மாமூல் கொடுக்கும் வியாபாரிகளையும், தரைக் கடை வியாபாரிகள் சங்கத்திற்கு எதிராக ஐந்தாம் படை வேலை செய்யும் துரோகிகளையும் என்.எஸ்.பி. சாலையை 'ஆக்கிரமித்து'க் கடைபோட அனுமதிக்கின்றனர்.

இந்நிலையில், தெப்பக்குளம் - என்.எஸ்.பி. சாலையில் 35 வருடங்களுக்கு மேலாக வியாபாரம் செய்து வந்த தரைக்கடை வியாபாரிகளை மீண்டும் அங்கு கடை போட அனுமதிக்கவும்; சாரதாஸ், ஆனந்தாஸ், மங்கள் அண்டு மங்கள் போன்ற பெரு வணிக நிறுவனங்களின் சட்டவிரோத நிரந்தர ஆக்கிரமிப்பை அகற்றவும்; தரைக் கடை வியாபாரிகளிடம் மாமூல் வாங்கும் போலீசாரைக் கைது செய்யவும் கோரி, ஜூலை 26 அன்று திருச்சி தரைக்கடை வியாபாரிகள் பாதுகாப்பு சங்கம் ஊர்வலம் நடத்தத் திட்டமிட்டிருந்தது.

இந்த ஊர்வலம் நடத்த அனுமதி கேட்டு 14 நாட்களுக்கு முன்பாகவே விண்ணபித்திருந்தும், அனுமதி வழங்காமல் இழுத்தடித்து வந்த போலீசார், ஊர்வலத்தின் முதல் நாள் இரவு சங்கத்தின் பொதுச் செயலரை அழைத்துப் போய், 'ஊர்வலத்தை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை அனுமதிக்க முடியாது; ஆட்சியாளரிடம் மனு கொடுக்கக் கூடாது' என மிரட்டியது. போலீசாரின் இச்சட்ட விரோத மிரட்டலை எதிர்த்துப் போராடாமல் தங்களின் வாழ்வுரிமையைப் பெற முடியாது எனப் புரிந்து கொண்ட தரைக்கடை வியாபாரிகள் தடையை மீறி ஊர்வலம் செல்ல முயன்றனர். அதிகாரத் திமிர் பிடித்த போலீசோ, எவ்வித முன்னறிவிப்பு, முன்னெச்சரிக்கையும் செய்யாமல், தரைக்கடை வியாபாரிகளின் மீது தடியடி நடத்தி, பெண்கள், குழந்தைகள் உள்ளிட்டு 100 பேரின் மண்டையைப் பிளந்தது. அவர்களை அன்று முழுவதும் சட்ட விரோதக் காவலில் அடைத்து வைத்து, பின்னர் விடுவித்தது.

தரைக்கடை வியாபாரிகள் சாரதாஸ், ஆனந்தாஸின் சொத்தையோ, போலீசின் அதிகாரத்தையோ கேட்கவில்லை. தாங்கள் வாழ வழிகோரி மனு கொடுக்க ஊர்வலம் செல்ல முயன்றனர். போலீசார் நினைத்தால் இந்த ஊர்வலத்தைத் தடை செய்யலாம், அவர்களின் மண்டையைப் பிளக்கலாம் என்றால், இந்தக் காட்டு தர்பாருக்கு பெயர்தான் மக்களாட்சியா? வேலையும் தரமாட்டார்கள்; நாமாக முயன்று ஒரு வழி தேடிக் கொண்டால், அதற்கும் அனுமதிக்கமாட்டார்கள் என்றால், இந்திய அரசியல் சாசனம் கூறும் வாழ்வுரிமைக்குப் பொருள்தான் என்ன?

தரைக்கடை வியாபாரிகள்
பாதுகாப்பு சங்கம்,
திருச்சி மாவட்டம்.

வாழ்வுரிமைக்காகத் தரைக்கடை வியாபாரிகள் போலீசாரின் தடையை மீறி நடத்திய ஊர்வலம்.



www.padippakam.com

# கோகோ கோலா: விளம்பரத்துக்குப் பல கோடி தொழிலாளிக்குத் தெருக்கோடி

கோகோ கோலா - இந்தியாவெங்கும் பரவலான மக்களிடம் அறிமுகமாகியுள்ள அமெரிக்க நாட்டு குளிர்பானம். கோகோ கோலா சாதாரண குளிர் பானமாக மட்டுமின்றி, 21-ஆம் நூற்றாண்டின், நவீன உலகின் கலாச்சார அடையாள மாகவும் இந்திய மக்களிடத்தில் காட்டப்படு கிறது.

நம்ம ஊர் தண்ணீரையும், அமெரிக்க கலர் பொடியையும் கலந்து விற்கப்படும் ஒரு சரக்கிற்கு இந்தத் தகுதியை வழங்க முடியுமா? இந்தக் கேள்விக்கு "கோக்" விளம்பரப் படத்தில் நடிக்கும் 'உலக அழகி' ஐஸ்வர்யாராயும், 'இளைய தளபதி' விஜய் மட்டுமல்ல, தொலைக்காட்சிப் பெட்டி வழியே உலகத்தைப் பார்க்கும் சராசரி இந்தியர்களும் கூட ஆம் என்றுதான் பதில் அளிக்கிறார்கள்.

அதே சமயம், சென்னையில் கோகோ கோலா நிறுவனத்தை எதிர்த்து கடந்த ஒரு மாத காலமாக வேலை நிறுத்தம் நடத்தி வரும் அந்நிறுவனத் தொழிலாளர்களிடமும், ஊழியர்களிடமும் பேசிப் பாருங்கள். 21-ஆம் நூற்றாண்டிற்கான கலாச்சார தேவனாகத் தன்னைக் காட்டிக் கொள்ளும் கோகோ கோலா, எத்துணை அநாகரீகமானது; ஈவிரக்கமற்ற காட்டுமிராண்டித்தனமானது; அருவெறுக்கத்தக்க அயோக்கியத்தனம் நிறைந்தது என்பதைப் புட்டு வைப்பார்கள்.

***

"கோகோ கோலா இந்தியா" நிறுவனம் சென்னையில் குளிர்பானங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றையும், குளிர்பானங்களை வட தமிழ்நாடெங்கும் வினியோகிப்பதற்கான ஓர் அலுவலகத்தையும் நடத்தி வருகிறது. குளிர்பானங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை "இந்துஸ்தான் கோகோ கோலா பீவரேஜஸ் பிரைவேட் லிமிடெட்" என்ற பெயரிலும், விற்பனை அலுவலகம் "இந்துஸ்தான் கோகோ கோலா மார்க்கெட்டிங் கம்பெனி பிரைவேட் லிமிடெட்" என்ற பெயரிலும் தனித்தனியாக நிர்வகிக்கப்படுகின்றன. அமெரிக்காவைச் சேர்ந்த தேசங்கடந்த தொழிற்கழகமான கோகோ கோலா, நமது நாட்டில் "இந்தியா", "இந்துஸ்தான்" என்ற இரு வார்த்தைகளை தனக்கு முன்னும் பின்னும் சேர்த்துக் கொண்டு, மூன்று அவதாரம் எடுத்திருப்பதன் நோக்கமே, அரசாங்கத்திற்கு உரிய வரியைக் கட்டாமல் ஏய்ப்பதற்குத் தானேயன்றி, அதில், "நிர்வாகத் திறமை", "நிர்வாக வசதி" என்று எந்த மண்ணாங்கட்டியும் கிடையாது.

கோகோ கோலாவின் சென்னை தொழிற்சாலையில் கிட்டதட்ட 250 தொழிலாளர்கள் வேலை பார்த்து வருகின்றனர்; அதன் விற்பனை அலுவலகத்தில் தொழிலாளர்கள், ஊழியர்கள் என 600 பேர் வேலை பார்த்து வருகின்றனர். கோகோ கோலா, இந்தியாவில் கால்லை ஊன்றிய கடந்த ஒன்பது ஆண்டுகளில், தனது ஊழியர்கள் "சங்கம்" என்ற ஒரு வார்த்தையை உச்சரிப்பதற்குக் கூட அனுமதித்ததில்லை. ஆனால், இன்றோ, சென்னையின் விற்பனை மையத்தில் பற்றிக் கொண்டுள்ள சிறிய நெருப்புப் பொறி, பெரும் காட்டுத் தீயாய், இந்தியாவில் உள்ள தனது பிற தொழிற்சாலைகளிலும், விற்பனை மையங்களிலும் பரவி விடுமோ எனப் பதறிக் கொண்டிருக்கிறது.

சென்னை - அரும்பாக்கத்திலுள்ள கோகோ கோலா விற்பனை மையத்தில் வேலை பார்க்கும் ஊழியர்கள், மெட்ராஸ் - செங்கல்பட்டு ஜெனரல் ஒர்க்கர்ஸ் யூனியன் என்ற சங்கத்தின் கீழ் அணி திரண்டும்; தொழிலாளர்கள், இந்துஸ்தான் கோகோ கோலா காண்டிராக்ட் ஒர்க்கர்ஸ் யூனியன் என்ற சங்கத்தைக் கட்டியமைத்தும், கடந்த ஜூன் மாதம் 12-ந் தேதியில் இருந்து வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

"எங்கள் சங்கத்தை அங்கீகரி" என்பது கோகோ கோலா நிர்வாக ஊழியர்களின் முக்கியமான கோரிக்கை. "தொழிலாளர்கள் சங்கம் வைத்துக் கொள்ளலாம்" என்பது இந்திய அரசியல் சாசனம் வழங்கியுள்ள அடிப்படை உரிமை. ஆனால், கோகோ கோலா நிறுவனத்திலோ சங்கம் வைத்துக் கொள்ளும் இந்த அரசியல் சாசன அடிப்படை உரிமையைப் பெறுவதற்கே தொழிலாளர்கள் போராட வேண்டியிருக்கிறது. இது, கோகோ கோலா, தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல, இந்திய அரசியல் சாசனத்திற்கு விரோதமானது என்பதைத் தான் காட்டுகிறது.

இதுவாவது பரவாயில்லை. கோகோ கோலாவிற்கு காண்டிராக்ட் தொழிலாளர்களை அனுப்பி வைக்கும் "டி.எஸ்.டி." என்ற நிறுவனம் கடந்த இரண்டு வருடங்களாக தொழிலாளர்களின் சம்பளத்தில் இருந்து பிடிக்கப்பட்ட சேமநல நிதிப் பணத்தை அரசிடம் கட்டாமல் சுருட்டிக் கொண்டு வந்துள்ளது; டி.எஸ்.டி.யின் இந்தத் திருட்டுத்தனத்திற்கு கோகோ கோலா நிர்வாகமும் உடந்தையாக இருந்து வந்துள்ளது. "சுருட்டிய பணத்தை அரசாங்கத்திடம் கட்டக்" கோரி இப்பொழுது தொழிலாளர்கள் போராடுகிறார்கள்.

"கோகோ கோலாவும், டி.எஸ்.டி.யும் மட்டுமல்ல; பெரும்பாலான தனியார் முதலாளிகள், தொழிலாளர்களின் "பி.எஃப்" பணத்தைச் சுருட்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள்; எந்த முதலாளி, தொழிலாளர்கள் கேட்டவுடனேயே சங்கம் அமைத்துக் கொள்ள அனுமதிக்கிறான்?" என்றெல்லாம் கோகோ கோலா அபிமானிகள் கொக்கி போட்டுக் கேட்கலாம். உண்மைதான். இப்படிப்பட்ட முதலாளிகளில், கோகோ கோலாதான் தனது சரக்கை பண்பாட்டின் அடையாளமாக நமது தலைக்குள் திணித்துவிடத் தீவிரமாக முயலுகிறது என்பதுதான் இங்கு கவனிக்கத்தக்கது.

கோகோ கோலா நிர்வாகத்தை எதிர்த்துப் போராடி வரும் ஊழியர்கள் "தங்களுக்கும் வேலை உத்தரவாதம், பணி பாதுகாப்பு வேண்டும்", என்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் தங்களை "நிரந்தரத் தொழிலாளர்களாக ஆக்க வேண்டும்" என்று கோரியும் போராடுகிறார்கள். ஆனால், கோகோ கோலா நிர்வாகமோ தற்பொழுது சென்னையில் உள்ள மையப்படுத்தப்பட்ட விற்பனை முறையை 10,15 தனியார் ஏஜெண்டுகளுக்குக் கொடுத்துவிட்டு, விற்பனைப் பிரிவில் வேலை பார்க்கும் ஊழியர்களையும், தொழிலாளர்களையும் ஒரேயடியாக வீட்டுக்கு அனுப்பிவிடத் திட்டம் போடுகிறது.

ஒரே வீச்சில் 500, 600 தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்பிவிட முடியுமா? அரசும், தொழிலாளர் நல வாரியமும் கோகோ கோலாவின் இந்த அடாவடித்தனத்தைத் தட்டிக் கேட்கவில்லையா? என்று நீங்கள் கேட்கலாம். அரசாங்கம் தொழிலாளர்கள் கொடுத்த மனுவை வாங்கி வைத்துக் கொண்டு, நிர்வாகத்துடன் பேச்சு வார்த்தை நடத்தப் போவதாகச் சொல்லி கொண்டுதான் இருக்கிறது. ஆனாலும், ஓர் உண்மையை ஒத்துக் கொண்டு ஆக வேண்டும். கோகோ கோலா நிர்வாகம் நமது நாட்டின் எந்தவொரு தொழிலாளர் சட்டத்தையும் மயிரளவு கூட மதித்து நடப்பது கிடையாது. அது தனக்கென்ற ஒரு தொழிலாளர் கொள்கையை வைத்துக் கொண்டுள்ளது. இன்னும் சொல்லப் போனால் கோகோ கோலா போன்ற ஏகாதிபத்திய நிறுவனங்கள், தங்களின் தொழிலாளர் கொள்கைதான் அரசாங்கத்தின் கொள்கையாகவும் இருக்க வேண்டும் என்கிறார்கள். அரசாங்கமும், அதைத்தான் தொழிலாளர் நலச்

www.padippakam.com

சீர்திருத்தச் சட்டமாகவும் கொண்டு வரத் துடிக்கிறது.

கோகோ கோலாவின் தொழிலாளர் கொள்கைதான் என்ன? ஒரே வரியில் சுருக்கமாகச் சொன்னால், ஒரு சில உயர் அதிகாரிகள், ஊழியர்கள் தவிர தனது நிறுவனத்தில் வேலை பார்க்கும் ஆகப் பெரும்பான்மையான தொழிலாளர்களை, ஊழியர்களை நினைத்த நேரத்தில் வேலையை விட்டுத் துரத்தும் ஒருவித ஒப்பந்த தொழிலாளர்களாக வேலைக்கு அமர்த்திக் கொள்வதுதான், கோகோ கோலாவின் தொழிலாளர் கொள்கை.



**தொழிற்சங்கத்தை அங்கீகரிக்கக் கோரி கோகோ கோலா ஊழியர்கள் சென்னையில் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம்.**

சென்னையில் பொள்ளாச்சி மகாலிங்கம் நடத்தி வந்த ''சக்தி சாஃப்ட் டிரிங்க்ஸ்'', ''சென்னை பாட்டிலிங் கம்பெனி'' என்ற இரு நிறுவனங்களையும் 1999 -ஆம் ஆண்டு கோகோ கோலா விலைக்கு வாங்கிய பொழுது, அந்நிறுவனங்களில் கிட்டதட்ட 100 நிரந்தரத் தொழிலாளர்களும், 150 நிரந்தர ஊழியர்களும் இருந்தனர். தொழிலாளர்கள் மத்தியில் சி.ஐ.டி.யு. தொழிற் சங்கமும் செயல்பட்டு வந்தது. இதை உறுத்தலாகப் பார்த்த கோகோ கோலா, பத்து, பதினைந்து வருடங்களாக வேலை பார்த்து வந்த நிரந்தரத் தொழிலாளர்களிடம், ''கூடிய விரைவில் உங்களது வேலை பறிபோய் விடும்; நீங்களாக விலகிப் போனால் உங்களுக்கு நல்லது'' என்று பீதியையும், ஆசையையும் உருவாக்கி, கம்பெனியை வாங்கிய ஆறே மாதத்திற்குள், அத்தொழிலாளர்கள் அனைவரையும் விருப்ப ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வீட்டிற்குத் துரத்தியது. கோகோ கோலாவின் இந்தத் தொழிலாளர் விரோதப் போக்கை எதிர்த்து சி.ஐ.டி.யு.வால் ஒரு துரும்பைக் கூட அசைக்க முடியவில்லை என்பது ஒரு புறமிருக்க, நாளாவட்டத்தில், தனது சங்கப் பலகையைக் கூட வைக்க முடியாமல், இடத்தைக் காலி செய்தது.

நிரந்தர ஊழியர்களைப் பொருத்த வரை, அவர்களுக்குப் புதிய பணி உத்தரவு கொடுத்து, அவர்களின் முந்தைய பணிக் காலம் அனைத்தையும் ஒரே உத்தரவில் செல்லாக்காசாக்கி விட்டது. இந்த ஊழியர்களை, நிர்வாகம் நிரந்தர ஊழியர்கள் என்று அழைத்தாலும், நிரந்தர ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய பஞ்சப்படி, வீட்டு வாடகைப்படி, நகரப்படி, ஓ.டி., வருடாந்திர போனசு போன்ற எந்தப் பணச் சலுகைகளும் வழங்குவதில்லை. தொகுப்பூதியம் என்ற பெயரில் ஒரு தொகையை கொடுத்து, சம்பளக் கணக்கை முடித்துக் கொள்கிறார்கள். வாராவாரம் விற்பனை இலக்கை முடிக்க வேண்டிய கட்டாயம் இருப்பதால், எங்களுக்கு வார விடுமுறை கிடைக்காது என்கிறார்கள் ஊழியர்கள். இவர்களுக்கு எந்தவித சட்டபூர்வமான பணி பாதுகாப்பும் கிடையாது. அதனால்தான், சங்கம் அமைத்துப் பணி பாதுகாப்புக் கோரிப் போராடி வரும் ஊழியர்களை, ''சட்டையில் ஒட்டிக் கொள்ளும் தூசியைப் போல் உங்களைத் தட்டி விடுவோம்'' என கோகோ கோலா நிர்வாகம் மிரட்டி வருகிறது. 'நிரந்தர' ஊழியர்களையே தூசி போல் மதிக்கும் கோகோ கோலா, ஒப்பந்த தொழிலாளர்களை மனிதனாகவா மதித்து நடக்கும்?

கோகோ கோலாவின் சென்னை தொழிற்சாலை மட்டும் வருடத்திற்கு 42 இலட்சம் பெட்டிகள் அளவுக்கு குளிர்பானங்களை உற்பத்தி செய்கிறது; அதனின் விற்பனை மதிப்பு தோராயமாக 86 கோடி ரூபாய். அதாவது, கோகோ கோலா வட தமிழகத்தில் மட்டும் 86 கோடி ரூபாய்க்கு வியாபாரம் நடத்த வேண்டுமென்றால், அதற்காக கிட்டதட்ட 800 தொழிலாளர்களும் / ஊழியர்களும் உழைத்தாக வேண்டும். கோகோ கோலா இவர்களில் 200 பேரை மட்டும் 'நிரந்தர'த் தொழிலாளியாக / ஊழியராக வைத்துக் கொண்டு, மீதிப் பேரை ஒப்பந்தத் தொழிலாளர்களாக, அத்துக் கூலிகளாக வைத்து வேலை வாங்குகிறது. 'நிரந்தர'த் தொழிலாளிக்கு / ஊழியருக்கு ரூ. 6000 முதல் ரூ. 8000/- வரை சம்பளமாகக் கொடுக்கும் கோகோ கோலா, ஒப்பந்தத் தொழிலாளிக்கு அதிகபட்சமாகத் தரும் கூலியே 2500/- ரூபாய் தான். இந்த அடிமாட்டுக் கூலியின் மூலம், கோகோ கோலா மாதமொன்றுக்கு வெளிப்படையாக அடிக்கும் கொள்ளை தோராயமாக முப்பது லட்ச ரூபாய்.

''பாட்டில் சுத்தமாகக் கழுவப்பட்டிருக்கிறதா? அதில் குளிர்பானம் உரிய அளவில் நிரப்பப்பட்டிருக்கிறதா? குளிர்பானத்தில் தேவையில்லாத வேறு பொருள் மிதக்கிறதா?'' எனத் துழாவி துழாவிப் பரிசோதித்து, பின்னர் பாட்டில்களை பெட்டிகளில் அடக்கி, பெட்டியை தூக்கிக் கொண்டு போய் அட்டி போட்டு, அதன் பிறகு பெட்டிகளை லாரியில் ஏற்றி இறக்கி, வட தமிழ்நாட்டின் மூலை முடுக்கு எல்லாம் கொண்டு போய் கொடுத்து வந்தால்தான் கோகோ கோலாவின் கல்லா பெட்டி கனக்கும். கோகோ கோலாவின் 86 கோடி ரூபாய் வருமானத்திற்காக ராப்பகல் பாராமல் உழைக்கும் ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரமாக்கி, அவர்களுக்கு 1000, 2000 சம்பளம் ஏற்றித் தர மறுக்கும் கோகோ கோலா, தனது விளம்பரப் படத்தில் நிமிட நேரம் அலுக்காமல் ஆடிவிட்டுப் போகும் ஐஸ்வர்யா ராய்க்கு இரண்டு கோடி ரூபாயும், விஜய்க்கு ஐம்பது லட்சம் ரூபாயும் அள்ளிக் கொடுக்கிறது. தொழிலாளர்களின் வயிற்றிலடித்து, நடிகர் - நடிகைகளின் கவர்ச்சியை விலைக்கு வாங்கும் இந்த வக்கிரத் திற்குப் பெயர்தான் வியாபாரத் திறமை.

**இராப்பகல் பாராமல் உழைக்கும் ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரமாக்கி, அவர்களுக்கு 1000, 2000 சம்பளம் ஏற்றித் தர மறுக்கும் கோகோ கோலா, தனது விளம்பரப் படத்தில் நிமிட நேரம் அலுக்காமல் ஆடிவிட்டுப் போகும் ஐஸ்வர்யா ராய்க்கு இரண்டு கோடி ரூபாயும், விஜய்க்கு ஐம்பது லட்சம் ரூபாயும் அள்ளிக் கொடுக்கிறது.**

குளிர்பானம் நிறைந்த பாட்டில்கள்

www.padippakam.com

அடுக்கப்பட்ட பெட்டிகளைத் தூக்கி அட்டி போட்டு, அவற்றை லாரிகளில் ஏற்றி இறக்கி பெட்டிக்கடை வரை போய் கொண்டு கொடுத்துவிட்டு வரும் தொழிலாளர்களில் காயம் பட்டு இரத்தம் சிந்தாதவர்கள் யாரும் கிடையாது. காயம் என்றால், அது சாதாரணமானதல்ல. குளிர்பானம் நிறைந்த பாட்டில் வெடித்துச் சிதறி, கூரான கண்ணாடித் துண்டுகள் உடம்பைக் கிழித்துக் கொண்டு போவதால் ஏற்படும் காயம். காயம் அடைந்த தொழிலாளிக்கு முதலுதவி அளிக்க ஒரு சின்ன முதலுதவிப் பெட்டியைக் கூட வைத்துக் கொள்ளாத நிர்வாகத்திடம், மருத்துவ உதவியையா எதிர்பார்க்க முடியும்? குளிர்பான பெட்டிகளை ஏற்றி இறக்கும் தொழிலாளியின் பாதுகாப்புக்கு முதலுதவிப் பெட்டியோ, கையுறையோ, வேறு கவசங்களோ வழங்க மறுத்து வரும் கோகோ கோலா, தனது பளபள வென்ற விளம்பர போர்டுகளை வைத்துக் கொள்ளும் ஒவ்வொரு உணவு விடுதிக்கும், திரைப்பட அரங்கத்திற்கும், தேநீர்க் கடைக்கும் மின்சாரக் கட்டணத்திற்காக ஆயிரம், பத்தாயிரம் எனத் தூக்கிக் கொடுக்கிறது.

விற்பனை இலக்கை எட்டிப் பிடித்தற்காக, சில விற்பனை பிரதிநிதிகளையும், அதிகாரிகளையும், சமீபத்தில் தாய்லாந்து நாட்டின் தலைநகர் பாங்காக்குக்குக் கூட்டிப் போய் குளிப்பாட்டியது கோகோ கோலா நிர்வாகம். அதேசமயம், குளிர்பானங்களை ஏற்றிக் கொண்டு, தெற்கே தொழுதூர் வரையிலும், வடக்கே திருப்பத்தூர் வரையிலும் போய் ஒவ்வொரு ஊராகச் சரக்குகளை இறக்கி விட்டு, இரண்டு மூன்று நாட்கள் கழித்து சென்னைக்குத் திரும்பும் தொழிலாளர்களுக்கு "ஓ.டி." கொடுக்க முடியாது என அடாவடித்தனமாக நடந்து வருகிறது, கோகோ கோலா. இந்தத் தொழிலாளர்களின் உழைப்பு இல்லாமல் விற்பனை இலக்கை அடைந்துவிட முடியாது என்ற போதும், அவர்கள் வெளியூர்களுக்குச் சரக்குகளை எடுத்துச் செல்லும் போது ஆகும் டீ, காபி, சாப்பாடு செலவுக்குக் கூட முன் பணம் கொடுக்கப்படுவதில்லை. தொழிலாளர்கள் தங்கள் கைக்காசை செலவு செய்துவிட்டு, அதன் பிறகுதான் நிர்வாகத்திடமிருந்து "பேட்டா" காசு ஐம்பத்தைந்து ரூபாயை வாங்கி ஈடுகட்ட முடியும். ஒரு நாளைக்கு பேட்டா காசு ஐம்பத்தைந்து ரூபாய்க்கு மேல், தொழிலாளி செலவு செய்திருந்தால் கூடுதல் செலவை தனது சொந்தக் கணக்கில் எழுதிக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

தனது கைக்காசைப் போட்டு கோகோ கோலாவிற்காக உழைக்கும் தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய பி.எஃப் பணத்தை, டி.எஸ்.டி. சுருட்டுகிறது என்றால், கோகோ கோலா நிர்வாகம்தான் தனது "லேபர் காண்டிராக்டு" நிறுவனமான டி.எஸ்.டி.யின் மீது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால், கோகோ கோலாவோ கொஞ்சம் கூட நேர்மையும், நன்றியும் இன்றி புகார் கொடுக்கும் தொழிலாளர்களை வேலையிலிருந்து துரத்திவிடத் துடிக்கிறது.

ஆறு மாதங்களுக்கு முன்பு "பி.எஃப்" பணம் பற்றிச் சந்தேகப்பட்ட தொழிலாளர்கள் கோகோ கோலா நிர்வாகத்திடம் புகார் செய்தனர். அப்பொழுது நிர்வாகம், "உங்களின் முந்தைய மாத சம்பளத்தில் இருந்து பிடிக்கப்பட்ட 'பி.எஃப்' பணத்தை டி.எஸ்.டி. முறையாகக் கட்டியிருந்தால்தான், அடுத்த மாத சம்பளத்தை டி.எஸ்.டி.யின் மூலம் வழங்குவோம்" என நைச்சியமாகப் பேசி தொழிலாளர்களை அனுப்பி வைத்தது. இத்தொழிலாளர்களுள் பெரும்பாலோர் தாழ்த்தப்பட்ட சாதியினராக இருப்பதால், அவர்களைச் சமாதானப்படுத்த, தலித் தலைவராக வலம் வரும் பூவை. மூர்த்தியின் 'சேவை'யை நிர்வாகம் பயன்படுத்திக் கொண்டது.


கம்பெனி வாசலில் போலீஸ் கெடுபிடி

கோகோ கோலா நிர்வாகம் ஜூலை 31 தேதிக்குப் பிறகு மையப் படுத்தப்பட்ட விற்பனை முறையை, 10,15 ஏஜெண்டுகளுக்குத் தூக்கிக் கொடுத்து தொழிலாளர்களின் வேலைக்கு உலை வைக்கத் திட்டம் போட்டு வருகிறது. இதனால் தங்களின் பி.எஃப் பணமாவது உருப்படியாகக் கைக்குக் கிடைக்குமா எனத் தொழிலாளர்கள் பி.எஃப் அலுவலகத்தில் நேரடியாக விசாரித்தபோதுதான், கோகோ கோலா - டி.எஸ்.டி. நிர்வாகங்களின் கூட்டுக் களவாணித்தனம் அம்பலமானது. "டி.எஸ்.டி. நிர்வாகம் தனது சொந்தக்காரர்கள் சிலரின் பெயரில் கணக்கு தொடங்கி, ஏதோ கொஞ்சம் பணம் போட்டிருப்பதாகவும், கோகோ கோலாவில் வேலை பார்க்கும் 600 தொழிலாளர்களின் பெயரில் எந்தக் கணக்கும் கிடையாது; பணமும் கிடையாது" என பி.எஃப் அலுவலகத்தில் எழுதிக் கொடுத்தனர்.

தொழிலாளர் சேமநல நிதி (பி.எஃப்) சட்ட விதிகளின்படி, தொழிலாளர்களிடமிருந்து எவ்வளவு பணம் சேமநல நிதியாகப் பிடிக்கப்படுகிறதோ, அதே அளவு தொகையை நிர்வாகம் சேர்த்துப் போட்டு அரசிடம் கட்ட வேண்டும். டி.எஸ்.டி. ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கான சம்பளத்தை கோகோ கோலா நிர்வாகம்தான் டி.எஸ்.டி. மூலம் வழங்குகிறது எனும் பொழுது, கோகோ கோலோ நிர்வாகம் செலுத்த வேண்டிய பி.எஃப் தொகையாவது அரசிடம் கட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால், பி.எஃப் அலுவலகத்தில் எந்தவொரு தொழிலாளியின் பெயரிலும் நயா பைசா கூடக் கட்டப்படவில்லை எனும்பொழுது, இந்த மோசடியில் டி.எஸ்.டி.க்கு மட்டுமல்ல, கோகோ கோலாவிற்கும் நேரடிப் பங்கு உண்டு என்றுதான் சொல்ல வேண்டும். கடந்த இரண்டு வருடங்களில் கிட்டதட்ட ஒரு கோடி ரூபாய் அளவிற்கு மோசடி நடந்திருப்பதாக தொழிலாளர்கள் குற்றஞ் சாட்டுகிறார்கள்.

தொழிலாளர்கள் மீண்டும் டி.எஸ்.டி. நிர்வாகத்திடம் இந்த மோசடி பற்றி விசாரித்த பொழுது, நிர்வாகம் பணம் கட்டியதற்கு ஆதாரமாக வங்கி ரசீதைத் தூக்கிக் காட்டியது. இதுபற்றி சென்னை-அரும்பாக்கத்திலுள்ள இந்திய அரசு வங்கியில் விசாரித்த போது, வங்கி அதிகாரிகள் இது போலி ரசீது எனக் கூறிவிட்டனர். தங்களின் பி.எஃப் பணத்தைச் சுருட்டிக் கொண்டதோடு தங்களை வேலையை விட்டு அம்போ எனத் துரத்தி விடவும் சதி நடப்பதைப் புரிந்து கொண்ட தொழிலாளர்கள், "பி.எஃப் பணத்தைக் கட்டவும், தங்களை கோகோ கோலாவின் நிரந்தர ஊழியர்களாக எடுத்துக் கொள்ளவும்" கோரி வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கினர். இதே சமயத்தில்தான் கோகோ கோலாவின் விற்பனைப் பிரிவில் வேலை பார்க்கும் நிரந்தர ஊழியர்களும், "தங்களின் சங்கத்தை அங்கீகரிக்கக் கோரியும், பணி பாதுகாப்பு கோரியும்" வேலை நிறுத்தத்தைத் தொடங்கினர்.

இந்தப் பண மோசடி, போலி ரசீது தயாரித்தது பற்றி டி.எஸ்.டி. மேலாளர் பழனியை போலீசார் பிடித்துப் போய் விசாரித்த பொழுது, போலீசு நிலையத்திற்கே வந்த கோகோ கோலாவின் உயர் அதிகாரி முகம்மது அகில், "கோகோ கோலா நட்டத்தில் நடப்பதாகவும் அதனால்தான் பி.எஃப் பணம் கட்டமுடியவில்லை; டி.எஸ்.டி.யின் மீது எந்தத் தவறும் இல்லை" என்றெல்லாம் கூறி, போலீசு அதிகாரிகளைச் சமாதானப்படுத்திவிட்டு, பழனியை மீட்டுச் சென்றார். வருடமொன்றுக்கு 150 கோடி ரூபாய் வரை விளம்பரத்திற்கு மட்டும் செலவு செய்யும் கோகோ கோலா நட்டத்தில் நடப்பதாக நம்புவதற்கு தொழிலாளர்கள் இளிச்சவாயர்களா என்ன? அவர்கள் இம்மோசடிகளுக்கு கோகோ கோலா துணை போனதை அம்பலப்படுத்தி சென்னை நகரெங்கும் சுவரொட்டிகள் ஒட்டியதோடு, இம்மோசடியை விசாரிக்கக் கோரி நீதிமன்றத்திலும் வழக்கு தொடுத்திருக்கின்றனர்.


படிப்பகம்

www.padippakam.com

ஆனாலும், அதிகார வர்க்கம் கோகோ கோலாவுக்கும், டி.எஸ்.டி.க்கும் சாதகமாகத் தான் ஆடுகிறது. தொழிலாளர்கள் பி.எஃப் மோசடியை அம்பலப்படுத்தி சுவரொட்டி ஒட்டியவுடன், பி.எஃப் அலுவலக உதவி ஆணையர் தொழிலாளர்களை கூப்பிட்டு, ''இப்படி ஆதாரமில்லாமல் சுவரொட்டி ஒட்டியதற்காக உங்களை உள்ளே தள்ளலாம்'' என மிரட்டியிருக்கிறார். போலீசு ஆய்வாளர் சுப்பையா பிள்ளை கோகோ கோலாவின் விசுவாச அடியாளாகவே மாறி விட்டார். அவர் ஒரு மணி நேரத்துக்கு ஒரு தடவை ஜீப்பை எடுத்துக் கொண்டு கம்பெனியைச் சுற்றி வந்து, கம்பெனிக்கு வெளியே நிற்கும் தொழிலாளர்களை பார்வையாலேயே மிரட்டுவதோடு, ''உங்களையெல்லாம் ஒரு பத்து பதினைஞ்சு நாள் உள்ளே தள்ளினா, எல்லாம் சரியாப் போகும்'' என சட்டவிரோதமாக தொழிலாளர்களை அச்சுறுத்தியிருக்கிறார். கோகோ கோலா நிர்வாகமோ தனது கம்பெனியில் இருந்து 100 மீட்டர் தள்ளிதான் தொழிலாளர்கள் கூட வேண்டும்; ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும்; முழக்கமிட வேண்டும் என உத்தரவை வாங்கி வைத்துக் கொண்டு, ''வேலை நிறுத்தமா, அப்படியெல்லாம் இங்கே ஒன்றுமில்லை'' எனக் காட்டிக் கொள்கிறது.

தன்னிடம் வேலை பார்க்கும் நிரந்தர ஊழியர்களைத் தலைமுழுகவும் விற்பனை முறையை மாற்றியமைக்கவும் தருணம் பார்த்துக் கொண்டிருக்கும் கோகோ கோலா, இந்த வேலை நிறுத்தத்தையே அதற்கான வாய்ப்பாகப் பயன்படுத்தி வருகிறது. வேலை நிறுத்தம் தொடங்கியவுடனேயே 20 'நிரந்தர' ஊழியர்கள் நிர்வாகத்தால் பணி நீக்கம் செய்யப்பட்டு, பழி வாங்கப்பட்டனர். ''ஒரு நிறுவனத்தில் வேலை நிறுத்தம் நடைபெறும் பொழுது, அது பற்றி பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கும் பொழுது, முன் அனுமதியின்றி எந்தவொரு ஊழியரையும் பணி நீக்கம் செய்யக் கூடாது என்ற சட்டத்தை கோகோ கோலா மயிரளவுக்குக் கூட மதிக்கவில்லை'' என ஊழியர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

இந்தச் சட்டமீறல் ஒருபுறமிருக்க, போலீசு, ரவுடிகளின் துணையோடு விற்பனை அலுவலகத்தில் இருந்த கணிப்பொறிகள் உள்ளிட்ட முக்கியமான ஆவணங்களைக் கடத்திக் கொண்டு போகவும் முயன்றது. கோகோ கோலா ஊழியர்களும், தொழிலாளர்களும் இணைந்து மறியல் போராட்டத்தில் இறங்கி, இக்கடத்தலை முறியடித்தனர். ''தாங்கள் கோகோ கோலாவில் வேலை செய்து வருவதற்கான அனைத்து ஆதாரங்களையும் அழித்துவிடும் சதித்தனம் தான் இந்தக் கடத்தல்'' என ஊழியர்களும், தொழிலாளர்களும் குமுறுகிறார்கள். தனது கடத்தல் திட்டம் தோல்வியடைந்ததால் ஆத்திரமாகிப் போன கோகோ கோலா, சொக்கலிங்கம் மற்றும் 28 ஊழியர்கள் அலுவலகத்தில் நுழையக் கூடாது என்ற நீதிமன்ற உத்தரவை வாங்கி வைத்துக் கொண்டு, மீண்டும் ஆவணங்களைக் கடத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைக்காதா எனக் காத்து நின்றது. அதே சமயம், மீதி ஊழியர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தைத் தொடங்கி, இரவு பகல் என நாள் முழுவதும் அலுவலகத்தில் இருந்து, கோகோ கோலாவின் கடத்தல் முயற்சிக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டனர்.

***

கோகோ கோலா நிர்வாகத்தை எதிர்த்து இப்படியொரு வேலை நிறுத்தப் போராட்டம் கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்று வருவது, சென்னை நகரத்தில்கூடப் பெரும்பாலோருக்குத் தெரியாது. நடிகை வீட்டு நாய்க்குட்டி செத்துப் போன எழவைக் கூட செய்தியாக வெளியிடும் பத்திரிகைகள், இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தைப் பற்றி எழுதாமல் வர்க்கப் பாசத்தோடு இருட்டடிப்பு செய்து விட்டன. கோகோ கோலாவின் உற்பத்திக்கும், விநியோகத்திற்கும் விற்பனைக்கும் இந்த வேலை நிறுத்தப் போராட்டம் எந்தப் பாதிப்பினையும் ஏற்படுத்தவில்லை என்பதுதான் இதில் கவனிக்கத்தக்கது. வேலை நிறுத்தம் என்பதே உற்பத்தியை முடக்கி, முதலாளிக்கு நட்டமேற்படுத்தி, தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளும்படி அவனை இணங்கச் செய்யும் போராட்டமின்றி வேறில்லை.



கோகோ கோலாவின் விற்பனை மையத்தில் இருந்து கணினி கடத்திச் செல்லப்படுகிறது.

சென்னைக்கு அருகேயுள்ள பூந்தமல்லியையொட்டி உள்ள நேமம் என்ற கிராமத்தில் அமைந்திருக்கும் கோகோ கோலாவின் குளிர்பானத் தொழிற்சாலையில் கிட்டதட்ட 50 நிரந்தரத் தொழிலாளர்களும், 200 ஒப்பந்த தொழிலாளர்களும் பணியாற்றுகின்றனர். கோகோ கோலா நிர்வாகம், நிரந்தரத் தொழிலாளர்கள் மத்தியில் இருந்து ஐந்து பேரைப் பொறுக்கி எடுத்து, ஒரு சங்கத்தை உருவாக்கி, அச்சங்கத்தின் மூலம், ''நிரந்தரத் தொழிலாளர்கள் மூன்று ஆண்டுகளுக்கு எந்தவொரு வேலை நிறுத்தத்திலும் ஈடுபடமாட்டோம்'' என்ற அடிமைச் சாசனத்தில் கையெழுத்து வாங்கி வைத்துள்ளது. இந்த அயோக்கியத்தனமான ஒப்பந்திற்குப் பயந்துபோய், அவர்கள் வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ள முடியாது எனக் கைகழுவி விட்டனர்.

இத்தொழிற்சாலையில் வேலை பார்க்கும் ஒப்பந்தத் தொழிலாளர்களின் பி.எஃப் பணத்தையும் டி.எஸ்.டி.யும், கோகோ கோலாவும் சுருட்டிக் கொண்டுள்ளன. ஆனால் அந்தத் தொழிலாளர்கள் கோகோ கோலாவின் கைக்கூலியாகச் செயல்படும் பூவை.மூர்த்தியின் பேச்சை நம்பிக் கொண்டு, வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி நிற்கின்றனர். இதனால் தொழிற்சாலையில் உற்பத்தி தங்கு தடையின்றி நடக்க, தனியார் லாரிகள் மூலம் விநியோகத்தை நடத்தி வருகிறது கோகோ கோலா.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள், தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் ஒத்துழைப்பின்றி உற்பத்தியை முடக்க முடியுமா எனத் தயங்குகின்றனர். ஏன் முடியாது? வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களும், ஊழியர்களும் இணைந்து தொழிற்சாலை அருகே சாலை மறியல் போராட்டத்தில் இறங்கி குறைந்த பட்சம் ஒரு நாளாவது கோகோ கோலாவின் விநியோகத்தைத் தடுத்து நிறுத்த முயலலாம். பொது மக்கள் மத்தியில் கோகோ கோலாவின் மோசடி, ரவுடித்தனம், சட்ட விரோதத் தன்மை, தொழிலாளர் விரோதப் போக்கு ஆகியவற்றை அம்பலப்படுத்தி, விரிவான பிரச்சார இயக்கமெடுத்து, அவர்களை கோகோ கோலா பருகுவதைப் புறக்கணிக்குமாறு அறைகூவல் விடுக்கலாம்; ஏதாவதொரு நாசவேலை செய்து கூட, கோகோ கோலாவின் உற்பத்தியை முடக்கலாம்.

கோகோ கோலா போன்ற பன்னாட்டு நிறுவனங்களுக்குச் சாதகமாக, தொழிலாளர் நலச் சட்டங்கள் அப்பட்டமான தொழிலாளர் விரோதச் சட்டங்களாகத் திருத்தப்படும் அபாயம் இன்று எழுந்து நிற்கிறது. இந்நிலையில், போராடும் தொழிலாளர்கள் சட்டபூர்வ போராட்டங்கள், பேச்சு வார்த்தை மூலம் மட்டுமே தமது கோரிக்கைகளை வென்றெடுத்துவிட முடியும் என்று எண்ணிக் கொண்டிருப்பது விழலுக்கு இறைத்த நீராகக்கூட முடிந்து விடும். எனவே, கோகோ கோலாவை எதிர்த்துப் போராடும் தொழிலாளர்களும், ஊழியர்களும் அதனின் உற்பத்தியை முடமாக்கும் வண்ணம் போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும். இதற்கு தனியார்மயம்-தாராளமயத்தை எதிர்க்கும் பிற தொழிற்சங்கங்களின் உதவியையும், ஒத்துழைப்பையும் கோரிப் பெற வேண்டும்.

**— செய்தியும் கருத்துகளும்:**
**புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, சென்னை.**

www.padippakam.com

## யூனிட் டிரஸ்டு மோசடி:

# அதிகாரிகள் - அரசியல்வாதிகளின் இன்னுமொரு கூட்டுக் கொள்ளை

“காய்ஞ்சு போன நதிகளெல்லாம் வத்தாத நதியைப் பார்த்து ஆறுதலடையும்னு சொல்லுவாங்க. அந்த நதியே காய்ஞ்சு போனா?...'' என்று தமிழ்த் திரைப் படப்பாடலில் வரும் வசனம் மக்களிடையே பிரபலமானது. தனியார் நிதி நிறுவனங் களின் மோசடிகளால் போண்டியாகிப் போன வர்கள், அரசாங்க நிதி நிறுவனமான யூனிட் டிரஸ்ட்-ஐப் பார்த்து நம்பிக்கையும் ஆறு தலும் கொண்டிருந்தார்கள். இப்போது அர சாங்கத்தின் பரஸ்பர சகாய நிதி நிறுவனமான - யூனிட் டிரஸ்ட் நிறுவனமே திவாலாகிப் போனால் என்ன செய்வது? அரசாங்க நிறுவ னமே மோசடி செய்தால் இனி யாரைத்தான் நம்புவது? என்று ஏறத்தாழ 2 கோடிக்கும் மேலான நடுத்தர வர்க்கத்தினர் தமது முதலீ டுகள் என்னவாகுமோ என்ற பீதியில் உறைந்து போயுள்ளனர்.

''அப்படியெல்லாம் விபரீதமாக அஞ்ச வேண்டாம். நிதித்துறை - நிர்வாகக் குளறுப டிகளால் தவறுகள் நேர்ந்துவிட்டன. யூனிட் டிரஸ்டின் தலைவரை நீக்கி விட்டு புதிய தலைவரை நியமித்துள்ளோம். மையப் புல னாய்வுத் துறையின் (சி.பி.ஐ.) விசார ணைக்கு உத்தரவிட்டுள்ளோம். முதலீட்டா ளர்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் காப்போம்'' என்கிறது மைய அரசு.

ஆனால், யூனிட் டிரஸ்டின் திவால் நிலை என்பது வெறுமனே நிதித்துறை குளறுபடி களால் நிகழ்ந்ததல்ல; நிர்வாகச் சீர்கேட் டினால் ஏற்பட்டதுமல்ல. இது அரசாங்கமே நடத்திய மிகப் பெரிய மோசடி! தரகுப் பெரு முதலாளிகள், பங்குச் சந்தை சூதாடிகளின் பகற்கொள்ளைக்காக, அரசாங்க நிறுவ னத்தில் முதலீடு செய்த வர்களின் நிதியை எடுத்துச் சூறையாடிய அயோக்கியத்தன மான செயல்! இதன் விளைவாக யூனிட் திட்டம் 1964-இன் (யு.எஸ்.64) பங்கு விற்பனை மற்றும் மறு கொள்முதலை, கடந்த ஜூலை 2-ஆம் தேதி யிலிருந்து ஆறு மாதங் களுக்கு பா.ஜ.க. அரசு முடக்கி வைத்து, இத்திட்டத்தில் பணத்தைப் போட்டுள்ள முதலீட் டாளர்களின் தலையில் மிளகாய் அரைத்துள்ளது. அதுமட்டுமல்ல; ஏறத்தாழ 15,000 கோடி ரூபாய்க்கும் மேலாகச் சூறையாடப்பட்டுள்ள நிலையில், அந்த இழப்பு அனைத்தும் கோடானுகோடி உழைக்கும் மக்களின் தலையிலேயே சுமத் தப்பட்டுள்ளது.

யூனிட் டிரஸ்டில் நடந்த மோசடி பற்றி அறிந்து கொள்ளும் முன்பாக, யூனிட் டிரஸ்ட் என்றால் என்ன என்பதை அறிந்து கொள்வது அவசியமாகிறது. யூனிட் டிரஸ்ட் என்பது அரசாங்கமே நடத்தும் சூதாட்ட நிறு வனம். பெரு நகரங்களில் உள்ள பரஸ்பர சகாய நிதி நிறுவனம் போல, ஆதாயம் முழு வதும் முதலீடு செய்தவர்களுக்கே கிடைக்கும் அரசாங்கக் காப்புறுதி நிறுவனம் ஆகும். அரசு வங்கிகளில் மட்டுமே பணத்தை முதலீடு செய்து சேமித்து வந்த மக்களிடம், பங்குச் சந்தையில் சூதாட வழி காட்டி, முதலீட்டுக்கு உத்திரவாதமும் தரும் வகையில் 1960-களில் யூனிட் டிரஸ்ட் நிறு வனம் தொடங்கப்பட்டது. தனியார் நிதி நிறு வனமென்றால் மோசடி நடக்கும் என்று அஞ்சிய மக்களுக்கு, அரசாங்கமே முன்னி ருந்து பொறுப்பேற்று சூதாட அழைத்தது. யூனிட் டிரஸ்டின் மூலம் 1964-இல் யூனிட் திட்டம் (யு.எஸ். 64) என்ற திட்டம் அறிவிக் கப்பட்டது. இதில் முதலீடு செய்து நீங்கள் பங்குகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும். உங்கள் முதலீடுகளைக் கொண்டு அரசாங் கமே பங்குச் சந்தையில் சூதாடும்; அல்லது அரசாங்கக் கடன் பத்திரங்களை வாங்கும். கிடைக்கும் இலாபத்தை அனைவருக்கும் பங்கிட்டுக் கொடுக்கும்.

அரசாங்கமே பொறுப்பேற்பதால் மோசடி நடக்காது; முதலீடு செய்த பணமும் பாதுகாப்பாக இருக்கும்; ஆண்டுதோறும் இலாப ஈட்டுத் தொகையும் முறையாகக் கிடைக்கும்; வங்கியில் பணத்தைச் சேமிப் பதில் கிடைக்கும் வட்டியைவிட இதில் கூடுதல் இலாபம் கிடைக்கிறது என்று படிப் படியாக மேட்டுக்குடியினரும் நடுத்தர வர்க்கத்தினரும், ஓய்வூதியம் பெறுவோரும் நம்பிக்கையுடன் யூனிட் டிரஸ்டில் முதலீடு செய்யத் தொடங்கினர். 30 ஆண்டுகளுக்குள் ஏறத்தாழ 2 கோடி முதலீட்டாளர்களையும், ரூ. 20,000 கோடி நிதியிருப்பும் கொண்ட தாக, இந்திய நிதித் துறையில் முக்கிய அங்கம் வகிக்கும் நிறுவனமாக யூனிட் டிரஸ்ட் முன்னேறியது.

அரசாங்கக் கடன் பத்திரங்கள், அரசுத் துறை நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்தல், வரம்புக்குட்பட்ட சில தனியார் நிறு வனங்களின் பங்குகளை வாங்கிப் பங்குச் சந்தையில் சூதாடுதல் முதலானவை யூனிட் டிரஸ்டின் நடவடிக்கைகளாக இருந்த வரையில் பெரிய அளவில் பிரச்சினைகள் எழவில்லை. முதலீட்டாளர்களுக்கு இலாப ஈட்டுத்தொகையும் முறையாகக் கிடைத்து வந்தது.

1990-களில் புதிய பொருளாதாரக் கொள்கை அறிவிக்கப்பட்டதும், அரசு காப்பு றுதி நிறுவனமான யூனிட் டிரஸ்டும் தனியார் பெரு முதலாளிகளுக்குச் சேவை செய்யும் வகையில், அவர்கள் பகற்கொள்ளையடிக்க ஏற்பாடு செய்துதரும் வகையில் செயல்படத் தொடங்கியது. இது நாள்வரை அரசாங்கக் கடன் பத்திரங்களில் முதலீடு செய்து வந்த யூனிட் டிரஸ்ட், 1993-இல் தரகுப் பெருமுதலாளித்துவ நிறுவனங்களின் பங்கு களை பல்லாயிரம் கோடிகளுக்கு வாங்கி யது. ஏற்கனவே மீளமு டியாத நெருக்கடியில் சிக்கிக் கிடக்கும் இந்தியப் பொருளாதா ரத்தை முட்டுக் கொடுத்து தூக்கி நிறுத் தவும், பங்குச் சந்தையில் செயற்கை யான சுறுசுறுப்பை ஏற்படுத்தித் தரகு முத லாளிகளின் வர்த்தகத் துக்கும் சூதாட்டத்

திவாலாகி நிற்கும் மும்பை யூனிட் டிரஸ்ட் நிறுவனத்தின் தலைமை அலுவலகம். ரூ. 15,000 கோடி அம்போ!





படிப்பகம்

www.padippakam.com

துக்கும் சேவை செய்யவும், நடுத்தர வர்க்கத்தினரைப் பங்குச் சந்தை சூதாட்டத்துக்கு ஆசை காட்டி இழுக்கவும், அரசாங்கமே தரகுப் பெருமுதலாளித்துவ நிறுவனங்களின் பங்குகளை வாங்குமாறு யூனிட் டிரஸ்டுக்கு வழிகாட்டியது.

1996-இல் பங்குச் சந்தையில் ஏற்பட்ட விலை வீழ்ச்சியால், யூனிட் டிரஸ்ட் பெருத்த நட்டமடைந்தது. தனது முதலீட்டாளர்களுக்கு இலாப ஈட்டுத் தொகையைக் கூட கொடுக்க முடியாமல், இருப்பு நிதியிலிருந்து ரூ. 796 கோடியை எடுத்துச் செலவிட்டது. ஒவ்வொரு ஆண்டும் இப்படி இருப்பு நிதியே கரையத் தொடங்கி நெருக்கடி முற்றியதும், மைய அரசு ரூ. 3300 கோடியை ஒதுக்கி யூனிட் டிரஸ்ட் திவாலாகி விடாமல் முட்டுக் கொடுத்தது. ஆனாலும் நெருக்கடி தீரவில்லை. பிரச்சினையை ஆராய 1999-இல் நிறுவப்பட்ட பரேக் கமிட்டி, தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களிலும் நுகர்பொருள் துறையிலும் முதலீடு செய்யுமாறு கேடுகெட்ட ஆலோசனையைக் கூறியது. அதன்படி கணினி மென்பொருள் துறையில் ஒளிமயமான எதிர்காலம் உள்ளதாகக் கருதி, யூனிட் டிரஸ்ட் நிறுவனம் பல்லாயிரம் கோடிகளுக்குப் பங்குகளை வாங்கிக் குவித்தது.

குறிப்பாக பங்குச் சந்தை தரகன் கேதான் பரேக், செயற்கையாக ஊதிப் பெருக்கிக் காட்டிய "கே-10" எனப்படும் பெருமுதலாளித்துவ ஊக வணிக நிறுவனங்களின் பங்குகளை யூனிட் டிரஸ்ட் கண்ணை மூடிக் கொண்டு வாங்கியது. இந்தியாவின் தகவல் தொழில்நுட்பத் துறையும், கணினி மென்பொருள் ஏற்றுமதியும் ஆண்டுக்கு 50% வீதம் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறும் என்ற ஊக வணிக மதிப்பீட்டை நம்பி, ஏறத்தாழ 3000 கோடியை வாரியிறைத்தது. உலகின் கணினி மென்பொருள் சந்தையில் இந்தியாவின் பங்கு ஒரு சதவீதம் கூட இல்லாத நிலையில், தரகுப் பெருமுதலாளிகளின் பகற்கொள்ளைக்காகவே இவ்வாறு ஊகங்களும் மதிப்பீடுகளும் செயற்கையாக உருவாக்கப்பட்டன. கடந்த ஆண்டு டிசம்பரில் தொலை தொடர்பு நிறுவனங்களின் பங்குகள் வீழ்ச்சியாலும், பங்குச் சந்தை தரகன் கேதான் பரேக்கின் மோசடியாலும், தனது இருப்பு நிலையில் 60%-ஐ யூனிட் டிரஸ்ட் பறிகொடுத்தது.

இவையெல்லாம் ஏதோ சில மோசடி நிதி நிறுவனங்களையும், பங்குச் சந்தை மோசடித் தரகர்களையும் நம்பி ஏமாந்ததால் ஏற்பட்ட இழப்பு அல்ல. தரகு முதலாளிகளும் அரசாங்கமும் யூனிட் டிரஸ்டின் அதிகாரிகளும் கூட்டுச் சேர்ந்து நடத்திய மோசடியே இது. யூனிட் டிரஸ்டின் தலைவராக இருந்த சுப்ரமணியம் என்ற அதிகாரி, முன்பு பா.ஜ.க.வும் அ.தி.மு.க.வும் கூட்டணி கட்டிக் கொண்ட காலத்தில், ஜெயலலிதாவின் பரிந்துரைப்படி பா.ஜ.க. அரசால் இப்பதவியில் நியமிக்கப்பட்டவர். அப்புறம் மோசடியைப் பற்றிச்



**யூனிட் டிரஸ்டின் மோசடித் தலைவர் சுப்பிரமணியம்.**

சொல்லவா வேண்டும்? யூனிட் டிரஸ்டில் ஏற்கனவே பின்பற்றப்பட்டு வந்த நெறிமுறைகள் அனைத்தும் குப்பைக் கூடையில் வீசப்பட்டு, தரகுப் பெருமுதலாளிகளின் கொள்ளைக்காக யூனிட் டிரஸ்ட் தாரை வார்க்கப்பட்டது.

இந்த மோசடியில் தரகுப் பெருமுதலாளிகளோடு வெளிப்படையாகவே கூட்டுச் சேர்ந்துள்ள ஆளும் இந்துவெறி பாசிச கும்பல் பல ஆயிரம் கோடிகளைச் சுருட்டி ஏப்பம் விட்டுள்ளது. யூனிட் டிரஸ்ட் அதிக விலைக்கு பங்குகளை வாங்கிய நிறுவனங்களில் சைபர்ஸ்பேஸ் இன்போசிஸ் என்ற தகவல் தொழில்நுட்ப நிறுவனம் முக்கியமானது. கடந்த ஆண்டில் இந்நிறுவனத்தின் பங்குகளை ரூ. 930 வீதம் பலநூறு கோடிகளுக்கு யூனிட் டிரஸ்ட் வாங்கியது. இன்று இந்நிறுவனத்தின் பங்கு மதிப்பு வெறும் 5 ரூபாய் தான்!

சைபர்ஸ்பேஸ் இன்போசிஸ் நிறுவனத்தின் முதலாளிகளான ஜோஹ்ரி சகோதரர்களும் இந்துவெறி பாசிசத் தலைவர்களும் நெருங்கிய கூட்டாளிகள். குறிப்பாக, உ.பி. மாநில முதல்வர் ராஜ்நாத் சிங்கும்; விசுவ இந்து பரிஷத்தின் தலைவர் பிரதீப் நாராயணன் மாத்தூரும், ஆர்.எஸ்.எஸ். தலைவர்களும் இந்நிறுவனத்தின் மறைமுகப் பங்குதாரர்கள். ஜோஹ்ரி சகோதரர்களின் நிறுவனமும், ராஜ்நாத் சிங் தலைமையிலான உ.பி. மாநில பா.ஜ.க. அரசும் கூட்டுச் சேர்ந்து "சைபர்டன் டெக்னோபொலிஸ்" என்ற கணினி மென்பொருள் தொழில்நுட்ப நிறுவனத்தைத் தொடங்கியுள்ளன. கடந்த ஜனவரி 31-ஆம் தேதியன்று லக்னோவில் இந்த கூட்டுப் பங்கு நிறுவனத்தை பிரதமர் வாஜ்பாய் தொடங்கி வைத்தார்.

மாநில அரசுடன் கூட்டு சேர்ந்துள்ள நிறுவனம், பிரதமரே தொடங்கி வைக்கும் நிறுவனம் என்ற மேல்மட்ட செல்வாக்கைக் காட்டி, அடுத்த சில நாட்களிலேயே ஜோஹ்ரி சகோதரர்கள் அரசு வங்கிகளிடமிருந்து ரூ. 150 கோடிக்கும் மேலாகச் சுருட்டி ஏப்பம் விட்டனர். உ.பி. மட்டுமின்றி, பிரதமர் அலுவலகம்வரை செல்வாக்கு செலுத்தியதாலும், ஆளும் இந்துவெறி பாசிச கும்பலின் நிர்பந்தத்தாலும் யூனிட் டிரஸ்ட் நிறுவனம் ஜோஹ்ரி சகோதரர்களின் மோசடி நிறுவனப் பங்குகளை அதிக விலைக்கு வாங்கிக் குவித்தது. இன்று ஜோஹ்ரி நிறுவனத்தின் பங்குகள் செல்லாக் காசாகி விட்டன. ஒட்டுமொத்த மோசடியில், இந்த விவகாரம் ஒரு உதாரணம்தான். இப்படித்தான் யூனிட் டிரஸ்டின் நிதியானது தரகுப் பெருமுதலாளிகளாலும் அவர்களுடன் தொப்புள் கொடி உறவு கொண்டுள்ள அதிகார வர்க்கத்தாலும் ஆளும் இந்துவெறி கயவர்களாலும் சூறையாடப்பட்டுள்ளது. ஏறத்தாழ ரூ. 15,000 கோடிக்கு மேல் இருப்பு நிதியை இழந்து திவாலாகி விட்ட நிலையில், யூனிட் டிரஸ்ட் நிறுவனம் இப்போது பங்கு விற்பனை மற்றும் கொள்முதலை முடக்கி வைத்துள்ளது.

ஏற்கனவே யூனிட் டிரஸ்ட் நிறுவனம் திவாலாகும் நிலையில் உள்ளதை அறிந்த பெருமுதலாளிகள், அவசரமாக தமது பங்குகளைக் காசாக்கிக் கொண்டு வெளியேறிவிட்டதால், அவர்களுக்கு எந்தப் பாதிப்புமில்லை. யூனிட் டிரஸ்டின் நிதியைச் சூறையாடியதோடு, அதில் முதலீடு செய்த தமது பணத்தையும் திரும்பப் பெற்று இரட்டிப்பு இலாபத்தைக் குவித்துள்ளனர். ஆனால் அரசாங்க காப்பீடு நிறுவனத்தை நம்பி முதலீடு செய்த நடுத்தர வர்க்கத்தினர்தாம் இன்று ஏமாந்து நிற்கின்றனர்.

மோசடி அம்பலமானதும் யூனிட் டிரஸ்டின் தலைவரான சுப்பிரமணியம் நீக்கம், ஜோஹ்ரி சகோதரர்கள் கைது, மையப் புலனாய்வுத் துறையின் விசாரணை முதலானவற்றைக் காட்டி, யாரும் பீதியடைய வேண்டாம் என்று ஆறுதல் கூறுகிறது மைய அரசு. யூனிட் டிரஸ்டின் இழப்பை விரைவில் ஈடுசெய்வோம்; பங்கு விற்பனை முடக்கப்பட்டுள்ளதால், முதலீடு செய்தவர்களுக்கு தற்போதைக்கு முதலீட்டின் மீது 12% அளவுக்கு வெகுமதித் தொகையை அளிக்க ஏற்பாடு செய்வோம் என்கிறது.

ஆனால், இழப்பை ஈடு கட்டவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கவும், யாருடைய பணத்திலிருந்து மைய அரசு கொடுக்கப் போகிறது என்பதுதான் கேள்வி. யூனிட் டிரஸ்டைச் சூறையாடிய தரகுப் பெருமுதலாளிகள், பங்குச் சந்தை தரகர்கள், அதிகாரிகள், ஆளும் இந்துவெறியர்களிடமிருந்து பறித்தெடுத்துக் கொடுக்கப் போகிறதா? நிச்சயமாக இல்லை. இந்த இழப்பை ஈடுகட்ட, கோடானுகோடி உழைக்கும் மக்களிடமிருந்து பெறப்படும் வரிப்பணத்திலிருந்துதான் கொடுக்கப் போகிறது. அதாவது, இந்த ஊழலுக்கும் மோசடிக்கும் பகற்கொள்ளைக்கும் எந்த வகையிலும் நேரடியாகத் தொடர்பே இல்லாத, வறுமையில் உழலும் கோடிக்கணக்கான உழைக்கும் மக்களை மேலும் கசக்கிப் பிழிந்து நிதிப் பற்றாக்குறையையும் இழப்

www.padippakam.com

# சூதாட்டத்தில் வீழ்ந்த போலி கம்யூனிஸ்டுகள்

இடது - வலது போலி கம்யூனிஸ்டுகள் ஓட்டுப் பொறுக்கும் அரசியல் சூதாட்டத்தில் தோற்றுப்போய் ஓட்டாண்டிகளாக நிற்கின்றனர் என்பது யாவரும் அறிந்ததுதான். இப்போது இவர்கள் பொருளாதாரச் சூதாட்டத்திலும் தோற்றுப்போய் கையைப் பிசைந்து கொண்டு நிற்கின்றனர். பங்குச் சந்தை - ஊக வணிகத்தை எதிர்ப்பதாக நாடகமாடும் இந்த யோக்கிய சிகாமணிகள், யூனிட் திட்டம் 64-இல் முதலீடு செய்து பல இலட்சங்களைப் பறிகொடுத்துவிட்டு நிற்கின்றனர்.



கட்சி அணிகளிடம் சந்தா, பொதுமக்களிடம் நன்கொடை எனக் கோடிக்கணக்கில் நிதி திரட்டியுள்ள இக்கட்சிகள், இவற்றில் சில இலட்சங்களை யூனிட் திட்டத்தில் முதலீடு செய்துள்ளன. ''ரூபாயின் மதிப்பு நாளும் சரிவதால், அதைக் கட்சி அலுவலகத்தில் வெறுமனே பூட்டி வைப்பது சரியல்ல; முடங்கிக் கிடக்கும் பணத்தால் யாருக்கும் பயனில்லை'' என்று யூனிட் திட்டத்தில் கட்சி நிதியை முதலீடு செய்ததை நியாயப்படுத்தி சித்தாந்த விளக்கம் அளிக்கிறார், வலது கம்யூனிஸ்டு கட்சியின் அகில இந்தியச் செயலாளரான பரதன். எனவேதான், யூனிட் டிரஸ்ட் நிறுவனம் பங்குச் சந்தை சூதாட்டத்தில் ஈடுபட்டபோது அதைத் தடுத்து நிறுத்தவோ, கண்டிக்கவோ கூட இக்கட்சிகள் முன்வரவில்லை. யூனிட் திட்டத்தில் அதிக இலாபம் கிடைத்தால் ஆதாயம்தானே என்று நடுத்தர வர்க்கத்தினரைப் போலவே பேராசையுடன் எதிர்பார்த்தனர். இப்போது யூனிட் டிரஸ்ட் நிறுவனமே திவாலாகும் நிலைக்குத் தள்ளப்பட்ட பிறகு, பணத்தைப் பறிகொடுத்த நடுத்தர வர்க்கத்தினரைப் போலவே புலம்புகின்றனர்; கண்டனம் தெரிவிக்கின்றனர். தனியார் நிறுவனங்கள் மோசடியானவை; அரசுத் துறை நிறுவனங்கள் மக்களுக்கானவை என்று உழைக்கும் மக்களை இத்தனை காலமும் ஏய்த்து வந்த போலி கம்யூனிஸ்டுகளுக்கு அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பொருத்தமான பரிசுதான் கிடைத்திருக்கிறது.

''ஐயோ! இப்படி மோசம் போய் விட்டீர்களே!'' என்று கட்சி அணிகள் வைக்கும் குற்றச்சாட்டின் வாயடைக்க, ''அதிகமில்லை தோழர்களே, 5 லட்ச ரூபாய்தான் பறிபோய்விட்டது; பெருமளவு நிதியை தேசிய வங்கிகளிலும், அரசுத்துறை நிறுவனப் பங்குகளிலும் தான் முதலீடு செய்துள்ளோம்'' என்று முன்கூட்டியே சமாதானம் கூறுகிறார் பரதன். இடது கம்யூனிஸ்டுகளோ வலதுகளை விட அதிகமான தொகையை யூனிட் திட்டத்தில் பறிகொடுத்துள்ளனர். 'கட்சி இரகசியம்' என்று வெளிப்படையாக அறிவிக்க மறுக்கின்றனர்.

ஒரு புரட்சிகர கம்யூனிஸ்டு கட்சிக்கு கட்சியின் அணிகள்தான் உண்மையில் மதிப்பிடற்கரிய பெரும் சொத்து. புரட்சியை பூசையறையில் வைத்துவிட்ட போலி கம்யூனிஸ்டுகளோ, பணத்தையும் பங்களாக்களையுமே சொத்தாக மதிக்கின்றனர். எனவேதான், சொத்தைப் பெருக்க முதலாளித்துவவாதிகளின் வழியில் கிளம்பி, இப்போது அதையும் பறிகொடுத்துவிட்டு நிற்கின்றனர். என்ன செய்வது? நாயோடு படுத்தால் உண்ணியோடுதானே எழுந்திருக்க முடியும்!

பையும் ஈடு செய்வோம் என்கிறது இந்து வெறி பாசிச அரசு.

முதலாளித்துவ நாடுகளில் கூட ஓய்வூதியம், சேமநல நிதி முதலான முதலீடுகளை பங்குச் சூதாட்டத்தில் ஈடுபடுத்த அனுமதிப்பதில்லை. ஆனால், ஏழை நாடான இந்தியாவில், மக்களின் அற்ப சேமிப்புகளையும் கூடப் பறித்தெடுத்து முதலாளிகளின் பகற்கொள்ளைக்கு பகிரங்கமாகச் சேவை செய்கிறது ஆளுங் கும்பல். யூனிட் டிரஸ்ட் மட்டுமின்றி, நமது வரிப்பணத்தில் உருவாக்கப்பட்ட அரசுத்துறை நிறுவனங்களையும் நட்டப்படுத்தி, திவாலாக்கி அவற்றை அடிமாட்டு விலைக்கு தனியார் - அந்நிய முதலாளிகளுக்குத் தாரை வார்க்கப்படுகிறது. அந்த வழியில் இப்போது தரகுப் பெரு முதலாளிகளின் சூறையாடலுக்குப் பிறகு திவாலாகி நிற்கும் யூனிட் டிரஸ்ட் நிறுவனத்தையும் தனியாருக்கு விற்றுவிட ஆலோசித்து வருகிறது.

யூனிட் டிரஸ்ட் திவாலானால் எனக்கென்ன? எங்கேயோ மேல்மட்டத்தில் நடக்கும் ஊழல் - மோசடிகளால் எனக்கு நேரடியாக பாதிப்பு இல்லாதபோது, அதைப்பற்றி ஏன் அக்கறைப்பட வேண்டும்? எனக்கு என் பிழைப்பைப் பார்க்கவே நேரம் போதவில்லை என்று உழைக்கும் மக்கள் ஒதுங்கிவிட முடியுமா? வங்கி - பங்கு பத்திர ஊழல், யூனிட் டிரஸ்ட் மோசடி, அரசுத்துறை நிறுவனங்கள் தனியாருக்கு விற்பனை என்று தனியார்மய - தாராளமயக் கொள்கையால் மக்களின் வரிப்பணமும் பொதுச்சொத்துக்களும் தரகுப் பெரு முதலாளிகளாலும் ஏகாதிபத்தியங்களாலும் கோடிகோடியாய் சூறையாடப்படும்போது, நாம் வெறுமனே வேடிக்கை பார்க்கத்தான் முடியுமா? இதனால் ஏற்படும் இழப்புகளை ஈடுகட்ட நம் தலைமீது திணிக்கப்படும் விலையேற்றம், கட்டண உயர்வு மற்றும் கூடுதல் வரிச் சுமைகளை இனியும் சகித்துக் கொள்ளத் தான் முடியுமா? ஒருக்காலும் முடியாது. புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் நாட்டையும் மக்களையும் சூறையாடி வரும், தரகு முதலாளிகளையும் அந்நிய ஏகாதிபத்தியங்களையும் அவற்றுக்கு விசுவாசமாகச் சேவை செய்யும் ஆளும் இந்துவெறி பாசிச கும்பலையும் தூக்கியெறிந்து, அவை கொள்ளையடித்த சொத்துக்களை நட்டஈடின்றிப் பறிமுதல் செய்து, உழைக்கும் மக்களின் அரசமைக்க பெரும் புரட்சியில் இறங்குவதைத் தவிர வேறு வழியும் கிடையாது.

நடுத்தர வர்க்கத்தின் நம்பிக்கை தகர்ந்தது: ''அரசாங்கமே இப்படி மோசடி செய்து விட்டதே!'' என்று யூனிட் டிரஸ்ட் அலுவலகம் முன்பு புலம்பும் சிறு முதலீட்டாளர்கள்.



• குமார்

www.padippakam.com

# மேற்காசியாவுக்கு இஸ்ரேல்! தெற்காசியாவுக்கு இந்தியாவா?

நாட்டை அமெரிக்காவுக்கு அடிமைப்படுத்துவதில் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறிவரும் ஆளும் பா.ஜ.க. கும்பல், இப்போது அமெரிக்க இராணுவத்துக்கு காட்டுப் போர் பயிற்சி அளிக்கக் கிளம்பி, அப்பட்டமான அடியாளாகத் தன்னை நிரூபித்துக் காட்டியுள்ளது. ஏற்கனவே அமெரிக்காவின் அணு ஆயுத ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டத்துக்கு விசுவாசமாக வாலாட்டிய பா.ஜ.க. கும்பல், அமெரிக்க இராணுவத்துக்கு காட்டுப் போர் பயிற்சி அளிப்பதன் மூலம், இந்தியாவின் பாதுகாப்பையே அமெரிக்காவுக்குக் காட்டிக் கொடுத்துவிட்டது.

வடகிழக்கு மாநிலமான மிஜோரத்தின் அடர்ந்த காட்டுப் பகுதியில் இந்திய இராணுவம் பயங்கரவாத பயிற்சிப் பள்ளியை நடத்தி வருகிறது. வடகிழக்கிந்தியாவின் தேசிய சுய நிர்ணய உரிமைப் போராளி இயக்கங்களை அழித்தொழிப்பதற்கென்றே இந்திய இராணுவச்சிப்பாய்களுக்கு இங்கே காட்டுப்போர் பயிற்சி அளிக்கப்படுகிறது. அண்மையில் இந்திய இராணுவ (பொறுப்பு) அமைச்சரான ஜஸ்வந்த் சிங், அமெரிக்காவுக்குச் சென்றபோது, அமெரிக்க இராணுவத்துக்கும் இத்தகைய காட்டுப்போர் பயிற்சி அளிக்க இரு நாடுகளுக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி, இந்தியாவின் வடகிழக்கு எல்லைப்புற காட்டுப் பகுதியில், அமெரிக்க இராணுவத்துக்கு கொரில்லா முறையிலான காட்டுப்போர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து அமெரிக்க இராணுவத்துக்கு இத்தகைய தனிச்சிறப்பான காட்டுப்போர் பயிற்சி அளிக்கப்படும் என்றும் இந்திய அரசு அறிவித்துள்ளது.

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் காட்டுப் போர் நடத்தவோ, கூட்டாகத் தாக்குதல் நடத்தவோ பொது எதிரி யாருமில்லை. ஆனால், அமெரிக்காவின் தலையீடும் ஆதிக்கமும்தான் உலக மக்களுக்கும் ஏழை நாடுகளுக்கும் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. இந்நிலையில் உலகப் பொது எதிரி அமெரிக்காவுடன் கூட்டாக தரைப்படை, கடற்படை பயிற்சிகளை நடத்திய இந்தியா, இப்போது அமெரிக்காவுடன் சேர்ந்து காட்டுப்போர் பயிற்சியும் நடத்தியுள்ளது. இத்தகைய நடவடிக்கைகளின் மூலம், இந்துமாக் கடலில் உள்ள டிகோகார்சியா தீவில் அணு ஆயுத தளம் அமைத்துள்ள அமெரிக்கா, இப்போது இந்தியாவையும் தனது தளமாக்கிக் கொண்டு உலகை மேலாதிக்கம் செய்ய பா.ஜ.க. அரசு விசுவாசமாக ஏற்பாடு செய்து கொடுத்துள்ளது.

மேற்காசியாவில் உள்ள இஸ்ரேலைப் போல, தெற்காசியாவில் அமெரிக்காவின் அடியாளாக இந்தியாவை மாற்றத் துடிக்கும் பா.ஜ.க. கும்பலுக்கு நாட்டுப்பற்று குறித்துப் பேச என்ன அருகதை இருக்கிறது?

## வாசகர் கடிதம்

★ ஆந்திர நக்சல்பரி பெண் தோழர் பற்றிய கட்டுரை படித்தேன். நக்சல்பரியின் தியாகங்கள் நாட்டு மக்களுக்கு வழிகாட்டியாக உள்ளது. இக்கட்டுரை என் உணர்வைத் தட்டியெழுப்பி உள்ளது.

— சு. பழனிவேல்,
மேலிருப்பு.

★ மிகத் தெளிவான தலையங்கம். ஜெயலலிதாவின் அடாவடித்தனத்தை எழுதிய அளவிற்கு தி.மு.க.வின் பிழைப்புவாதத்தை அதன் அதிகாரவர்க்க சமரசப் போக்கையும் இன்னும் தோலுரித்து எழுதியிருக்க வேண்டும். முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம்., மார்க்சிய தத்துவ - அரசியலுக்கு தெளிவான புரிதலை ஏற்படுத்தும் கட்டுரை.

— செம்மலர். மா. நடராசன்,
அறந்தாங்கி.

★ தாராளமயத் தாசர்களும், நவீன எட்டப்பர்களும், இந்தக் கட்டுரை மிகவும் தேவையான அவசியமான கட்டுரை. மக்கள் வாழ்வியல் போராட்டங்களை மழுங்கடித்து அவர்களின் உணர்வுகளை கூர் மழுங்க செய்வது, கம்யூனிசத்துக்கு மாற்றாக பொம்மலாட்டம் நடத்துவது - இவைதான் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உள்நோக்கம். இதை தோலுரித்துக் காட்டியிருப்பது சிறப்பு.

— பு.ஜ. வாசகர்கள்,
மணல் மேல்குடி.




★ தலையங்கம் நிகழ்ச்சிகளை விவரிப்பதாக உள்ளது. எனவே 'வளவளா' என்று உள்ளது. முடிவில், மக்கள் எந்தப் பாதையைப் பின்பற்ற வேண்டும் என்று தெளிவாக இல்லாமல் பூடகமாக உள்ளது. தலைய்ங்கம் சுருக்கமாக, கறாராக, தெளிவாக இருக்க வேண்டும் என்ற வரையறையில் இல்லை.

கருணாநிதி கைது நடந்து பத்து நாட்களுக்குப் பிறகு பத்திரிகை வந்திருப்பது ரொம்பவும் தாமதமானது. உரிய காலத்தில் பத்திரிகை வரவேண்டும். அட்டைப் படம் முன், பின் பக்கங்களில் உள்ளவை எளிமையாகவும் கருத்தாழமிக்கதாகவும் உள்ளன.

— பு.ஜ. வாசகர் வட்டம்,
சென்னை.

★ தாராளமயத் தாசர்களும், நவீன எட்டப்பர்களும் தொடர் கட்டுரையில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பன்னாட்டு கம்பெனிகளுக்கு ஆதரவாக எப்படி செயல்படுகிறது என்பதைச் சுட்டிக் காட்டியது அருமை.

— சோணை முத்து,
திருப்புவனம்.

★ ஜூலை மாத இதழ் தலையங்கம் குறிப்பான விசயத்தை விட்டு விட்டு, செய்திகளைச் சொல்வது போல் அமைந்துள்ளது. அரசு இயந்திரத்தை அம்பலப்படுத்த வேண்டிய தருணத்தில் பக்கங்களை நிரப்புவதற்காக தலையங்கம் எழுத வேண்டாம். சாமானியர்களின் மீது போலீசு அத்துமீறல்களின் படங்கள் நமது பத்திரிகையில் இருக்கும்போது கண் சிவக்க வேண்டிய தலையங்கம் ஏனோ தானோ என்று இருந்தது.

— ஏ.எஸ். முத்து,
விக்கிரமசிங்கபுரம்.

படிப்பகம்

www.padippakam.com

## நாகா போர் நிறுத்த ஒப்பந்தம்

# இன விடுதலைப் போர் இனச் சண்டையாகியது

கடந்த ஜூன் 14-ஆம் தேதியன்று மணிப்பூர் மாநிலத் தலைநகரான இம்பால் கொழுந்துவிட்டு எரிந்தது. நூற்றுக்கணக்கில் திரண்ட மாணவர்களும் இளைஞர்களும் சட்டப் பேரவை மற்றும் தலைமைச் செயலகக் கட்டிடங்களைத் தீயிட்டுக் கொளுத்தினர். பாரதீய ஜனதா, காங்கிரசு; மணிப்பூர் மக்கள் கட்சி முதலான ஓட்டுக் கட்சிகளின் அலுவலகங்கள் அடித்து நொறுக்கப்பட்டு தீயிடப்பட்டன. ஆளுநர் மாளிகை முற்றுகையிடப்பட்டு கல்லெறிந்து தாக்கப்பட்டது. சட்டப் பேரவைத் தலைவர் தனஞ்ஜாய் சிங்கின் வீடு தீயிடப்பட்டு, தீயில் சிக்கிய அவர் உயிருக்குப் போராடும் நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மத்திய அமைச்சர் சௌபாசிங்கின் வீடும், மாநில அமைச்சர்கள் எம்.எல்.ஏ.க்களின் வீடுகளும் மாணவர்களால் தீயிடப்பட்டன. மணிப்பூரில் பற்றிய இக்கலவரத் தீயை ஒடுக்க போலீசும் துணை இராணுவப் படைகளும் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 20-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். மாநிலமெங்கும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, கேபிள் தொலைக்காட்சி மற்றும் இணைய தளத் தொடர்புகளும் நிறுத்தப்பட்டு நேரடியாக ''போலீசு ராஜ்ஜியம்'' நிறுவப்பட்டது.

மணிப்பூர் மாநிலத்தில் இந்த அளவுக்கு வன்முறைக் கலவரமும் போலீசு அடக்குமுறையும் தொடரக் காரணம் என்ன?

மணிப்பூர் மாநிலம் பற்றி எரியக் காரணமே மத்திய அரசு நாகா போராளிக் குழுக்களுடன் செய்து கொண்டுள்ள போர் நிறுத்த ஒப்பந்தம் தான்! 1997-ஆம் ஆண்டில் மத்திய அரசு நாகா போராளிகளுடன் செய்து கொண்ட போர் நிறுத்த ஒப்பந்தம், அடுத்தடுத்து தொடர்ந்து நீட்டிக்கப்பட்டு வந்தது. கடந்த ஜூன் 13-ஆம் தேதியன்று மீண்டும் ஓராண்டுக்கு போர் நிறுத்தம் நீட்டிக்கப்படும் என்றும், நாகா போராளிகளுடன் சமாதான பேச்சு வார்த்தைகள் தொடரும் என்றும் புதிய ஒப்பந்தம் போடப்பட்டது.

இப்புதிய ஒப்பந்தப்படி நாகா தேசிய இனத்தினர் வாழும் நாகாலாந்து மட்டுமின்றி, மணிப்பூர், அசாம், அருணாசல பிரதேசம் ஆகிய மாநிலங்களில் நாகர்கள் வாழும் பகுதிகளிலும் போர் நிறுத்தம் தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தமது மாநிலப் பகுதிகளில் போர் நிறுத்த அறிவிப்பு செய்துள்ளதை எதிர்த்து, ''மணிப்பூர் மாநில எல்லையையும் ஒருமைப்பாட்டையும் காப்போம்'' என்று மணிப்பூர் மாநில மாணவர் - இளைஞர்களும் நடுத்தர வர்க்கத்தினரும் இப்போது மத்திய அரசுக்கும் ஓட்டுக் கட்சிகளுக்கும் எதிராகப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

போர் நிறுத்த ஒப்பந்தம் மணிப்பூர் மாநிலப் பகுதிகளில் நீட்டிக்கப்படுவதை மணிப்பூர் மக்கள் ஏன் எதிர்க்கிறார்கள்? மத்திய அரசு நாகா போராளிகளுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ளக் காரணம் என்ன?

இந்தியாவின் வடகிழக்கே உள்ள ''7 சகோதரிகள்'' என்றழைக்கப்படும் 7 மாநிலங்களும் இந்திய ஆட்சியாளர்கள் சித்தரிப்பது போல, இந்திய தேசிய நீரோட்டத்தில் ஒன்று கலந்த மாநிலங்களே அல்ல. பல்வேறு குறுநில மன்னர்களின் ஆட்சி நிலவிய வடகிழக்குப் பிராந்தியத்தை வெள்ளையர்கள் கைப்பற்றி தமது காலனிய ஆட்சிக் காலத்தில் பிரிட்டிஷ் இந்தியாவுடன் பிணைத்தனர். இருப்பினும் காலனிய நிர்வாகத்தைத் தவிர மற்ற அனைத்திலும் வடகிழக்கு பிராந்தியம் இந்தியாவுடன் இணையாமலேயே இருந்தது. 1947-இல் போலி சுதந்திரம் அடைந்த போதுகூட, இப்பிராந்தியம் இந்தியாவுடன் அதிகாரபூர்வமாக இணைக்கப்படவில்லை. பின்னர் 1949-இல் தான் கட்டாயமாக இந்தியாவுடன் பிணைக்கப்பட்டது.

அன்றிலிருந்தே வடகிழக்கிந்திய மக்கள் இந்திய அரசின் ஆதிக்கத்தை எதிர்த்து தமது சுயநிர்ணய உரிமைக்காகப் போராடி வருகிறார்கள். வடகிழக்கில் நாகா, மிஜோ, மைத்தி முதலான வளர்ச்சி பெற்ற தேசிய இனத்தவரும், குக்கி முதலான சிறுபான்மையினரும், கணக்கற்ற வர்ண இன குழுக்களும் உள்ளனர். வடகிழக்கு பிராந்தியத்தை இந்தியாவுடன் கட்டாயமாகப் பிணைத்த பிறகு, இந்திய ஆட்சியாளர்கள் இப்பகுதியை தேசிய இன, மொழி அடிப்படையில் மாநிலங்களாகப் பிரிக்காமல், தன்னிச்சையாகவும் தேசிய இனங்களிடையே தீராப் பகைமையை மூட்டி பிரித்தாளும் சூழ்ச்சியுடனும் மாநிலங்களை வகுத்து உருவாக்கினர். இது மட்டுமின்றி, 1952-இல் அன்றைய இந்தியப் பிரதமர் நேருவுக்கும் அன்றைய பர்மாவின் அதிபர் ஊ-நு-வுக்குமிடையிலான ஒப்பந்தம் மூலம் நாகா, மைத்தி இன மக்கள் வாழ்ந்து வந்த எல்லையோரப் பகுதிகள் பர்மாவுக்குத் தாரை வார்க்கப்பட்டன.


இந்திய எல்லைக்குள் இருந்த நாகா, மிஜோ, மைத்தி இன மக்களுக்கு தேசிய இன - மொழி அடிப்படையிலான மாநிலங்களாகப் பிரிக்கப்படவில்லை. உதாரணமாக, நாகர்கள் வாழும் பகுதிகள் நாகாலாந்தினுள் அல்லாது, அசாம், மணிப்பூர், அருணாசல பிரதேசம் (முன்பு வடகிழக்கு எல்லைப்புற பிராந்தியம் எனப்பட்ட பகுதி) ஆகியவற்றிலும் இருக்குமாறு திட்டமிட்டே பிரிக்கப்பட்டது. அதேபோல, மணிப்பூர் மாநிலம் என்பது வெறும் மைத்தி இனத்தவரை மட்டும் கொண்டதாக அல்லாமல், மைத்தி, நாகா இனங்களையும் குக்கி சிறுபான்மையினரையும் கொண்டதாகப் பிரிக்கப்பட்டது. இப்படி தன்னிச்சையாக மாநிலப் பிரிவினை செய்து ஆதிக்கம் செலுத்திவரும் இந்திய ஆட்சியாளர்களை எதிர்த்தும், தமது இனத்தின் சுயநிர்ணய உரிமைக்காகவும் நாகா, மிஜோ, மைத்தி இன மக்களும் குக்கி முதலான தேசிய இனச் சிறுபான்மையினரும் நீண்டகாலமாக ஆயுதமேந்திப் போராடி வருகின்றனர்.

நாகா மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் நீண்ட நெடுங்காலமாக நடந்து வருகிறது. பீசோ என்பவர் நாகாலிம் சோசலிச தேசியக் கவுன்சில்

மைய அரசின் தூதர் பத்மநாபையாவுடன் நாகா போராளிக் குழுவின் தலைவர் முய்வா (வலதுபுறம்).



www.padippakam.com



அரசு அலுவலகங்களை முற்றுகையிட்டு வாகனங்களுக்குத் தீயிடும் மணிப்பூர் இளைஞர்கள். கலவரத் தீயில் குளிர்காய்வது யார்?

(NSCN) என்ற அமைப்பை நிறுவி ஆயுதப் போராட்டத்தை தலைமையேற்று வழிநடத்தி வந்தார். 1960-களில், அன்றைய இந்தியப் பிரதமரான நேரு, நாகா தலைவர் பீசோ-வின் தலையைக் கொண்டு வருபவர்களுக்குப் பரிசு அறிவித்து, தனது காட்டுமிராண்டித்தனத்தை நிரூபித்துக் காட்டினார். பீசோவுக்குப் பிறகு, நாகா சோசலிசக் கவுன்சில் ஐசக், முய்வா, கப்லாங் எனப் பல குழுக்களாகப் பிளவுபட்டு பின்னடைவுக்குள்ளானபோதிலும், நாகர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் அழிந்துவிடவில்லை. மாறாக, நாகர்களை ஒடுக்கக் கிளம்பிய இந்திய இராணுவம்தான் தொடர்ந்து இழப்புகளையும் தோல்விகளையும் சந்தித்து வருகிறது.

நாகா போராளிகளை இராணுவ ரீதியாக ஒடுக்க முடியாமல் தோல்வி கண்ட இந்திய ஆட்சியாளர்கள், போராளிகளை தேசிய நீரோட்டத்துக்கு இழுத்து நிறுவனமயமாக்கும் முயற்சியில் இறங்கினர். நாகா தீவிரவாதிகளை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்குவோம் என்று கொக்கரித்த ஆட்சியாளர்கள், அதே தீவிரவாதிகளிடம் சமாதானப் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். ஒரு போராட்டம் முன்னணிக்கு வந்து அரசுக்கு நெருக்கடி ஏற்படும்போது, அதைத் தணிக்கும் முயற்சியாக 'தீவிரவாதி'களுடன் அவசரமாக ஒரு ஒப்பந்தம்போட்டு சாந்தப்படுத்துவது, தங்களை சமாதானக் காவலர்களாக விளம்பரப்படுத்திக் கொள்வது, பின்னர் ஒப்பந்தத்தை நிறைவேற்றாமல் கிடப்பில் போடுவது; மீண்டும் போராட்டம் தொடர்ந்தால் 'தீவிரவாதிகள்' மீது பழியைப் போடுவது, அரசு பயங்கரவாத அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவது என்பது இந்திய ஆட்சியாளர்களின் பாரம்பரியமான உத்தி. நாகா போராளிகள் விவகாரத்திலும் அப்படியேதான் நடந்தது.

1947-இல் நாகர்கள் வாழும் பகுதிகளைக் கொண்ட தனிமாநிலம் உருவாக்கப்படும் எனும் 9 அம்ச ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. அது கிடப்பில் போடப்பட்டு 1960-இல் 16 அம்ச புதிய ஒப்பந்தம் போடப்பட்டது. அதைத் தொடர்ந்து 1963-இல் நாகாலாந்து என்ற புதிய மாநிலம் உருவாக்கப்பட்டது. நாகா போராளிகள் இந்தியாவிலிருந்து விடுதலை பெற்ற சுதந்திர நாகாலாந்தைக் கோரினார்கள். ஆனால் சமாதான வழியில், இந்தியாவின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட தனிமாநிலம்தான் கிடைத்தது. நாகா போராளிகள் கோரிய நாகாலாந்து என்பது அசாமின் கிழக்கிலுள்ள மலை மாவட்டங்களிலிருந்து பர்மா வரை உள்ள பகுதியாகும். ஆனால், நாகாலாந்து மாநிலத்தில் அசாமின் மலை மாவட்டங்கள் முழுமையாக இணைக்கப்படவில்லை. ஒரு சில மாவட்டங்களே இணைக்கப்பட்டன.

இதை நாகா போராளிகள் ஏற்க மறுத்ததும், நாகர்களே இல்லாத அருணாசல பிரதேசத்தின் சில மாவட்டங்களை நாகாலாந்துடன் இணைத்து அவர்களைச் சாந்தப்படுத்த மைய அரசு முயற்சித்தது. மறுபுறம் நாகாலாந்து என்ற தனிமாநிலம், சட்டப்பேரவை ஆகியவற்றைக் கொண்டு அரசாங்க சலுகைகள் - சன்மானங்களைக் காட்டி ஓட்டுப் பொறுக்கும் அரசியல் கலாச்சாரத்தை வளர்த்து போராளிகளை அரசியல் அரங்கிலிருந்து தனிமைப்படுத்தவும் முயன்றது. ஆனால் இத்தகைய முயற்சிகளால் இந்திய

**நாகா போராளிகளை இராணுவ ரீதியாக ஒடுக்க முடியாமல் தோல்வி கண்ட இந்திய ஆட்சியாளர்கள், அவர்களை ஓட்டுச்சீட்டு அரசியலுக்கு இழுத்து வரவே, சமாதான நாடகம் ஆடுகிறார்கள். ஆனால், போர் நிறுத்த ஒப்பந்தமோ பிள்ளையார் பிடிக்க குரங்காய் முடிந்தது.**

ஆட்சியாளர்கள்தான் தனிமைப்பட்டுப் போனார்களே தவிர, நாகா மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையும் ஆயுதப் போராட்டமும் ஓய்ந்துவிடவில்லை.

பின்னர் 1997-ஆம் ஆண்டில் குஜ்ரால் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசு நீடித்தபோது, நாகா போராளி குழுக்களுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொண்டது. பின்னர் அது நீட்டிக்கப்பட்டு சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு முயற்சிப்பதாகக் கூறப்பட்டது. பிறகு, வாஜ்பாய் தலைமையிலான பா.ஜ.க. கூட்டணி அரசு தானும் சமாதான பேச்சு வார்த்தைகளுக்கு முயற்சிப்பதாகக் கூறி போர் நிறுத்தத்தை நீட்டித்தது. இப்போது நாகா சோசலிஸ்ட் கவுன்சிலின் ஐசக் - முய்வா குழுவினருடன் பேச்சு வார்த்தை நடத்தி, போர் நிறுத்தத்தை மேலும் ஓராண்டுக்கு நீட்டிப்பதாக ஒப்பந்தம் போட்டுள்ளது.

இந்த ஒப்பந்தப்படி, நாகாலாந்து மட்டுமின்றி நாகர்கள் வாழும் மணிப்பூர், அசாம், அருணாசலபிரதேசம் ஆகிய மாநிலங்களிலுள்ள பகுதிகளிலும் போர் நிறுத்தம் நீட்டிக்கப்படும். இதைத்தான் மணிப்பூர் மாணவர் - இளைஞர்கள் எதிர்த்துப் போராட்டம் நடத்துகின்றனர். நாகர்கள் வாழும் பகுதிகளில் போர் நிறுத்தம் நீட்டிக்கப்பட்டால், பின்னர் அப்பகுதிகள் நாகா போராளிகள் கோரும் சுதந்திர நாகாலாந்துடன் சேர்க்கப்பட்டு விடும்; மணிப்பூரின் பரப்பளவு சுருங்கி மிகச் சிறிய மாநிலமாகி, மத்திய அரசின் ஒதுக்கீடுகள் குறைந்து மாநிலத்தின் வளர்ச்சி பின்னுக்குத் தள்ளப்பட்டு விடும் என்று மணிப்பூர் மக்கள் அஞ்சுகின்றனர். மாநில சட்டமன்றத்தில், போர் நிறுத்தத்தை தமது மாநிலத்தில் நீட்டிக்கக் கூடாது என்று அனைத்து ஓட்டுக் கட்சிகளும் சேர்ந்து 4 முறை தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசிடம் முறையிட்டுள்ளன.

மைய அரசு, மணிப்பூர் மாநிலத்தைப் பிரிவினை செய்ய மாட்டோம் என்று ஒரு புறம் வாக்குறுதி அளிக்கிறது; மறுபுறம், நாகா போராளிகளின் கோரிக்கையை ஏற்பதாக ஒப்பந்தமும் போடுகிறது. தொடர்ந்து தாங்கள் வஞ்சிக்கப்படுவதாகக் கருதும் மணிப்பூர் மக்கள் மத்திய அரசின் மீதும், ஓட்டுக்கட்சிகள் மீதும் நம்பிக்கை இழந்து கலவரங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அரசியல் சட்டத்தின் 3-வது பிரிவின்படி, நாடா

www.padippakam.com

ளுமன்றத்தில் பெரும்பான்மையினரின் வாக்கெடுப்பின்படி ஒரு மாநிலத்தைப் பிரிக்கவோ, எல்லைகளை மாற்றியமைக்கவோ மைய அரசுக்கு வரம்பற்ற அதிகாரம் உள்ளதால் தமது மாநிலமும் பிரிக்கப்படும் என்று மணிப்பூர் மக்கள் அஞ்சுகின்றனர். அதன் வெளிப்பாடாகவே, ''மணிப்பூரின் ஒருமைப்பாட்டைக் கட்டிக் காப்போம்! போர் நிறுத்த ஒப்பந்தத்தை மணிப்பூரில் திணிக்காதே! மாநிலத்தைத் துண்டாடும் சதிகளை நிறுத்து!'' என்ற முழக்கங்களுடன் மைய அரசுக்கும் ஓட்டுக் கட்சிகளுக்கும் எதிராக வன்முறைக் கலவரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

நாகா போர் நிறுத்த ஒப்பந்தம் மூலம் தங்களை சமாதான விரும்பிகளாகக் காட்டிக் கொள்வது, தீவிரவாதிகளைக் கூட தேசிய நீரோட்டத்தில் ஒன்று கலக்கச் செய்துவிட்டதாகவும், ஆயுதக் கலாச்சாரத்தை முடிவுக்குக் கொண்டுவந்து விட்டதாகவும் மாய்மாலம் செய்வது என்று ஆளும் இந்துவெறி பாசிச கும்பல் கணக்கு போட்டது. ஆனால் அதன் பகற்கனவுகள் பற்றி எரியத் தொடங்கிவிட்டன. நாகா போராளிகளுடனான போர் நிறுத்த ஒப்பந்தத்தைக் கைவிடவும் முடியாமல், மணிப்பூர் மக்களின் எதிர்ப்பைச் சமாளிக்கவும் வழிதெரியாமல் தீராத நெருக்கடியில் இந்திய ஆட்சியாளர்கள் சிக்கிக் கொண்டுள்ளனர். மறுபுறம், நாகர்களுக்கும் மைத்தி (மணிப்புரி)களுக்குமிடையே எந்நேரமும் இனவெறிக் கலவரம் வெடிக்கலாம் என்ற பதற்றமான நிலைமையே வடகிழக்கில் நீடிக்கிறது. 'அகண்ட பாரத' இலட்சியம் கொண்ட ஆர்.எஸ்.எஸ் கும்பல், நாகா போராளிகள் தமது பாரம்பரியப் பகுதிகளைக் கேட்பதையே 'அகண்ட நாகாலாந்து' கேட்பதாக அவதூறு செய்து இனவெறியைத் தூண்டி வருகிறது.

ஒரு மாதத்துக்கும் மேலாக மணிப்பூரில் கலவரமும் அதிருப்தியும் தொடர்வதால், பிரச்சினையைச் சமாளிக்க ''நாகா போராளிகளுடனான போர் நிறுத்த ஒப்பந்தம் நாகாலாந்தில் மட்டுமே செயல்படுத்தப்படும்; மற்ற மாநிலங்களுக்கு இது பொருந்தாது'' என்று இப்போது மைய அரசு அறிவித்துள்ளது. இதன் மூலம் மணிப்பூரில் கலவரம் தற்காலிகமாக ஓய்ந்தாலும், வடகிழக்கிந்தியாவின் மையமான பிரச்சினைகள் தீர்க்கப்படாத நிலையில் புதிய வடிவில் நெருக்கடிகள் முற்றவே செய்யும்.

***

வடகிழக்கு மாநிலங்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு நீண்டகாலமாகவே பின்தங்கிய நிலையிலேயே இருத்தி வைக்கப்பட்டுள்ளன. 1960-களில் நடந்த இந்திய-சீன எல்லைப் போருக்குப் பிறகு, எல்லைப்புற மாநிலங்களில் பொருளாதார - தொழில் வளர்ச்சியை மேற்கொள்வது பிரச்சினைக்குரியதாகும் என்று காரணம் காட்டி, திட்டமிட்டே புறக்கணிக்கப்பட்டு வருகின்றன.

ஒருசில பகுதிகளில் திட்டுத்திட்டாக தோட்டத் தொழில் மற்றும் பணப்பயிர் விவசாயம் வளர்ந்துள்ள போதிலும், அவை பீகார், வங்கம் முதலான மாநிலங்களிலிருந்து பிழைப்புக்காகக் குடியேறிய கூலி விவசாயிகளின் கடும் உழைப்பினால் ஏற்பட்ட முன்னேற்றம்தானே தவிர, மைய அரசின் கொள்கையினால் அல்ல. சாலைகள் அமைப்பது, பாலங்கள் - கட்டிடங்கள் கட்டுவது, போக்குவரத்து, தொலைத்தொடர்பு முதலான அனைத்தும் வட்இந்திய தரகுப் பெருமுதலாளிகளின் பிடியில் உள்ளதாலும், அரசுப் பணிகளில் பிற மாநிலத்தவர் பெருமளவில் இருப்பதாலும், தொடர்ந்து இந்திய இராணுவத்தின் அடக்குமுறையும் அட்டூழியங்களும் நிலவுவதாலும் வடகிழக்கிந்திய மக்கள் இந்திய ஆட்சியாளர்கள் மீது வெறுப்பை உமிழ்கின்றனர்.

தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதன் விளைவாக, மாநில உரிமைகளுக்காகவும் அரசாங்க சலுகை - சன்மானங்களைக் கைப்பற்றும் போட்டா போட்டியிலும் நடுத்தர வர்க்கம் போராட நிர்பந்திக்கப்படுகிறது. அந்த வர்க்கத்துக்கே உரிய ஊசலாட்டம், ஒருங்கிணைந்த கண்ணோட்டமின்மை காரணமாக குறுகிய ஆதாயங்கள் - அற்ப சலுகைகளுக்காக போராடுவதோடு அவை வரம்பிட்டுக் கொள்கின்றன. மறுபுறம், தனி மாநிலமாக அமைந்தால் கூடுதல் சலுகைகள் கிடைக்கும் என்று சிறுபிள்ளைத்தனமாக நம்புகின்றன. தற்போதுள்ள தமது மாநிலம் பிரிவினை செய்யப்பட்டால், ஏற்கனவே கிடைத்து வரும் அற்ப சலுகைகளும் கிடைக்காமல் போய்விடுமோ என்று அஞ்சுகின்றன. இதன் வெளிப்பாடாகவே, சிறுபான்மை தேசிய இனங்களான குக்கி, போடோ முதலானவை தனி மாநிலம் கோருகின்றன. மணிப்பூரின் மைத்தி இன மக்கள் தமது மாநிலத்தைப் பிரிவினை செய்யக் கூடாது என்று போராடுகின்றனர்.

வடகிழக்கிந்திய மாநிலங்களை தேசிய இன அடிப்படையில் பிரித்து, சுயநிர்ணய உரிமை கொடு; சிறுபான்மை இனங்களுக்கு சுயாட்சி உரிமை கொடு; வடகிழக்கிந்தியாவிலிருந்து இந்திய இராணுவத்தை வெளியேற்று; இப்பிராந்தியத்தின் விவசாயம் மற்றும் தொழில் வளர்ச்சிக்கு முன்னுரிமை கொடு; தேசிய இனங்களிடையே பகைமையையும் மோதலையும் தூண்டாதே! - ஆகியவையே வடகிழக்கிந்திய தேசிய இனங்களின் மையமான கோரிக்கையாக இருக்க வேண்டும். போராளிகள் இப்பொதுக் கோரிக்கையில் ஐக்கியப்பட்டு, மைய அரசின் சூழ்ச்சிகள் - சதிகள் - ஆத்திரமூட்டல்களை அம்பலப்படுத்தி முறியடிக்கவும் வேண்டும். தேசிய சுயநிர்ணய உரிமைப் போரைத் தொடர வேண்டும்.

ஆனால் வடகிழக்கிந்திய போராளிக் குழுக்களோ, தமது குட்டி முதலாளிய வர்க்கத்தன்மையின் காரணமாக பிளவுபட்டு தமக்கிடையே குறுகிய இனவாத அடிப்படையில் மோதிக் கொண்டு நிற்கின்றன. நாகா மக்களின் உரிமைக்காகப் போராடும் 10-க்கும் மேற்பட்ட போராளிக் குழுக்களும், நாகா சோசலிசக் கவுன்சிலின் மற்றொரு பிரிவான கப்லாங் குழுவும் உள்ள நிலையில், இவற்றைப் புறக்கணித்துவிட்டு ஐசக் - முய்வா குழுவினர் மட்டுமே மைய அரசுடன் சமாதானப் பேச்சு வார்த்தை நடத்தி போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளனர். இதனால் இந்த ஒப்பந்தம் கூட எந்த அளவுக்கு நிறைவேறும் என்பதற்கு எந்த உத்திரவாதமும் இல்லை.

பாட்டாளி வர்க்கத் தலைமையில் தேசிய இனப் போராளிகள் தமது பொதுக் கோரிக்கையில் ஐக்கியப்பட்டு, இந்திய அரசின் ஆதிக்கத்துக்கு எதிராகப் போராடாத வரையில், வடகிழக்கிந்திய மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைப் போர் வெற்றியடைய முடியாது. அதேபோல, போராளிக் குழுக்களிடையேயும், தேசிய இனங்களிடையேயும் பிளவையும் மோதலையும் தூண்டிவிட்டு இனவெறித் தீயில் குளிர்காயத் துடிக்கும் இந்திய ஆட்சியாளர்களின் எத்தணிப்புகளும் வெற்றிடைய முடியாது. இவை மீண்டும் தீராத நெருக்கடிக்கு இட்டுச் சென்று வடகிழக்கிந்தியாவை குருதிச் சேற்றில் தள்ளவே செய்யும்.

• மனோகரன்


## இப்போது விற்பனையில்

## மக்களிடையே நமது பணிகள்

**விலை: ரூ. 4.00** — *கதீப் அன்சாரி*

**போலி கம்யூனிஸ்டுகளாலும் போலி புரட்சியாளர்களாலும் புறக்கணிக்கப்பட்டுள்ள மக்கள்திரள் வழியின் அவசியம் பற்றியும், கம்யூனிசப் புரட்சியாளர்கள் மக்களிடையே ஆற்ற வேண்டிய பணிகளைப் பற்றியும் ஒருங்கிணைந்த கண்ணோட்டத்தைத் தரும் சிறு வெளியீடு.**

*பிரதிகளுக்கு:*

**கீழைக்காற்று வெளியீட்டகம், 10, அவுலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை - 600 002.**



படிப்பகம்

www.padippakam.com

# தனியார்மயத்தில் ஆட்சியாளர்கள்; பட்டினியில் தொழிலாளர்கள்!

உலகிலேயே இரண்டாவது பெரிய சுரங்கம் எனப் பெயர் போன, கர்நாடகாவில் உள்ள கோலார் தங்கச் சுரங்கம், இன்று தனியார்மய - தாராளமயக் கொள்கையின் விளைவாக நட்டக் கணக்கு காட்டப்பட்டு இழுத்து மூடப்பட்டுள்ளது. தொழிலாளர்கள் வேலையின்றிப் பரிதவித்துக் கொண்டிருக்கும் நிலையில், அவர்களது வேலை உரிமையையும் பறித்து, கட்டாயமாக விருப்ப ஓய்வுத் திட்டத்தை ஏற்று வெளியேறுமாறு மைய அரசு அறிவித்தது. இதைத் தொழிலாளர்கள் யாரும் ஏற்காததால், இவர்களுடைய அரைகுறையான சம்பளமும் 6 மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. வேலையிழந்து சம்பளமுமின்றி தொழிலாளர்கள் பரிதவித்துக் கொண்டிருக்கும் நிலையில், எவ்வித நட்டஈடோ நிவாரணத் தொகையோ கூடத் தராமல் மைய அரசு அலட்சியம் காட்டி வருகிறது. தொழிலாளர்கள் பட்டினிச் சாவுக்குத் தள்ளப்பட்டுள்ள கொடுஞ் செயலைக் கண்டித்து, கடந்த ஜூலை 2,3 தேதிகளில் அனைத்து அரசியல் கட்சிகளும், இயக்கங்களும் கோலார் தங்க வயல் மற்றும் பங்காருபேட்டை பகுதிகளில் முழு அடைப்புப் போராட்டத்தை அறிவித்தன. தொழிலாளர்களின் சம்பளப்பாக்கியை நட்டஈட்டுடன் தரக் கோரி நடந்த இப்போராட்டத்துக்கு உழைக்கும் மக்கள் பெருத்த ஆதரவு தந்தனர். ஆனாலும் எருமைத் தோல் ஆட்சியாளர்கள் இன்று வரை தொழிலாளர்களுக்கு சல்லிக்காசு கூட கொடுக்கவில்லை.

வேலையிழந்து சம்பளமின்றி வீதியில் வீசியெறியப்பட்டுள்ள தொழிலாளர்கள், தமது வீட்டிலுள்ள தட்டுமுட்டுச் சாமான்களை அடகு வைத்தது போதாமல், தமது மனைவியின் புடவைகளைக் கூட அடகு வைத்து வயிற்றைக் கழுவும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இனி அடகு வைக்க ஏதுமில்லாத நிலையில் தொழிலாளர் குடும்பங்கள் பட்டினிச்சாவின் விளிம்பில் நிற்கின்றன.

கோலார் தங்கச் சுரங்கம் மட்டுமின்றி இப்பகுதியிலுள்ள பாரத நில அகழ்வு நிறுவனமும் (BEML) நட்டக் கணக்கு காட்டப்பட்டு எப்போதும் மூடப்படலாம் என்ற நிலையில் உள்ளது. இந்த அரசுத் துறை நிறுவனத்தைத் தனியாருக்குத் தாரை வார்க்கும் ஏற்பாடுகள் நடந்து வருவதால் தொழிலாளர்கள் பீதியடைந்து நிற்கின்றனர்.

# விவசாயிகள் தற்கொலை: ஆந்திராவில் மட்டுமல்ல, கர்நாடகத்திலும்தான்!

கர்நாடகாவின் கோலார் மாவட்டம், மாலூர் வட்டத்திலுள்ள தொட்டசிவரா கிராமத்தைச் சேர்ந்த கிருஷ்ணா ரெட்டி என்ற சிறு விவசாயி, கடந்த ஜூலை 4-ஆம் தேதியன்று தனது குடும்பத்தோடு தற்கொலை செய்து கொண்டு மாண்டுபோன துயரக் கதை இது:

கிருஷ்ணா ரெட்டி தனது 3 ஏக்கர் நிலத்தில் தக்காளி, உருளைக்கிழங்கு முதலானவற்றைப் பயிரிட்டு வந்தார். கோலார் மாவட்டம் வானம் பார்த்த பூமி. இங்கு 2,3 ஏக்கர் நிலத்தைக் கொண்டுள்ள சிறு விவசாயிகளே அதிகம். மழையை நம்பி தமது நிலத்தில் கடுமையாகப் பாடுபட்டு விவசாயம் செய்தாலும் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைப்பதில்லை. காய்கறிகளின் விலையை கமிசன் மண்டிக்காரர்களே தீர்மானிப்பதாலும், கமிசன் மண்டிக்காரர்களிடம் கடன் வாங்கியிருப்பதால் அடிமாட்டு விலைக்கு அவர்களிடமே விற்க வேண்டியிருப்பதாலும் பெரும்பாலான விவசாயிகள் இம்மாவட்டத்தில் போண்டியாகி விட்டனர். கிருஷ்ணா ரெட்டியும் தொடர்ந்து நட்டப்பட்டு ரூ. 2 இலட்சத்துக்கு கடனாளியானார். இந்நிலையில், இந்த ஆண்டிலாவது கடனை எல்லாம் அடைத்து விடலாம் என்ற நம்பிக்கையில் மீண்டும் உருளைக் கிழங்கு பயிரிட்டார். ஆனால் உருளைக் கிழங்கு விலை வீழ்ச்சியால் கடனை அடைக்க முடியாமல் மனம் உடைந்து போனார். விரக்தியின் விளிம்புக்கே சென்ற கிருஷ்ணா ரெட்டி, கடந்த ஜூலை 4-ஆம் தேதியன்று தனது மனைவி ராமக்காள், மகள்கள் அம்பிகா (வயது 8), சுபா (வயது 6) மற்றும் ஆறு மாதமேயான ஆண் குழந்தையோடு, தனது உருளைக்கிழங்கு பயிரிட்ட நிலத்திலேயே குடும்பத்தோடு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

கிருஷ்ணா ரெட்டி குடும்பத்தோடு தற்கொலை செய்து கொண்டதற்கு உருளைக் கிழங்கு விலை வீழ்ச்சியும் கடன் சுமையும் காரணமாக உள்ள நிலையில், போலீசாரும் பத்திரிகைகளும் உண்மையை மூடி மறைத்துத் திசைதிருப்புகின்றன. கிருஷ்ணா ரெட்டியின் சகோதரருக்கு நிவாரண உதவியாக வட்டாட்சியர், எம்.பி., எம்.எல்.ஏ., அமைச்சர் ஆகியோர் சில ஆயிரங்களைக் கொடுத்து ஆறுதல் கூறுகின்றனர். ஆனால், விவசாயிகளின் விளைபொருட்களை நியாயமான விலைக்கு அரசாங்கமே கொள்முதல் செய்வதற்கு அவர்கள் எந்தவொரு உத்திரவாதமும் தரவில்லை. நட்டமடையும் விவசாயிகளுக்கு நிவாரணமளிக்கவும், அரசாங்கக் கடன்களை ரத்து செய்யவும் ஆட்சியாளர்கள் முன்வருவதுமில்லை. மறுபுறம், உலக வங்கியின் கட்டளைப்படி விவசாயத்துக்கான மானியம் குறைக்கப்பட்டு, உரம் - பூச்சி மருந்து - மின்சாரம் அனைத்தும் தாறுமாறாக விலையேற்றம் செய்யப்பட்டு அதன் சுமை முழுவதும் விவசாயிகளின் தலையில் திணிக்கப்படுகிறது. விவசாய விளைபொருட்களுக்கு நியாய விலை கேட்டுப் போராடினால் அடக்குமுறையை ஏவுகிறது அரசு. தும்கூர் மாவட்டத்தில் கடலை விவசாயிகள் நியாய விலை கேட்டு கடந்த ஆண்டில் போராடிய போது, போலீசார் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இப்படி அரசாங்கத்தின் கேடுகெட்ட கொள்கைகளும் அடக்குமுறையுமே போண்டியாகிப் போன விவசாயிகளை தற்கொலைக்குத் தள்ளுகிறது. இன்று கிருஷ்ணாரெட்டி, நாளை யார்? என்ற கேள்விதான் கடன் சுமையால் தத்தளிக்கும் கர்நாடக விவசாயிகளை அச்சுறுத்தி வருகிறது.

கடன் சுமை தாளாமல் தற்கொலை செய்து கொண்ட சிறு விவசாயி கிருஷ்ணாரெட்டியின் குடும்பம்.



தகவல்:
பு.ஜ. வாசகர்கள், கோலார் தங்கவயல்.

படிப்பகம்

www.padippakam.com

# சவடாலுக்கு மூலஉத்தி சந்தர்ப்பவாதமே தந்திர உத்தி — ''தமிழ்த் தேச''த்தின் சதிராட்டம்

''புதிய ஜனநாயகம்'' ஏட்டின் கடந்த ஆண்டு ஜூலை, ஆகஸ்டு இதழ்களில் ''ஈழ விடுதலை: இந்தியாவின் நிலையும் விடுதலைப் புலிகள் - ஆதரவாளர்களின் தமிழினத் துரோகமும்'' என்ற கட்டுரை வெளிவந்தது.

அதற்கு விடுதலைப் புலிகளின் ஆதரவு —தமிழ்நாடு தமிழினவாதிகளின் சார்பில் நின்று, தமிழ் தமிழர் இயக்கத்தின் அதிகார பூர்வ ஏடான ''தமிழ்த் தேசம்'' மூலம் அதன் ஆசிரியர் தியாகு மறுப்புரை எழுதியுள்ளார்.

ஈழப் பிரச்சினையில் மத்திய அரசின் நிலையை ஈழ விடுதலையின் எதிரிகள் மட்டுமல்லாது வைகோ, இராமதாசு போன்ற விடுதலைப் புலி ஆதரவுக் கட்சிகளும் ஆதரிக்கும் விசித்திர நிலையை எடுத்துக் காட்டி, தமிழினவாதிகளின் சந்தர்ப்பவாதத்தை அம்பலப்படுத்துவதில் இருந்து பு.ஜ. கட்டுரை தொடங்குகிறது. இந்த ''விசித்திர மான நிலை'' தியாகு உட்பட தமிழினவாதிகளுக்கே உறுத்தலாக இருந்திருக்க வேண்டும். எனவேதான் அதுபற்றி ஏதும் கூறாமல், வைகோ, இராமதாசு முதலியவர்களின் சந்தர்ப்பவாதங்கள் குறித்த பு.ஜ. விமர்சனங்களுக்குப் பதில் கூறப் புறப்பட்டு விட்டார். அதற்காக தியாகு முன் வைக்கும் வாதங்கள், வைகோ, இராமதாசு போன்ற ஓட்டுப் பொறுக்கிகளின் சந்தர்ப்பவாதங்களை விட மோசமானவை.

''தனித் தமிழீழம்தான் தீர்வு'' என்பதில் உறுதியாக இருப்பதாய் சொல்லிக் கொண்டே, இலங்கையின் அரசியல் சட்டத்துக்கும் இறையாண்மைக்கும் உட்பட்டுத் தீர்வு காணவேண்டும் என்ற தீர்மானத்துக்கும் கைதூக்குவது முரண்பாடுதான். இது சந்தர்ப்பவாதமா என்றால் சந்தர்ப்பவாதம்தான்'' என்கிறார் தியாகு. இது சந்தர்ப்பவாதம்தான் என்பது அவர்களுக்கே தெரியவில்லை. சந்தர்ப்பவாதமா என்று கேட்டால் சந்தர்ப்பவாதம்தான் , என்று ஒப்புக் கொள்வார்கள் என்கிறார், தியாகு.

அடுத்த வரியிலேயே தானும் சந்தர்ப்பவாதிதான் என்பதைக் காட்டிவிடுகிறார். எப்படி? வேறு வழியில். ''இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்புவதில்லை என்ற இந்திய அரசின் முடிவை ஆதரித்திலும் வரவேற்றதிலும் தவறில்லை. ஆனால் அதற்காக ஈழச் சிக்கல் தொடர்பான இந்திய அரசின் ஒட்டுமொத்தக் கொள்கையையும் ஏற்றிப் போற்றவேண்டும் என்பதோ, எப்படியும் அதைக் கண்டு கொள்ளாமல் விட்டு விடலாம் என்பதோ சரியல்ல'' என்கிறார் தியாகு.

''இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்புவதில்லை என்ற இந்திய அரசின் முடிவே'' எத்தகையது? பொய்யும் சதித்தனமும், அரசியல் உள்நோக்கமும் கொண்டதில்லையா? ஒருமுறை இந்திய இராணுவத்தை ஈழத்துக்கு அனுப்பி, பேரிழப்பையும் இந்திய - இலங்கை மக்களின் கடும் எதிர்ப்பையும் சந்தித்த நிலையில், இந்திய இராணுவத்தை அனுப்புவதில்லை என்று கூறிக் கொண்டே இலங்கை அரசுக்கு இராணுவ உதவி, நிதி உதவி உட்பட எல்லா வகையிலும் ஆதரவு தெரிவித்து வருவது தியாகுவுக்குத் தெரியாதா?

இந்திய விமானப்படைத் தளபதியை இலங்கைக்கு அனுப்பி புலிகளை ஒடுக்குவதற்கும், இராணுவ விமானங்களை இயக்குவதற்கும் உதவுவது; வான்வெளித் தகவல்கள் தருவது, வெளிநாடுகளில் இந்தியா வாங்கிய ஆயுதத் தளவாடங்களை இலங்கைக்குத் திருப்பி விடுவது, 450 கோடி நிதி உதவி தருவது, யாழ் பகுதியில் புலிகளால் சுற்றிவளைக்கப்பட்ட சிங்கள இராணுவத்தை மீட்க இந்திய இராணுவத் தலையீட்டிற்கு தயார் நிலையில் வைப்பது—இவையெல்லாம் என்னவாம்?

இந்திய இராணுவத் தலையீட்டிற்கு சிங்கள சிறுபான்மைப் பகுதியினர் மட்டுமே வரவேற்பு கொடுத்தனர்; இந்திய அரசு திரும்பத் திரும்ப வலியுறுத்தியும் இலங்கை அரசு இராணுவத் தலையீட்டிற்கான நேரடி அல்லது மறைமுக ஆயுத, நிதி உதவி மட்டுமே கோரினர். அதிகாரபூர்வ அழைப்பு விடுப்பதற்கு மறுத்து விட்டனர். இந்த நிலையில்தான், இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்புவதில்லை என்று முடிவு செய்தது என்பதையும், அதேசமயம் இராணுவத் தலையீட்டிற்கு தயார் செய்ததையும் மறைத்துவிட்டு வெறும் அறிவிப்பை மட்டும் ஆதரிப்பது சந்தர்ப்பவாதமில்லையா? அதுமட்டுமல்ல, ''இதோ, நாளையே ஈழம் மலரும், யாழ்கோட்டையில் புலிகளின் கொடி பறக்கும்!'' என்று தியாகு போன்றவர்களின் ஆர்ப்பரிப்புகளுக்கு மாறாக, யாழ் பகுதியில் சுற்றி வளைக்கப்பட்ட சிங்கள இராணுவத்துக்கு எதிராக புலிகள் இறுதித் தாக்குதல் தொடுப்பதை தவிர்த்துவிட்டதற்கான உண்மையான காரணமே இந்தியா இராணுவத் தலையீடு செய்வதற்குத் தயார் நிலையில் இருந்தது தானே! இதையெல்லாம் மறைத்து விட்டு இந்திய அரசின் நிலையைத் தமது சகபாடிகள் ஆதரித்ததற்கு நியாயம் கற்பிக்க முயலுகிறார் தியாகு.

''தமிழீழ மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்று அவர்களின் சுயநிர்ணய உரிமையையும் அதற்காக நடக்கும் போரையும் ஆதரிக்கும்படி இந்திய அரசைக் கோரவேண்டும். விடுதலைப் புலிகளை தேசிய விடுதலை இயக்கமாக ஏற்று அதன் மீதுள்ள தடையை நீக்கவும் கோர வேண்டும். இந்தக் கோரிக்கைகளை வெளிப்படையாக வலியுறுத்தி இவற்றுக்கு ஆதரவாக மக்கள் கருத்தைத் திரட்டி இந்திய அரசை நெருக்கவும் வேண்டும். தமிழீழம் தான் தீர்வு என்று நம்புகிற அரசியல் கட்சிகள் இப்படிச் செய்ய வேண்டும்.'' அதற்கு பதிலாக, 'இது எங்கள் உறுதியான கொள்கை. ஆனால் இதை மத்திய அரசிடம் வலியுறுத்த மாட்டோம்' என்று யார் சொன்னாலும் அது குற்ற விமர்சனத்திற்குரியதே,'' என்கிறார் தியாகு.

''சென்னையில் ஒரு பேச்சு, தில்லியில் ஒரு பேச்சு - தலைவருக்கு ஒரு கொள்கை, கட்சிக்கு ஒரு கொள்கை - மக்களிடம் ஒரு விளக்கம், அரசிடம் ஒரு விளக்கம் - இப்படி எந்த வடிவில் சந்தர்ப்பவாதம் வெளிப்பட்டாலும், எந்தக் கட்சியிடமிருந்து வெளிப்பட்டாலும், எந்தத் தலைவரிடமிருந்து வெளிப்பட்டாலும், அதனைத் தெளிவாகவும், கூர்மையாகவும் விமர்சிப்பதில் நமக்கு எவ்வித தயக்கமுமில்லை. அதேபோல இந்தக் கட்சிகளுக்கும் இந்தத் தலைவர்களுக்கும் பின்னாலிருக்கிற வெகு மக்களைத் தமிழீழ விடுதலை ஆதரவு இயக்கத்தில் அணிதிரட்ட வேண்டும் என்ற பொறுப்புணர்வோடு இந்த விமர்சனங்கள் முன் வைக்கப்படவேண்டும் எனக் கருதுகிறோம். அடிமுட்டாள்கள். பித்தலாட்டக்காரர்கள் என்று திட்டுவதுதான் கூர்மையான விமர்சனமாக இருக்கும் என்று பு.ஜ. கருதலாம், நாம் கருதவில்லை'' என்கிறார் தியாகு.

''புதிய ஜனநாயக''த்தின் விமர்சனமுறை மீதான விமர்சனத்துக்கு பதில் கூறுமுன் ஒரு உண்மையைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இங்கே, ''இது எங்கள் உறுதியான கொள்கை, ஆனால் இதை மத்திய அரசிடம் வலியுறுத்தமாட்டோம்'' என்று யார்

www.padippakam.com

சொன்னாலும் அது குற்ற விமர்ச னத்திற்குரியதே'' என்கிறார் தியாகு. சந்தர்ப்பவாதம் எந்த வடிவில் எந்தக் கட்சியிடமிருந்து, எந்தத் தலைவரிடமிருந்து வெளிப்பட்டாலும் அதனைத் தெளிவாகவும், கூர்மையாகவும் விமர்சிப்பதில் நமக்கு எவ்விதத் தயக்கமுமில்லை என்கிறார் தியாகு. இப்படி எழுதிக் கொண்டே இதற்கு மாறாக நடந்து கொள்கிறாரே தியாகு, இதைத்தான் பித்தலாட்டம் என்கிறோம். வெறுமனே திட்டுவதற்காகப் பித்தலாட்டம் என்று சொல்வதல்ல. தியாகுவின் சொல்லும் செயலும் பித்தலாட்டத் தன்மையுடையது என்கிற மதிப்பீடு அடிப்படையில்தான் வரையறுக்கிறோம். இப்படிச் சொல்லியும் கூட உரைப்பதில்லை; அல்லது ஒரு மதிப்பீட்டை — விமர்சனத்தை வெறுமனே திட்டுவது என்று ஒதுக்கித் தள்ளிவிட்டு அதற்கு முகங்கொடுக்காமல் நழுவிக் கொள்வது அவர்களுக்கு எளிதாக இருக்கிறது.





**வை.கோ., இராமதாசு முதலியவர்களின் சந்தர்ப்பவாதங்கள் குறித்த பு.ஜ.வின் விமர்சனங்களை மறுத்து, தியாகு முன் வைக்கும் வாதங்கள் வை.கோ., இராமதாசு போன்ற ஓட்டுப் பொறுக்கிகளின் சந்தர்ப்பவாதத்தை விட மோசமானவை.**

இப்போதும் சரி, இதற்கு முன்பும் சரி குற்ற விமர்சனத்துக்குரியவர் யார் என்று தியாகு குறிப்பிடவில்லை. அதேபோல, தெளிவாகவும், கூர்மையாகவும் விமர்சிப்பதில் தமக்கு எவ்விதத் தயக்கமுமில்லை என்று எழுதும் தியாகு, எந்தக் கட்சியிடமிருந்து, எந்தத் தலைவரிடமிருந்து எந்த வடிவில் சந்தர்ப்பவாதம் வெளிப்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிடவில்லை. ஈழப் பிரச்சினையில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களில் யார் யார், எப்படி எப்படி, எந்த எந்த விதங்களில் சந்தர்ப்பவாதமாக நடந்து கொள்கிறார்கள் என்று புதிய ஜனநாயகம் அம்பலப்படுத்தியிருந்தது. அந்தக் கட்டுரைக்கு மறுப்பு எழுதியிருக்கும் தியாகு, யார் யார், எந்தெந்தக் கட்சி சந்தர்ப்பவாதமாக நடந்து கொள்கின்றனர் என்பதைப் பற்றிக் குறிப்பிடாமல் பொதுவான கொள்கை பேசி மழுப்பி இருக்கிறார். அதேசமயம் புதிய ஜனநாயகத்தின் விமர்சன முறையில் இல்லாவிட்டாலும், வேறு எந்த விமர்சன முறையிலாவது தியாகு போன்றவர்கள் இத்தகையோரை விமர்சித்திருக்கிறார்களா? அப்படியே ஏதாவது விமர்சனம் என்று எடுத்துக் காட்டினாலும், அவை ஜெயலலிதா மீது வீரமணி வைக்கும் விமர்சனப் பாணியிலானவையாகத்தான் இருக்கின்றன. இப்படி இருக்கும் போது குற்ற விமர்சனத்துக்குரியது, தெளிவாகவும் கூர்மையாகவும் விமர்சிப்பதில் தமக்கு எவ்விதத் தயக்கமுமில்லை என்று எழுதுகிறாரே, இதுதான் பித்தலாட்டம்.

ஆகவே, பித்தலாட்டக்காரர்கள் அடிமுட்டாள்கள் என்று எழுதும்போது பு.ஜ. தனது மதிப்பீட்டை, அந்தச்சொல்லுக்குரிய பொருளில்தான் எழுதுகிறது. வெறுமனே திட்டும் சொல்லாகவோ, விமர்சனத்தை கடுமையாகவும் காட்டமாகவும் முன்வைக்கும் முறை என்பதற்காகவோ எழுதவில்லை. திராவிடக் கட்சிகள், போலி கம்யூனிஸ்டுகளின் வழியில் தியாகு போன்றவர்கள் எதிர்த் தரப்பினர் மீதே கூட ''மொன்னை''யான விமர்சன முறையைப் பின்பற்றுவதை மரபாகக் கொண்டவர்கள். (தமிழ்வழிக் கல்வி மீதான சன் தொலைக்காட்சி விவாதத்தில் பத்மா சேசாத்திரியுடன் தியாகு கலந்து கொண்டு உசாவிய நிகழ்ச்சி இதற்கு ஒரு எடுத்துக் காட்டு). அப்புறம் அவர்கள் தமது பங்காளிகள் மீது எத்தகைய அணுகுமுறையைக் கையாள்வார்கள் என்பது தெரியும். அப்படிப்பட்டவர்களுக்கு ''பு.ஜ.''வின் விமர்சன முறை பண்பாடுமிக்கதாகத் தெரியாததில் வியப்பில்லை.

''பு.ஜ.''வின் விமர்சன முறைக்கு மாறாக, சந்தர்ப்பவாதக் கட்சிகளுக்கும் தலைவர்களுக்கும் பின்னாலிருக்கிற வெகுமக்களைத் தமிழீழ விடுதலை ஆதரவு இயக்கத்தில் அணிதிரட்டவேண்டும் என்ற பொறுப்புணர்வோடு இந்த விமர்சனங்கள் முன் வைக்கப் படவேண்டும் என்று கருதுவதாக தியாகு எழுதுகிறார். தாமே செய்யாத வேலையைப் பொறுப்புணர்வோடு செய்ய வேண்டும் என்பது நல்ல வேடிக்கைதான்! அதைவிட நல்ல வேடிக்கை - இங்கே குறிப்பிடும் கட்சிகள், தலைவர்களுக்குப் பின்னாலிருக்கிற வெகு மக்களை இவர்கள் போய்தான் தமிழீழ விடுதலை ஆதரவு இயக்கத்தில் அணிதிரட்ட வேண்டும் என்ற பொறுப்புணர்வு பற்றிப் பேசுவது.

உண்மையில் ''பு.ஜ.''வுக்கும் தியாகு போன்றவர்களுக்கும் இடையிலே உள்ள வேறுபாடு விமர்சனமுறையில் மட்டுமல்ல, விமர்சன உள்ளடக்கத்திலேயே உள்ளது. இந்தக் கட்சிகள், தலைவர்களின் சந்தர்ப்பவாதத்துக்குள்ளும் தமக்கு உடன்பாடான கூறுகளைக் கண்டறிந்து, அவற்றுக்கு அழுத்தம் கொடுத்து நட்புப் பாராட்டி, அணிகளுக்கு அணுக்கமாகப் போய் ஆதரவு திரட்டுவது என்பதுதான் தியாகு போன்றவர்களின் அணுகுமுறை. சந்தர்ப்பவாதம் என்பதே இரண்டு கூறுகளைக் கொண்டிருப்பதுதான். அது எதிர்த்தரப்பின் நிலையில் இருந்துகொண்டு, நம் தரப்பின் நிலையில் இருப்பதைப் போன்ற மயக்கம் ஏற்படுத்துகிறது. இந்த இரட்டை நாடக நிலையை அம்பலப்படுத்தி மயக்கத்தைத் தெளிவிப்பதுதான் ''பு.ஜ.''வின் விமர்சன உள்ளடக்கம். இதற்கு நேரெதிரானது தியாகு போன்றவர்களின் விமர்சன உள்ளடக்கம். சந்தர்ப்பவாதத்தின் இரண்டு கூறுகளில் ஒன்று நமக்குச் சாதகமானதாகத் தோன்றும். அந்தக் கூறை உண்மைதானென்று மேலும் மயக்கம் கொள்ளும் வகையில் அந்த சந்தர்ப்பவாதக் கட்சிகள் - தலைவர்களிடம் நட்பும் சமரசமும் பாராட்டுவது அவர்களின் விமர்சன உள்ளடக்கம். இதுவே ஒரு சந்தர்ப்பவாதம்தான். ஓட்டுக் கட்சிகளின் சந்தர்ப்பவாதத்தைவிட மிக மோசமான சந்தர்ப்பவாதம். ஓட்டுக் கட்சிகளாவது தேர்தலுக்குத் தேர்தல் அணி சேர்க்கைகளை மாற்றிக் கொண்டு, அதை நியாயப்படுத்தும் போது அம்பலமாகிறார்கள். தியாகு போன்றவர்களின் சந்தர்ப்பவாதம் புரட்சிச் சவடால்களால் எப்போதும் மூடி மறைக்கப்பட்டு வருகிறது.

''பு.ஜ.''வின் விமர்சன முறை அதன் உள்ளடக்கத்தைத்தான் காட்டமான வடிவில் பிரதிபலிக்கிறது. தியாகு போன்றவர்களின் விமர்சன முறையும் அதன் உள்ளடக்கத்துக்குப் பொருத்தமாக சமரச வடிவில் பிரதிபலிக்கிறது. ஆனால் அதன் சமரசத் தன்மையை ''பொறுப்புணர்வு'' என்கிற போர்வையால் மூடிக் கொள்கின்றனர். அதே சமயம் தாம் நட்பும் சமரசமும் பாராட்டும் கட்சிகள், தலைவர்களிடம் காட்டமான தாக்குதல் தொடுக்கும் வகையில் இருப்பதால் ''பு.ஜ.'' விமர்சனத்தைக் கண்டு ஆத்திரமும் அடைகிறார்கள்.

தியாகு போன்றவர்கள் மட்டுமல்ல, புரட்

படிப்பகம்

www.padippakam.com

சிகர அணியைச் சேர்ந்தவர்களும், வேறு பலரும் கூட, ''பு.ஜ.வின் அரசியல் நிலைப்பாடுகள் சரியாகத்தான் இருக்கிறது; ஆனால் அவர்கள் எல்லோரையும் குறை சொல்லுகிறார்கள், தாங்கள் மட்டுமே எப்போதும் சரியாக இருப்பதுபோல எழுதுகிறார்கள். தோழமையுடன் விமர்சனம் செய்வதில்லை, காட்டமாக சாடித் திட்டும் பாணியில் அணுகுமுறை இருக்கிறது'' என்று கூறுகிறார்கள்.

ஆம், அப்படித்தான் ''பு.ஜ.''வின் நிலைப்பாடுகளும் விமர்சனங்களும் இருக்கின்றன. அதற்காக ''பு.ஜ.'' வருந்தவில்லை. அரசியல் - சித்தாந்த மேலாண்மையை நிறுவ விழையும் ஒரு இயக்கம் இப்படித்தான் இருக்க முடியும். ''இது முடிவல்ல, முற்றும் முழுதானதல்ல, ஒரு ஆரம்பம்தான். அறிமுகம்தான், தேடல்தான்'' என்கிறப் பீடிகையுடன் குட்டி முதலாளித்துவ அறிஞர்கள் ஒவ்வொரு ''படைப்பை''யும் முடிவுரையாக எழுதுகிறார்களே, அதுபோல புரட்சிகர அரசியல் இயக்கம் கூறிக் கொள்ள முடியாது. அவர்கள் அப்படிச் செய்வதும் பணிவோ, தன்னடக்கமோ கருதியதும் அல்ல; தன்னம்பிக்கையற்றதும் பொறுப்பிலிருந்து நழுவிக் கொள்வதும்தான். ஒரு அரசியல் - சித்தாந்த நிலைப்பாட்டை வைத்துப் போராடும் புரட்சிகர அமைப்பு, அதில் குறைபாடும் இருக்கலாம் என்று பீடிகையோடு பின்நவீனத்துவ அடிப்படையில் மற்றதுக்கு கரிசனைப் பட்டுக் கொண்டிருக்க முடியாது. ''பு.ஜ.''வின் நிலைப்பாடுகளுக்கு மாற்றோ, மறுப்போ வைக்க முடியாதபோது, ''பு.ஜ.''வின் விமர்சனங்களுக்கு பதிலளிக்க முடியாதபோது, ''இவர்கள் இப்படித்தான் எல்லோரையும் குறை சொல்வார்கள்'' என்று ஒதுக்குவதும் நடக்கிறது.

ஒரு விடயத்தில் உள்ளடக்கம்தான் அதன் வடிவத்தையும், அதன் சரி தவறையும் முதன்மையாகத் தீர்மானிக்கிறது. மாறாக, வடிவம் அந்த விடயத்தின் உள்ளடக்கத்தையோ அதன் சரி - தவறையோ தீர்மானிப்பதில்லை. அப்படி இருக்கும்போது ''பு.ஜ.''வின் நிலைப்பாடுகளையோ, விமர்சனங்களையோ பரிசீலிக்கும்போதெல்லாம் அவற்றின் வடிவம் / முறையையே தியாகுவும் மற்றவர்களும் முதன்மைப்படுத்துகிறார்கள். இந்த முதன்மைப்படுத்தப்பட்ட வடிவம் / முறையை அடிப்படையாகக் கொண்டு தமது வாதங்களைக் கட்டியெழுப்புகிறார்கள். இது அவர்களுடைய அரசியல், சித்தாந்த ஒட்டாண்டித்தனத்தையே வெளிப்படுத்துகிறது.

அடுத்து, எல்லா போலி கம்யூனிஸ்டுகள், திராவிடக் கட்சிகள், தலித்தியவாதிகள், தமிழினவாதிகள், போலி புரட்சியாளர்களைப் போலவே தாமும் அடிப்படையில் ஒரு மூல வியாதிக்காரர்தான் என்பதை தியாகு வெளிப்படுத்திக் கொண்டுள்ளார். இது என்ன மூல வியாதி என்கிறீர்களா? ''எங்களுடைய தந்திர உத்தியைத் தான் மாற்றியிருக்கிறோம், மூல உத்தியை மாற்றவில்லை, மூல உத்தியில் உறுதியாக இருக்கிறோம்'' என்று கூறி எல்லா வகையான சந்தர்ப்பவாதங்களுக்கும் நியாயம் கற்பிப்பதுதான் மூல வியாதி.

வைகோவும், இராமதாசும், கருணாநிதியும் பார்ப்பன - பனியா பா.ஜ.க.வுடன் கூட்டுச் சேரும்போது, ''மதச் சார்பின்மை என்ற எங்கள் அடிப்படைக் கொள்கையில் மாற்றமில்லை, இன்றைய தேவையான - நிலையான ஆட்சிக்காகத்தான் இந்தக் கூட்டு'' என்றார்கள். திருமாவளவன், மூப்பனார் - ஜெயலலிதாவுடன் கூட்டுச் சேரும்போது ''எங்கள் அடிப்படைக் கொள்கையில் மாற்றமில்லை, எங்கள்



**திராவிடக் கட்சிகள், போலி கம்யூனிஸ்டுகளின் வழியில் தியாகு எதிர்த்தரப்பினர் மீதே கூட ''மொன்னை''யான விமர்சனத்தை வைக்கும் பண்பாடு கொண்டவர். பின், அவர் தமது பங்காளிகள் மீது எத்தகைய அணுகுமுறையை மேற்கொள்வார் எனச் சொல்ல வேண்டியதில்லை. அப்படிப்பட்டவருக்கு பு.ஜ.வின் விமர்சன முறை வசைபாடுவதாகத்தான் தெரியும்.**

முக்கிய எதிரியான இராமதாசு - கருணாநிதியை வீழ்த்தவே இந்தக் கூட்டு'' என்றார். கிருஷ்ணசாமி கருணாநிதியுடன் கூட்டுச் சேர்ந்தபோதும், திருமாவளவன் அணிமாறிய போதும் இதையே புரட்டிப் போட்டுச் சொன்னார்கள். பா.ஜ.க.வுடன் கூட்டுச் சேர்ந்தபோதும் எதிரணிக்குப் போய் காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்தபோதும், பெரியார் - அண்ணா வகுத்த திராவிடக் கொள்கையே தனக்கு அடிப்படைக் கொள்கை என்றாலும் தீயசக்தியான கருணாநிதியை வீழ்த்துவதற்கே கூட்டணி அமைப்பதாக கூறுகிறார், ஜெயலலிதா.

போலி கம்யூனிஸ்டுகளும் போலி புரட்சியாளர்களும் கொஞ்சம் வித்தியாசமாக, சித்தாந்தபூர்வமாகத் தமது சந்தர்ப்பவாதத்துக்கு விளக்கம் தருகிறார்கள். ''எல்லாம் ஒரு டாக்டிக்ஸ் தோழரே'' என்று சொல்லுவது இவர்களது பாணி. ஜெயலலிதாவோடோ, கருணாநிதியோடோ இருவரையும் விட்டு விட்டு வைகோ போன்றவரோடோ கூட்டுச் சேரும்போதெல்லாம், அதை நியாயப்படுத்துவதற்கு போலி கம்யூனிஸ்டுகள் இப்படித்தான் சொல்லுகிறார்கள். ''நமது மூல உத்தியில் உறுதியாக இருக்கும் அதேசமயம், இன்றைய சூழ்நிலைக்கும் காலகட்டத்திற்கும், அதற்கு மாறான கூட்டு வைப்பது அவசியமான ஒரு டாக்டிக்ஸ் - தந்திர உத்தி தோழரே'' என்று கூறி நாற்காலி நலனுக்கான சந்தர்ப்பவாதத்தை போலி கம்யூனிஸ்டுகள் நியாயப்படுத்துவதுண்டு. ''அவசியமான போது மாசேதுங் தனது எதிரியான சியங்கே ஷேக்குடனும், ஸ்டாலின் ஏகாதிபத்திய அமெரிக்கா-பிரிட்டனுடனும் கூட்டுச் சேரவில்லையா?'' என்று கேட்டு வரலாற்று சாட்சியம் வேறு காட்டுகின்றனர்.

மாசேதுங்கும் ஸ்டாலினும் மூல உத்திகளை நிறைவேற்றிக் கொள்ள, முறையே சியாங்கே ஷேக்குடனும், அமெரிக்கா - பிரிட்டிசு ஏகாதிபத்தியங்களுடனும் கூட்டுச் சேர்ந்ததைப் போல, இவர்கள் நாற்காலி நலனுக்காகப் போடும் தந்திர உத்திக் கூட்டுக்கள் எவ்வாறு மூல உத்தியை நிறைவேற்றப் பயன்படுகின்றன? போலி கம்யூனிஸ்டுகளின் மூல உத்திக்கும் தந்திர உத்திக் கூட்டுகளுக்கும் என்ன உறவு? மாறிமாறி தந்திர உத்திக் கூட்டுகள் அமைப்பதே நிரந்தர அரசியல் நடவடிக்கையாகி விடும்போது மூல உத்தியே காணாமல் போய்விடுவதில்லையா?

போலி கம்யூனிஸ்டுகளைப் போலவே விடுதலைப் புலிகள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்களின் சந்தர்ப்பவாதங்களை எல்லாம் மூல உத்தி, தந்திர உத்தி அடிப்படையில் விளக்கி நியாயம் கற்பிப்பதற்கு தியாகு முயன்றுள்ளார். ''ஆள்வது யாராயினும், ஆட்சி புரிவது எந்தக் கட்சி அல்லது கூட்டணி ஆயினும் இந்திய அரசு அன்று முதல் இன்று வரை தமிழீழ விடுதலைக்கு எதிரானதே என்பதில் எவ்வித ஐயமில்லை. மூலவுத்தி வகையில் இந்த அடிப்படை உண்மையைக் கருத்தில் கொண்டாக வேண்டும். அதேபோது ஆட்சியில் இருப்பவர்கள் அவ்வப்போது எடுக்கும் நிலைப்பாடுகளில் போராட்டத்துக்கு ஆதரவான கூறுகளே இருக்கக் கூடாது என்பதில்லை. ஏனென்றால், ஒரே ஒரு முரண்பாடு மட்டும் களத்தில் இல்லை. பல்வேறு முரண்பாடுகள் ஒட்டியும் வெட்டியும் செயல்படுகின்றன. இலங்கை அரசுக்கு இந்தியப் பிரதமர் எச்சரிக்கை விடுப்பதை எடுத்துக்காட்டி இலங்கை அரசைத் தனிமைப்படுத்தித் தாக்கு

www.padippakam.com

வதில் எந்தத் தவறுமில்லை. இதற்காக இந்தியப் பிரதமரின் கருத்துக்கு நாம் வழங்குவது தந்திரவுத்தி வகைப்பட்ட ஆதரவே ஆகும்'' என்று புலிகள் ஆதரவு ஒருங்கிணைப்பாளர் நெடுமாறன் இந்தியப் பிரதமரின் கருத்தை ஆதரித்துப் பேசியுள்ளார் என்று தியாகு விளக்கமளிக்கிறார்.

''இந்த ஆதரவும், ஏனைய வகைகளில் தமிழீழ விடுதலைக்கெதிராக இந்திய அரசு செயல்பட்டு வருவதற்கு நாம் காட்டும் எதிர்ப்பும் ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல. இந்த ஆதரவும் இந்த எதிர்ப்பும் ஒரே அணுகுமுறையின் இரு கூறுகள்தான் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.''



ஈழப் பிரச்சினையைக் கையாள்வதில் சோனியா - வாஜ்பாயிக்கு இடையே என்ன வேறுபாட்டைக் காணுகிறது தமிழ்த் தேசம்?

''இந்திய அரசின் அடிப்படைக் கொள்கை தமிழீழ விடுதலைக்கு எதிர்ப்பு - மாறாமல் நீடிக்கும்போதே ஆட்சிகளின் அணுகுமுறையில் மாற்றம் வரமுடியும். தலைவர்களின் அணுகுமுறையில் மாற்றம் வர முடியும். இந்த மாற்றங்களை அலட்சியப்படுத்துவதோ, கண்டு கொள்ளாமல் விடுவதோ சரியான அரசியல் உத்தியாகாது'' என்று வகுப்பு நடத்துகிறார், தியாகு. அவருடைய இந்த விளக்கத்தின் பொருள் என்ன?

ஆள்வது யாராயினும், ஆட்சி புரிவது எந்தக் கட்சி அல்லது கூட்டணி ஆயினும் எப்போதும் தமிழீழ விடுதலையை எதிர்ப்பது இந்திய அரசின் மூல உத்தி வகையில் உள்ளது; அதேசமயம் ஆட்சிகள் - தலைவர்களின் அணுகுமுறை மாற்றம் காரணமாக இந்திய அரசு, தந்திரவுத்தி வகையில் தமிழீழ விடுதலைக்கு ஆதரவானதாக இருக்கிறது. அதேபோல விடுதலைப் புலிகள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் மூலவுத்தி வகையில் இந்திய அரசை எதிர்ப்பதாக இருக்கும் அதேசமயம், இந்திய ஆட்சியாளர்கள் - தலைவர்களின் அணுகுமுறை மாற்றத்திற்கேற்ப இவர்களை ஆதரிப்பது தந்திரவுத்தியாக இருக்கிறது என்று தந்திரமாக விளக்குகிறார், தியாகு. அதாவது மூலவுத்தி வகையில் எதிரெதிரான நிலையில் உள்ள இரண்டு தரப்பினர் தந்திரவுத்தி வகையில் ஒருவரை ஒருவர் ஆதரிப்பதாகக் கூறுகிறார். விடாகண்டன் கொடாக் கண்டன் பாணியில் தந்திரவுத்திகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் யாருடைய தந்திரவுத்தி, யாருடைய மூலவுத்திக்குப் பயன்படுகிறது என்பதுதான் கேள்வி.

பொதுவில் இந்திய ஆட்சியாளர்கள் எடுக்கும் நிலையில் மட்டுமில்லை; குறிப்பாக பரிசீலனையில் உள்ள, கடந்த ஆண்டு வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணி ஆட்சி எடுத்த முடிவில் நெடுமாறன், வைகோ, இராமதாசு வகையறாக்கள் ஆதரிக்குமாறு தமிழீழ விடுதலைக் கூறு என்ன இருக்கிறது என்பதுதான் பிரச்சினை. இதைத் தான் ''பு.ஜ.'' விமர்சித்திருந்தது. வாஜ்பாய் அரசின் இந்த முடிவில் தமிழீழ ஆதரவுக் கூறு இருப்பதாக தியாகு போன்றவர்கள் கூறுகின்றனர். இதே முடிவை சோனியா, அத்வானி, வாழப்பாடி, ஜெயலலிதா முதல் ''சோ''வரையிலான தமிழீழத்தின் கடும் எதிர்ப்பாளர்கள் கூட வரவேற்று ஆதரித்துள்ளனர். தியாகு வகையறாக்கள் செய்வதுபோல, கூறுவாரியாகப் பிரித்தா சோனியா, சோ போன்றவர்கள் ஆதரித்தனர்? அந்த முடிவு முழுக்கவும் தமக்கு உடன்பாடானது என்பதற்காகத் தானே ஆதரித்தனர். வாஜ்பாய் அரசின் அந்த முடிவை தியாகு வகையறாக்கள் ஆதரிப்பதற்கு காரணமாகக் கூறும் ''இலங்கைக்கு இந்திய இராணுவத்தை அனுப்புவதில்லை'' என்ற கூறு தமிழீழத்தின் கடும் எதிர்ப்பாளர்களுக்கும் உடன்பாடானதுதான். ஏனெனில் இதுவே இந்திய ஆளும் வர்க்கத்தின் தந்திரவுத்தி வகையிலான பொய்யாகும் என்பதால்தான் ஆதரிக்கின்றனர்.

அதேபோல இலங்கை அரசை இந்தியப் பிரதமர் எச்சரிப்பதும் கூட, இலங்கை அரசை மிரட்டித் தனது மூலவுத்திக்கு ஏற்பப் பணிய வைப்பதுதானே தவிர, தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவான நிலை என்பதும் பொய்யானது. கடந்த காலத்தில் கூட இந்திராவும், ராஜீவும் இலங்கை அரசை எச்சரித்தனர். விமானம் மூலம் உணவுப் பொட்டலங்கள் போட்டது ராஜீவ் அரசு. போராளி அமைப்புகளுக்குப் புகலிடமும், ஆயுதப் பயிற்சியும், ஆயுதங்களும், நிதி உதவியும் அளித்தனர். ஆனால் அதேசமயம் இலங்கை - ஈழ ஆக்கிரமிப்புக்குத் திட்டமிட்டுக் கொண்டிருந்தனர். இப்போதும் வாஜ்பாய் கூட இலங்கை அரசை எச்சரித்துக் கொண்டே, இலங்கைக்கு இந்திய இராணுவத்தை அனுப்புவதில்லை என்று தீர்மானம் போட்டுக் கொண்டே, அந்த அரசுக்கு நிதி உதவியும், இராணுவத் தலையீட்டுக்குத் தயாரிப்பும் செய்து வந்துள்ளார்.

ஓட்டுக் கட்சிகளும் ஆட்சியாளர்களாக உள்ள அவற்றின் தலைவர்களும் தரும் வாக்குறுதிகள், பேச்சுக்களையும் தீர்மானங்களையும் உண்மையானவையென்று பரந்துபட்ட மக்களே நம்புவதில்லை. ஆனால் அவற்றில் தமக்குச் சாதகமான கூறுகளைத் தேடி ஆதரிப்பதன் மூலம், வெகு மக்களைத் தெளிவிப்பதாக புலிகளின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர். இப்படிச் செய்வது தந்திரவுத்தி வகையிலான ஆதரவுதான் என்கின்றனர். அப்படியானால், பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கூட்டணி ஆட்சியின் கீழ், சிறுபான்மை இசுலாமிய இனத்தவர்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் என்கின்றனரே, அதுகூட தந்திரவுத்தி வகையில் உண்மையா? ஜெயலலிதா கூட அடிக்கடி தமிழர் உரிமை - நலன்களுக்குக் குரல் கொடுக்கிறார். அதற்காகத்தான் முன்பு வாஜ்பாயி அரசுக்கு நிர்ப்பந்தங்கள் தருவதாகச் சொன்னார். இதையும் கூட உண்மைதானென்று நம்பி, தந்திரவுத்தி வகையில் ஆதக்க முடியுமா?

**தியாகு போன்ற தமிழினவாதிகள், தலித்தியவாதிகள், போலி கம்யூனிஸ்டுகள், போலி புரட்சியாளர்கள் ஆகிய அனைவருமே தமது எல்லா சந்தர்ப்பவாதங்களையும் மூல உத்தி, தந்திர உத்தி என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி மறைத்து விடுகின்றனர்.**

அதனால்தான் சொல்கிறோம் மூலவுத்தி, தந்திரவுத்தி என்கிற பெயரில் தியாகு போன்ற தமிழினவாதிகள், தலித்தியவாதிகள், போலி கம்யூனிஸ்டுகள், போலி புரட்சியாளர்கள் ஆகிய அனைவருமே தமது எல்லா சந்தர்ப்பவாதங்களுக்கும் நியாயம் கற்பிக்கின்றனர். உண்மையில் பெரியாரியம், அம்பேத்கரியம், மார்க்சியம் இவர்களின் சித்தாந்தம் கிடையாது. சந்தர்ப்பவாதம்தான் இவர்களின் சித்தாந்தமாக உள்ளது.

— தொடரும்

# முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம்.

1960-களின் ஆரம்பத்தில் சர்வதேசப் பொதுவுடைமை இயக்கத்தில் மாபெரும் பிளவு ஏற்பட்டது. சோவியத் ஒன்றியத்தின் கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது மற்றும் 22-வது கட்சிப் பேராயத்தின் முடிவுகளை ஏற்பது அல்லது அவை திருத்தல்வாதங்கள் என்று நிராகரிப்பது என்கிற அடிப்படையில்தான் அந்தப் பிளவு அமைந்தது. உலகின் பெரும்பாலான கம்யூனிஸ்டு கட்சிகள் சோவியத் ஒன்றியக் கட்சியின் நிலையை ஆதரித்தன. சிறு எண்ணிக்கையிலான கட்சிகளே சீனா - அல்பேனிய நிலையை ஆதரித்தன என்பது உண்மைதான். ஆனால் சோவியத் ஒன்றியத்தின் நிலையை ஆதரித்த கட்சிகள் எல்லாம் பின்னாளில் சோவியத் ஒன்றியத்தின் தொங்குசதை நாடுகளாகிய கிழக்கு ஐரோப்பா, மற்றும் ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்தவையோடு ஆசிய, ஆப்பிரிக்க, தென் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த திருத்தல்வாதப் பாரம்பரியம் கொண்டவை.

அப்போது ஒன்றுபட்டிருந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (சி.பி.ஐ)யின் தலைமையும் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டு கட்சியின் நிலையை ஆதரித்தது. சி.பி.ஐ. கட்சியின் தலைமை திருத்தல்வாதத் தன்மை உடையது என்பதற்காகத்தான் அதிலிருந்து பிரிந்துபோய் ஒரு பிரிவினர் சி.பி.(எம்) எனும் புதிய கட்சியையும் திட்டத்தையும் அமைத்துக் கொண்டனர். இவ்வாறு தனிக்கட்சியாக அமைந்த பின்னர், சி.பி.ஐ. உடனான தனது உறவை முறித்துக் கொண்ட சி.பி.(எம்) தலைமை, சோவியத் ஒன்றியம் மற்றும் பிற முன்னாள் சோசலிச நாடுகளின் ஆளும் கம்யூனிஸ்டு கட்சிகளுடனான உறவைத் துண்டித்துக் கொள்ளவில்லை. இந்தக் கட்சிகளுக்கு வெகுகாலம் முன்பிருந்தே திருத்தல்வாதத்தைக் கடைபிடித்து வந்த இத்தாலி, பிரான்சு, ஜெர்மனி, ஜப்பான் போன்ற ஏகாதிபத்திய - முதலாளித்துவ நாடுகளின் கம்யூனிஸ்டு கட்சிகளுடனான உறவையும் சி.பி.(எம்) கட்சி துண்டித்துக் கொள்ளவில்லை. சோவியத் ஒன்றிய கம்யூனிஸ்டு தலைமையைப் பின்பற்றி உலகத் திருத்தவாதக் கட்சிகள் அனைத்தும் சி.பி.ஐ.-யைத்தான் அங்கீகரித்து அதிகாரபூர்வ உறவு வைத்துக் கொண்டன. ஆனாலும் இந்தத் திருத்தல்வாதக் கட்சிகளுடன் தோழமை பாராட்டி அதிகாரபூர்வ உறவை நிறுவிக் கொள்வதற்கே சி.பி.(எம்) கட்சி முயன்று வந்தது.

1975-77 ஆண்டுகளில் இந்திரா பிரகடனம் செய்த பாசிச அவசரகால ஆட்சியை சோவியத் ஒன்றியத்தின் வழிகாட்டுதல் படி ஆதரித்த சி.பி.ஐ. அடுத்து வந்த தேர்தல்களில் படுதோல்வி அடைந்தது; அதன் பிறகு பிளவுபட்டு மேலும் பலவீனமடைந்தது. இந்தத் தேர்தல்களில் ஜனதாவுடன் கூட்டணி சேர்ந்து மேற்கு வங்கம், திரிபுரா, கேரளாவில் வெற்றி பெற்ற சி.பி.(எம்), சி.பி.ஐ. கட்சியை விட வலுவானது என்று தெரிய வந்தது; அதன்பிறகு அம்மூன்று மாநிலங்களில் சி.பி.(எம்) தலைமையிலான கூட்டணி ஆட்சியைப் பிடித்தது. இந்தக் காரணங்களால் சோவியத் ஒன்றியம், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் மற்றும் பிற ஏகாதிபத்திய - முதலாளிய நாடுகளின் கம்யூனிஸ்டு கட்சிகள் சி.பி.ஐ.யோடு, சி.பி.(எம்) கட்சியையும் அங்கீகரித்து, அதிகாரபூர்வ உறவு ஏற்படுத்திக் கொண்டன. இவ்வாறு உலகத் திருத்தல்வாதக் கட்சிகளுடன் சி.பி.(எம்) கட்சி அதிகாரபூர்வ உறவை நிறுவிக் கொண்டதில் இருந்தே, தானும் அவர்களின் திருத்தல்வாதப் பாதையைக் கடைபிடிப்பதைக் காட்டிக் கொண்டது. இந்தத் திருத்தல்வாதக் கட்சிகளின் போராயங்கள், மாநாடுகளுக்குத் தனது பிரதிநிதிகளை அனுப்பியதோடு, தனது கட்சி போராயங்கள், மாநாடுகளுக்கு அவர்களின் பிரதிநிதிகளை வரவேற்று மரியாதை காட்டினர்.

அதேசமயம் சீனா, அல்பேனியா மற்றும் உலகம் முழுவதும் இருந்த மார்க்சிய - லெனினிய அமைப்புகளை சி.பி.(எம்) வசைபாடத் தொடங்கியது. இந்த அமைப்புகள் பற்றிய சோவியத் ஒன்றியத் திருத்தல்வாதிகளின் அவதூறுகளை அப்படியே ஏற்றுக் கொண்டது. மார்க்சிய - லெனினிய அமைப்புகளை எல்லாம் இடது சந்தர்ப்பவாத-தீவிரவாதக் குழுக்கள் என்றும், அமெரிக்க ஏகாதிபத்திய ஏஜெண்டுகள் என்றும் எவ்வித ஆதாரமும் இல்லாமல் புளுகியது.


இதற்குக் காரணம், சி.பி.(எம்) கட்சி நிறுவப்பட்ட சில ஆண்டுகளிலேயே, அதுவும் சி.பி.ஐ.யின் திருத்தல்வாதத்தை, புரட்சிச் சவடால்களுடன் பின்பற்றுவதைக் கண்டு கொண்ட புரட்சியாளர்கள் கட்சித் தலைமைக்கெதிராக சித்தாந்தப் போராட்டங்களைத் தொடுத்தனர்; புரட்சிகர அணிகள் கலகம் செய்தனர். இவர்களையெல்லாம் சி.ஐ.ஏ. ஏஜெண்டுகள் என்றும் சீர்குலைவு - குழப்பவாதிகள் என்றும் முத்திரை குத்தி சி.பி.(எம்) வெளியேற்றியது.

சி.பி.(எம்) தலைமையால் வெளியேற்றப்பட்ட அணிகளும், சி.பி.(எம்) தலைமைக்கெதிராக் கலகம் செய்து வெளியேறிய அணிகளும் இணைந்து தங்களுக்கென மார்க்சிய - லெனினிய அமைப்புகளை நிறுவிக் கொண்டு புரட்சிகர இயக்கத்தைத் தொடங்கியதை சீனா, அல்பேனியக் கம்யூனிஸ்டு கட்சிகளும், உலகெங்கும் உள்ள மார்க்சிய - லெனினிய அமைப்புகளும் வரவேற்றன. சி.பி.(எம்) கட்சியின் திருத்தல்வாதத்தை எதிர்த்தன. இதனால் சி.பி.(எம்) கட்சியின் புரட்சி வேடம் கலைந்து, உலகத் திருத்தல்வாதக் கம்யூனிசக் கட்சிகளுடன் முழுமையாக இனங்காட்டிக் கொண்டது.

திருத்தல்வாத விபச்சாரிகளான ஏகாதிபத்திய - முதலாளித்துவ நாடுகளின் சட்டபூர்வ கம்யூனிஸ்டு கட்சிகள், நாடாளுமன்றப் புதைசேற்றில் முழுமையாக மூழ்கிப் போனவை. இந்தக் கட்சிகள் நாடாளுமன்றத் தேர்தல்களிலோ உள்ளூராட்சித் தேர்தல்களிலோ சிறு வெற்றியடைந்தால் கூட, அங்கெல்லாம் கம்யூனிசம் மாபெரும் வெற்றியடைந்து விட்டதென்று புளுகி, சி.பி.(எம்) பெருமையடித்துக் கொண்டது.

ஏகாதிபத்திய - முதலாளிய நாடுகளில் உள்ள இந்தக் கம்யூனிஸ்டு கட்சிகள் லெனின், ஸ்டாலின் காலத்தில் இருந்தே திருத்தல்வாதக் கொள்கையைப் பின்பற்றி வந்தன.

**ருசிய அதிபர் புட்டினும், இந்தியப் பிரதமர் வாஜ்பாயியும் இராணுவ ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதைக் கூட, அமெரிக்கா ஏகாதிபத்திய எதிர்ப்பாகக் காட்டி வரவேற்கிறது, சி.பி.எம்.**



அதனால் லெனின், ஸ்டாலினுடைய கடும் விமர்சனத்துக்கு இலக்காகி இருந்தன. இரண்டாம் உலகப் போர் நெருக்கடியைப் பயன்படுத்தித் தமது நாடுகளில் புரட்சி செய்து ஆட்சியைப் பிடிப்பதற்கான வாய்ப்புகள் இருந்தபோதும், கோழைத்தன மான முறையில் முதலாளித்துவ ஜனநாயகக் கட்சிகளிடம் சரணடைந்தன. அவர்கள் அதி காரத்தைக் கைப்பற்றுவதற்குத் தாமே முன்வந்து உதவின.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, கம்யூனிச அபாயம் பரவுவதைத் தடுப்பது என்கிற பெயரில், மொகார்த்தியிசம் என்ற கம்யூனிச எதிர்ப்பு பயங்கரவாதத்தைக் கட்ட விழ்த்துவிட்டது, அமெரிக்கா. உலகம் முழு வதும்; குறிப்பாக அமெரிக்காவில் கம்யூ னிஸ்டுகளும் அவர்களின் ஆதரவாளர் களும் வேட்டையாடப்பட்டனர். சோசலிச நாடுகளை முற்றுகையிடும் நோக்கத்தோடு மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் சேர்ந்து, ''நேட்டோ'' என்னும் இராணுவக் கூட்ட மைப்பை அமெரிக்கா ஏற்படுத்தியது. இவற் றுக்கெல்லாம் பதிலடி கொடுப்பதற்குப் பதில், ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்து கொண்டு சமாதான சகவாழ்வை ஏற்படுத்திக் கொள்ளும்படி சோவியத் ஒன்றியம் மற்றும் பிற சோசலிச நாடுகளுக்கு ''உபதேசம்'' செய்தன, ஏகாதிபத்திய - முதலாளித்துவ நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகள்.

ஸ்டாலின் மறைவிற்குப் பிறகு சோவியத் ஒன்றியத்தில் கட்சி மற்றும் அரசு அதிகாரத்தை குருச்சேவ் கும்பல் கைப்பற்றி யதையும், அதைத் தொடர்ந்து சோவியத் ஒன்றியக் கம்யூனிசக் கட்சியின் 20-வது மற்றும் 22-வது கட்சிக் காங்கிரசில் நிறை வேற்றப்பட்ட திருத்தல்வாதத் தீர்மானங் களையும் அவை பாராட்டி வரவேற்றன. குறிப்பாக, ஸ்டாலினுக்கு எதிராக குருச்சேவ் கும்பல் வெளியிட்ட அவதூறுப் பிரச்சாரங் களைத் தீவிரமாக ஆதரிப்பதில் ஏகாதிபத்தி யவாதிகளுடன் போட்டி போட்டன. இதன் மூலம் கம்யூனிசத்திற்கும் ஸ்டாலினுக்கும் எதிராக ஏகாதிபத்தியங்கள் கட்டவிழ்த்து விட்ட அவதூறுகள் உண்மைதானென்று உலக மக்களிடையே அவதூறு பரப்புவதற்கு ஏகாதிபத்திய - முதலாளித்துவ நாடுகளின் திருத்தல்வாத கம்யூனிஸ்டு கட்சிகள் துணை நின்றன. இதன் தொடர்ச்சியாக, லெனினுக்கு எதிரான அவதூறுகளையும் ஏற்று அங்கீகரித் தன.

1970-களில் இத்தாலி, பிரான்சு, ஜப்பான் முதலிய ஏகாதிபத்திய நாடுகளின் சட்டபூர்வக் கம்யூனிஸ்டு கட்சிகள் லெனினி சத்தைக் கைவிடுவதாக அறிவித்தன. லெனி னிசமும் அவரது போல்ஷ்விசமும் தான் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்னும் கொடிய அடக்குமுறைத் தன்மையை மார்க்சி யத்தில் கலந்துவிட்டன; எனவே, அவற்றைத் தாம் நிராகரிப்பதாகவும், அவற்றைவிட முத லாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகமே மேலானது என்றும் அறிவித்தன. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவது இனி மேலும் தமது இலட்சியமல்ல என்று பிரக டனம் செய்தன.

இவை அனைத்தும் திரிபுவாதங்கள்; குறிப்பாக, ஸ்டாலின் - லெனின் ஆகியோ ருக்கு எதிரான அவதூறுகள் முற்றிலும் தவ றானவை என்று எதிர்த்து அறிக்கைகள், ஆவ ணங்கள் வெளியிட்ட சி.பி.(எம்) கட்சி, இத்திரிபுவாதங்களை ஏற்றுப் பரப்பிய கட்சி களுடன் நல்லுறவு கொண்டு இவற்றையும் உலகக் கம்யூனிச இயக்கத்தின் ஒரு அங்க மாகக் கருதியது. அதேசமயம், இந்தத் திருத் தல்வாதங்களை எதிர்த்துக் கடுமையாகப் போராடிய மார்க்சிய - லெனினிய அமைப் புகளுக்கு எதிராக அவதூறுகள் பரப்புவதில் முன்னின்றது.

''குருச்சேவ், அவருக்குப் பிறகு பிரஷ்நேவ் கொண்டு வந்த சீர்திருத்தங்கள் கூட போதா. இவையும் கூட கம்யூனிசசர்வா



**அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற போர்வையில் 'மார்க்சிஸ்டு'களால் ஆதரிக்கப்பட்ட இனவெறி பாசிஸ்டும், கம்யூனிச துரோகியுமான மிலோசெவிச்.**

திகாரத் தன்மை உடையவைகள்தாம். சோவியத் ஒன்றியத்தில் இன்னமும் ஜனநா யகமும், சுதந்திரமும் முழுமையாக கொண்டு வரப்படவில்லை'' என்று ஏகாதிபத்தியங்கள் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வந்தன. சமூக ஏகாதிபத்தியமாகவும், மேல்நிலை வல்லரசா கவும் மாறி, உலக மேலாதிக்கத்துக்கான போட்டியாளனாக உள்ள சோவியத் ஒன்றி யத்தை முறியடிக்க அமெரிக்க மேல்நிலை வல்லரசு செய்து வந்த பிரச்சாரம்தான் இவை. மேலும் மூன்றாம் உலகப் போருக்கான இரா ணுவத் தயாரிப்பில் ஈடுபட்டுக் கொண்டே, ''படைக்குறைப்பு - ஆயுதக் குறைப்பு'', ''அணு ஆயுத வரையறுப்பு - நட்சத்திரப் போர்த்தடுப்பு'' போன்ற அமெரிக்காவுக்கு எதிரான சமாதான பிரச்சாரத்தில் சோவியத் ஒன்றியம் தீவிரம் காட்டியது. இதை முறிய டிக்கும் முயற்சியாக சோவியத் ஒன்றியத்தில் ஸ்டாலினிசம் திரும்பி விட்டதாக முத்திரை குத்தி, கம்யூனிச எதிர்ப்புப் பிரச்சாரத்தில் அமெரிக்காவும் தீவிரம் காட்டியது. இந்த விவகாரத்தில் சி.பி.(எம்) கட்சியோ, எல்லாம் ஏகாதிபத்திய அவதூறுகள் - சதிகள் என்று கூறி சோவியத் ஒன்றியத்தின் தலை மையை ஆதரித்தது. ஏகாதிபத்திய - முதலா ளிய நாடுகளின் கம்யூனிஸ்டு கட்சிகளோ சோவியத் ஒன்றியத்தில் ஸ்டாலினிசம் இன்னமும் நீடித்திருப்பதாக அமெரிக் காவின் பிரச்சார நிலையை எடுத்தன. இருந் தபோதும் சி.பி.(எம்). அந்தக் கட்சிகளை எதிர்க்கவில்லை. அவற்றுடன் தோழமை உறவு பாராட்டியது.

சோவியத் ஒன்றியத்தில் கோர்பச்சேவ் கும்பல் ஆட்சியைப் பிடித்த பிறகு, ''கிளாஸ்நாஸ்த்'' மற்றும் ''பிராஸ்த் ரோய்க்கா''வைப் புகுத்தினார். இவை ஸ்டா லினிய அதிகார வர்க்க முறைக்கு எதிரான சீர்திருத்தங்கள் என்றார். இந்தச் சீர்திருத்தங் களை ஏகாதிபத்திய - முதலாளிய அரசுகள் மட்டுமல்ல; அந்நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சி களும் வரவேற்றன. சோவியத் ஒன்றியம் மற்றும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் கட்டுப்படுத்தப்பட்ட அதிகார வர்க்க சந்தையை மேற்கு ஏகாதிபத்திய மூலதனத் துக்கும், நுகர் பொருள்களுக்கும் படிப்படி யாகத் திறந்து விடுவதுதான் கோர்பியின் சீர்திருத்தங்கள். இந்தச் சீர்திருத்தங்களை முழுமையாகச் செயல்படுத்த சோவியத் ஒன்றியத்தின் ஸ்டாலினிசவாதிகள் தடை போடுவதாகப் பிரச்சாரம் செய்தன, மேற்கு ஏகாதிபத்தியங்கள். இதே கருத்தை அந்நாடு களின் கம்யூனிஸ்டு கட்சிகள் பிரதிபலித்தன. அப்போதும் சி.பி.(எம்) கட்சி அதை எதிர்க் கவில்லை. அதேசமயம் கோர்பியின் சீர்திருத் தங்களை வரவேற்றது.

இறுதியாக, கோர்பச்சேவும் யெல்த்சினும் கூட்டுச் சேர்ந்து அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பு மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றினர். இதற்கு எதிராக, நாடாளுமன் றத்தில் பெரும்பான்மையைப் பெற்றிருந்த சோவியத் ஒன்றியத் திருத்தல்வாத கம்யூ னிஸ்டு கட்சி கெனடி யானயேவ் தலை மையில் மீண்டும் ஒரு அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பு மூலம் ஆட்சியைக் கைப்பற்ற முயன்றது. இந்த முயற்சி இராணுவத்தின் தலையீட்டோடு முறியடிக்கப்பட்டு, சோவியத் ஒன்றியமும், கம்யூனிஸ்டு கட்சியும் கலைக்கப்பட்டு, யெல்த்சினை அதி பராகக் கொண்ட ருசியக் குடியரசு தனியே நிறுவப்பட்டது. இதற்கு முன்னும் பின்னும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் அதிரடி ஆட்சிக் கவிழ்ப்புகள் நடந்தன. அவற்றில் சில நாடுகள் தேசிய இன அடிப்படையில் பிளவுபட்டுப் போயின. அந்நாடுகளில் அதிபர் அல்லது நாடாளுமன்றத் தேர்தல்கள் நடந்தன. அத்தேர்தல்கள் மூலம் சில நாடு களில் முதலாளிய சோசலிஸ்டுகளோ, முத லாளிய ஜனநாயகவாதிகளோ ஆட்சியைக் கைப்பற்றினர். இன்னும் சிலவற்றில் தொழி லாளர் கட்சி, சமூக ஜனநாயகக் கட்சி அல்லது உழைப்பாளர் கட்சி என்று பெயரை மாற்றிக் கொண்ட திருத்தல்வாதக் கம்யூனிஸ்டுகள் ஆட்சியைக் கைப்பற்றின. முன்னாள் சோவியத் ஒன்றியக் குடியரசுகளிலும்

www.padippakam.com

இதுவே நடந்தது. ருசியக் குடியரசில் திருத்தல்வாதக் கம்யூனிஸ்டுகள் மீண்டும் ஒன்று திரண்டு தேர்தல்கள் மூலம் அதிபர் பதவியைக் கைப்பற்ற மீண்டும் மீண்டும் முயன்று தோற்றுப் போயினர். ஆனால் அதிகாரமற்ற நாடாளுமன்றத்தில் பெரிய கட்சிக்குரிய இடத்தைக் கைப்பற்றியுள்ளனர்.

கிழக்கு ஐரோப்பாவில் இவ்வாறு மறு உருவாக்கம் பெற்ற திருத்தல்வாதக் கம்யூனிஸ்டு கட்சிகள் தேர்தல்களில் அடையும் சில வெற்றிகளை ''முன்னாள் சோசலிச நாடுகளில் மீண்டும் கம்யூனிசத்துக்கு வெற்றி!'' என்று சி.பி.(எம்) கட்சி கொண்டாடுகிறது. சி.பி.(எம்) கட்சியின் பார்வையில் சொல்வதென்றால் சோசலிச நிர்மாணத்தில் பாரிய தவறுகள் புரிந்து, ஏகாதிபத்தியவாதிகள் மீண்டும் முதலாளித்துவத்தை நிலைநாட்டி, உலகக் கம்யூனிச இயக்கத்துக்குப் பெரும் பின்னடைவு ஏற்படக் காரணமாக இருந்தவை, இந்த முன்னாள் சோவியத் ஒன்றியம் மற்றும் பிற சோசலிச நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகள்.



ஜியாங் ஜெமினுக்கு கியூபாவில் உற்சாக வரவேற்பு

மால்டோவா நாட்டில் கம்யூ. கட்சி அமோக வெற்றி

இத்தாலி நாடாளுமன்றத் தேர்தல் இடதுசாரிகளுக்கு வெற்றிவாய்ப்பு!

பாரிஸ் மேயர் தேர்தலில் சோஷலிஸ்ட் கட்சி வெற்றி

**கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் மறு உருவாக்கம் பெற்ற திருத்தல்வாத கம்யூனிஸ்டு கட்சிகள் தேர்தல்களில் அடையும் சில வெற்றிகளை, கம்யூனிசத்தின் வெற்றி எனக் கொண்டாடுகிறது, சி.பி.எம். இது, மீண்டும் ஒரு சோசலிசப் புரட்சியின்றி, நாடாளுமன்றத் தேர்தல் மூலம் பாட்டாளி வர்க்க ஆட்சி வந்து விடும் என்ற மாயையை உருவாக்குவது தவிர, வேறென்ன?**

அப்படிப்பட்ட கட்சிகளின் தேர்தல் வெற்றிகளையும் மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்கான முயற்சிகளையும் வாழ்த்தி வரவேற்பது என்றால், அவை தமது கடந்தகாலத் தவறுகளை உணர்ந்து திருத்திக் கொண்டு விட்டனவா? மீண்டும் ஒரு சோசலிசப் புரட்சியின்றி அதிபர் / நாடாளுமன்றத் தேர்தல்கள் மூலமாகவே மீண்டும் பாட்டாளிகளின் ஆட்சி வந்துவிடுமா? அப்படி ஆட்சிக்கு வந்தால் எப்படிப்பட்ட சமுதாய, பொருளாதார, அரசியல் அமைப்பை அவர்கள் நிறுவப் போகிறார்கள்?

ருசியக் குடியரசு நாட்டில் கோர்பச்சேவ் - யெல்த்சின் கும்பல் உருவாக்கி, நிலைநாட்டியுள்ள அதிபர் முறை, டூமா எனப்படும் நாடாளுமன்ற முறை, பல கட்சி அரசியல் அமைப்பு, சுதந்திரச் சந்தைப் பொருளாதார அமைப்பு ஆகியவற்றைத் தாம் மாற்றப்போவதில்லை என்று ருசிய சட்டப்பூர்வக் கம்யூனிஸ்டு கட்சி அறிவித்திருக்கிறது. கோர்பி - யெல்த்சின் ஆட்சிக் கவிழ்ப்புக்கு முந்தைய சமுதாய, அரசியல், பொருளாதார் அமைப்பை மீட்பதற்குத் தாம் ஒருபோதும் முயலப்போவதில்லை என்று இச்சட்டப்பூர்வ கம்யூனிஸ்டுகள் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்கள். இதையேதான் பிற முன்னாள் சோசலிச நாடுகளின் கம்யூனிஸ்டு கட்சிகளும் கூட அறிவித்திருக்கின்றன.

சி.பி.(எம்) கட்சியின் கணக்குப்படி ஏறக்குறைய் எழுபத்தைந்தாண்டு காலம், தலைமுறை தலைமுறையாகப் பாடுபட்டு, பல லட்சம் உயிர்களைத் தியாகம் செய்து உருவாக்கப்பட்ட ஒரு சோசலிச சமுதாயத்தின் வீழ்ச்சிக்கும், உலகக் கம்யூனிச இயக்கத்தின் பின்னடைவுக்கும் காரணமான கட்சி, அதற்கான பொறுப்பேற்று காரண - காரியங்களைப் பரிசீலித்துப் பாடங்கற்பது இல்லை. அதற்குப் பதிலாக, அந்த வீழ்ச்சி - பின்னடைவுக்குப் பிறகு கம்யூனிசத்தின் எதிரிகள் ஏற்படுத்தியுள்ள சமூக, பொருளாதார, அரசியல் அமைப்பை மாற்றமாட்டோம், அவற்றைப் பாதுகாப்போம் என்றால் இவர்கள் துரோகிகள் - எதிரிகளை விட மோசமானவர்கள் என்றல்லவா கருத வேண்டும். அப்படிக் கோரவும் இல்லை; எதிர்பார்க்கவும் இல்லை. அதற்கு மாறாக அத்துரோகிகளோடு தோழமை உறவுதான் பாராட்டுகிறார்கள், சி.பி.(எம்) கட்சியினர்.

காரணம், சி.பி.(எம்) கட்சியும் அத்தகைய பரிசீலனை செய்து பாடங்கற்றுக் கொள்ள விரும்பவில்லை. சோசலிசத்தின் வீழ்ச்சி, உலகக் கம்யூனிச இயக்கத்திற்கு ஏற்பட்ட பின்னடைவு, இந்தியாவில் அதன் தாக்கங்கள் ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, தனது கட்சித் திட்டத்தை மேம்படுத்துவது என்று தீர்மானம் போட்டு, எட்டு ஆண்டுகளுக்கு மேலாக தயாரிப்பு செய்து. மாநாடு கூட்டி சி.பி.எம். கட்சி எடுத்திருக்கும் முடிவுகள் கூட, அந்தக் கம்யூனிஸ்டு துரோகிகளின் நிலைதானே தவிர வேறில்லை. எனவேதான் எவ்வித மறுபரிசீலனையும் இல்லாது, ஏகாதிபத்திய - முதலாளிய நாடுகளின் கம்யூனிஸ்டு கட்சிகளைப் போலவே முன்னாள் சோசலிச நாடுகளில் மறுபிறப்பு எடுத்துள்ள கம்யூனிச துரோகக் கட்சிகளையும் அங்கீகரித்து, அதிகாரப்பூர்வ உறவை சி.பி.(எம்) கட்சி மேற்கொண்டுள்ளது.

இதைவிடக் கேவலமான சி.பி.எம் கட்சியின் நிலை என்னவென்றால், மிலோசவிச் போன்ற பாசிச - கம்யூனிச துரோகிகளையும் கூட ஆதரிக்கிறது. அதேபோன்று சோசலிசத்தை வீழ்த்திய கோர்பி - யெல்த்சினின் வாரிசான, ருசியாவின் புதிய ஆட்சியாளர் பாசிஸ்ட் புதினைக் கூட ஆதரிக்கிறது. புதினின் இந்திய வருகையையும், இந்திய - ருசிய இராணுவ ஒப்பந்தம் புதுப்பிக்கப்படுவதையும் வரவேற்றதுடன், முன்பு சோவியத் ஒன்றியத்தை எப்படி அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடாகச்சித்தரித்ததோ, அதைப் போலவே இன்றைய ஏகாதிபத்திய ருசியாவையும் கருதி சி.பி.(எம்) கட்சி ஆதரிக்கிறது.

— தொடரும்

www.padippakam.com

# உலகைக் குலுக்கிய உலகமய எதிர்ப்புப் போராட்டம்

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான், ரசியா, கனடா ஆகிய உலகின் தொழில்வளமிக்க 8 பணக்கார நாடுகளின் வருடாந்திர மாநாடு கடந்த ஜூலை 20-22 தேதிகளில் இத்தாலியின் துறைமுக நகரமான ஜெனோவில் நடந்தது. இம்மாநாட்டின்போது, உலகை மேலாதிக்கம் செய்து இந்நாடுகள் திணித்து வரும் உலகமயக் கொள்கையை எதிர்த்து, இதுவரை கண்டிராத வகையில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் திரண்டு மிகப்பெரிய ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர். ஈராண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவின் சியாட்டில் நகரில் தொடங்கிய உலகமய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், பிறகு செக் நாட்டின் பிராக் நகரிலும் கனடாவின் கியூபெக்கிலும் தொடர்ந்தது. அதைத் தொடர்ந்து இலண்டன் மாநகரில் மேநாள் எழுச்சி ஊர்வலமாகவும், அண்மையில் சுவீடனின் கோதன்பங்க் நகரில் ஆர்ப்பாட்டமாகவும் முன்னேறியது. அதன் தொடர்ச்சியாக இப்போது இத்தாலியில் நடந்த "ஜி-8" மாநாட்டின்போது ஏகாதிபத்திய உலகமே அஞ்சி நடுங்குமளவுக்கு மிகப் பெரிய ஆர்ப்பாட்டம் நடந்துள்ளது.


இந்த ஆர்ப்பாட்டத்தைத் தடுத்து நிறுத்தும் நோக்குடன், ஜெனோவா நகரில் 10,000-க்கும் மேற்பட்ட போலீசு - இராணுவத்தைக் குவித்தும், விமான நிலையம் - துறைமுகம் மற்றும் பிற முக்கியமான இடங்களில் ஏவுகணைகளை நிறுவியும், மாநாடு நடக்குமிடத்தைச் சுற்றி இரும்புக் கம்பி வேலி அமைத்தும், தடையுத்தரவு பிறப்பித்தும் இத்தாலி அரசு அச்சுறுத்தியது. எதிரி நாட்டுடன் போர் தொடுப்பதைப் போல, நகரமெங்கும் கவச வண்டிகளும் குண்டு துளைக்காத சீருடையுடன் அதிரடிப் படையும் குவிக்கப்பட்டு, மாநாட்டு அரங்கிலிருந்து ஒரு கி.மீ. தூரம் வரை ஈ - எறும்பு கூட நுழைய முடியாதபடி பாதுகாப்பு அரண்கள் நிறுவப்பட்டன. ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க பல நாடுகளிலிருந் தும் மக்கள் வந்து குவிவதைத் தடுக்க ஜெனோவா நகரை இணைக்கும் ரயில் மற்றும் பேருந்து போக்குவரத்துகள் நிறுத்தப்பட்டன. அண்டை நாடுகளுடனான இத்தாலியின் எல்லைப் புற வழிகள் அனைத்தும் மூடப்பட்டன. ஆர்ப்பாட்டக்காரர்களைக் கைது செய்து சிறையிலடைக்க முன் கூட்டியே சிறைகள் தயார்நிலையில் வைக்கப்பட்டன.

ஆனாலும் இத்தடைகள், அச்சுறுத்தல்களை மீறி தமது சொந்த செலவில் வாகனங்களை அமர்த்திக் கொண்டும் சைக்கிள்களிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் தொடர்ந்து ஜெனோவாவில் வந்து குவிந்தனர். மாநாட்டுக்கு இரு நாட்களுக்கு முன்பிருந்தே தொடங்கிய ஆர்ப்பாட்டங்கள், மாநாடு தொடங்கிய ஜூலை 20-ஆம் தேதியன்று உக்கிரமடைந்தன. "முதலாளித்துவம் ஒழிக", "உலகமயமாக்கல் ஒழிக, உலக மக்களை வறுமையில் தள்ளாதே!" என்று முழங்கிக் கொண்டு கம்பி வேலிகளை உடைத்துக் கொண்டு ஆர்ப்பாட்டம் முன்னேறியதும், போலீசார் தடியடி நடத்தி கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர். அதை எதிர்த்து ஆர்ப்பாட்டத்தினர் போலீசாருடன் வீதிகளில் வீரப்போர் புரியத் தொடங்கியதும், போலீசார் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் கார்லோ கியூலியானி என்ற 23 வயதான இளைஞர் கொல்லப்பட்டார். உலகமய எதிர்ப்புப் போரில் முதல் பலியாகித் தியாகியான அவரது நினைவை நெஞ்சிலேந்தி, "கொலைகார ஏகாதிபத்தியவாதிகள் ஒழிக!", "கொள்ளைக்காரர்களின் மாநாட்டை ரத்து செய்!" என்று முழங்கியபடியே ஆர்ப்பாட்டத்தினர் தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர். ஆர்ப்பாட்டம், தெருச் சண்டைகள், கண்ணாடி சன்னல்கள் உடைப்பு, கார்கள் எரிப்பு, தடியடி, கண்ணீர் புகை, துப்பாக்கிச் சூடு என ஒருபுறம் அடக்குமுறையும் மறுபுறம் போராட்டமுமாக ஜெனோவா நகரம் கொந்தளித்தது.

பாதுகாப்புப் படையினர் சூழக் கைதிகளைப் போல நின்று, ஒட்டி வைத்த புன்சிரிப்பை உதட்டில் ஏந்திக் கொண்டு பேட்டியளித்த ஜி.8 நாடுகளின் ஆட்சியாளர்கள் அனைவரும் உலகமய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை "ரௌடித்தனமான வன்முறை" என்றும், "சிறுகும்பலின் அராஜகம்" என்றும் கீழ்த்தரமாகச் சாடினர். கிறித்துவ தலைமைக் குருபீடமான வாடிகனின் குளுகுளு அறையிலிருந்து கொண்டு போப்பாண்டவர், உலகமய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை வன்மையாகக் கண்டித்து அறிக்கை வெளியிட்டார். ஆனால், உலகெங்குமுள்ள உழைக்கும் மக்கள் இவற்றை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. "தமது கைக்காசைச் செலவிட்டு, பல்வேறு நாடுகளிலிருந்து நெடுந்தொலைவு பயணம் செய்து, உணர்வோடு ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற மக்களை இப்படி இழிவுபடுத்துவது அநாகரீகமானது" என்று ஏகாதிபத்திய நாடுகளின் பிரபல நாளேடுகளே கண்டனம் தெரிவித்துத் தலையங்கம் தீட்டியுள்ளன.

உலகெங்கும் மக்களிடம் தனிமைப்பட்டுப் போயுள்ள மேலாதிக்கவாதிகள், பெருகிவரும் உலகமய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தமது ஏகாதிபத்திய சொர்க்க பூமியிலேயே தொடர்ந்து முன்னேறுவதைக் கண்டு அஞ்சி நடுங்குகின்றனர். சில சில்லறை சலுகைகளைக் காட்டிச் சாந்தப்படுத்தி, போராட்டங்களைத் திசைதிருப்பிவிடத் துடிக்கின்றனர். ஆனால், உலகமயமாக்கலுக்கு எதிரான போர் கொலைகார, கொள்ளைக்கார ஏகாதிபத்திய உலகம் அடித்து நொறுக்கப்படாதவரை ஒருக்காலும் ஓயாது.

போலீசாரால் கொடூரமாகத் தாக்கப்படும் ஆர்ப்பாட்டக்காரர். (உள்படம்) போராட்டத்தில் சுட்டுக் கொல்லப்பட்டுத் தியாகியான கார்லோ கியூலியானி.






Published and Owned by R. SHANMUGARAJ, 25, Arunachalam St., Jothiramalingam Nagar, Chennai - 600 083

PUTHIYA JANANAYAGAM
(TAMIL FORTNIGHTLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS
FOR INDIA UNDER NO. 42648/85
Regd. No. TN/Chief.PMG-544/2001


# இதுதான் இன்றைய இந்தியா



இந்தப் படத்தில் இருக்கும் பெண்ணின் பெயர் ரமா. இராசஸ்தானில் உள்ள ஜோகிவார் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர். பக்கத்தில் நிற்கும் முதியவர் மோதி, அவளின் தந்தை. சமீபத்தில் மோதி, தனது மகள் ரமாவை குஜராத்தைச் சேர்ந்த பணக்காரனுக்கு விற்று விட்டார். இந்த இரக்கமற்ற வியாபாரத்திற்குக் காரணம், அவரது பணத்தாசையல்ல. அவரது குடும்பத்தை இரக்கமற்றுப் பிடித்தாட்டி வரும் பட்டினி.

தனது குடும்பத்தின் பட்டினியை விரட்ட மோதி மகளை விற்றார்; தனது குடும்பத்தின் பட்டினியை விரட்ட குஜராத்துக்கு வேலை தேடிப் போன ஜோமியின் கணவர், அரைகுறைப் பட்டினியோடு வேலை செய்ததால் சுருண்டு விழுந்து செத்தார். சாப்பிடுவதற்கு ஒன்றும் கிடைக்காத சாந்தி, பூச்சி மருந்தைச் சாப்பிட்டு தற்கொலை செய்து கொண்டாள். இராசஸ்தானின் உதய்பூர் ம்ாவட்டத்தில் மட்டும் சாந்தியைப் போல் பட்டினியைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தற்கொலை செய்து கொண்டவர்கள் 3 பேர்; ஜோமியின் கணவனைப் போல பட்டினிக்குப் பலியானவர்களின் எண்ணிக்கை முப்பதைத் தொட்டு விட்டது.

மோதியின் மகளை விற்கச் சொல்லி, மோதிக்கு ஆலோசனை கூறியவன் ஒரு 'மனுச'த் தரகனாம். பட்டினியும், பஞ்சமும் பிடித்தாட்டும் இராசஸ்தான், சட்டீஸ்கர், குஜராத், மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம், ஒரிசா மாநிலங்களின் முதல்வர்கள் இந்தத் தரகனிடம் ஆலோசனை கேட்டிருந்தால், மாநிலங்களை விற்று விடலாம் எனக் கூறியிருப்பான். ''பஞ்சத்திற்காக மகளை விற்பதே அயோக்கியத்தனம் எனும் பொழுது, நாட்டை விற்பதா?'' என நீங்கள் ஆத்திரப்படலாம். ஆனால், ஆளுங்கும்பலோ, அதைத்தான் நாங்கள் பொருளாதார சீர்திருத்தம் என்ற பெயரில் செய்து கொண்டிருக்கிறோம் என எகத்தளமாகக் கூறிச் சிரிக்கிறார்கள்; இதன் மூலம்தான் வறுமையை, பஞ்சத்தை, பட்டினியை ஒழிக்க முடியும் என நமது காதில் பூ சுற்றுகிறார்கள்!




இதோ புது தில்லியில் நடந்த ''பட்டினியற்ற இந்தியாவை நோக்கி'' என்ற கருத்தரங்கு தான் இந்தப் படம். இதில் கலந்து கொண்ட வாஜ்பாயி, ''பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள் பட்டினியால் சுருண்டு கிடக்கும் இந்தியர்களின் எண்ணிக்கையைப் பெருமளவு குறைத்து விடுவோம்'' எனச் சபதம் போட்டிருக்கிறார்.

கடந்த ஐம்பதாண்டுகளில் எத்தனையோ ஐந்தாண்டுத் திட்டங்கள்; எத்தனையோ அரசாங்கங்கள்; எத்தனையோ வாக்குறுதிகள். எல்லாம் காற்றில் கரைந்து போனதே தவிர, வறுமை, பட்டினி, பஞ்சத்தால் பாதிக்கப்படும் இந்தியர்களின் எண்ணிக்கை குறைந்தபாடில்லை. இராசஸ்தானில் நடக்கும் பட்டினிச் சாவைத் தடுப்பதற்கு அரசிடம் ஒரு குண்டுமணி அரிசி கூடவா இல்லாமல் போய்விட்டது?

இந்திய உணவுக் கழகத்தின் கிட்டங்கிகள் அரிசி, கோதுமை மூட்டைகளால் நிரம்பி வழிகின்றன; அழுகியும் நாறுகின்றன. ஆனால், இராசஸ்தானின் ஜோகிவார் கிராம மக்களோ, ஒருவகை காட்டு இலையை தண்ணீரில் போட்டு வேக வைத்து, கசாயம் போலாக்கிக் குடித்துப் பட்டினிச் சாவைத் தள்ளிப் போடுகிறார்கள். பட்டினியால் இந்தியா கதறும் பொழுது, அந்நிய நாடுகளுக்கு அரிசியும் கோதுமையும் அடிமாட்டு விலையில் ஏற்றுமதியாகிறது. இப்படிப்பட்ட வக்கிரம் பிடித்த ஆட்சியிலா இந்தியாவில் பட்டினிச் சாவு குறைந்து விடும்?

2007-ஆம் ஆண்டுக்குள் பட்டினிச் சாவை ஒழித்து விடுவோம் என ஆளும் கும்பல் நாடகமாடுகிறது. அதற்குள் அவர்களையும், இந்த மோசடி ஜனநாயகத்தையும் நாம் ஒழித்துக் கட்ட வேண்டும். இல்லையென்றால், ஒருபுறம் பட்டினிச் சாவுகளும், மறுபுறம் கண் துடைப்பு கருத்தரங்குகளும் நடந்து கொண்டுதான் இருக்கும்.

• ○ •